# ஊர்காவற்றுறை
# புனித மரியாள் ஆலயத்தின்
# நூற்றாண்டுச் சிறப்பு மலர்




1895 - 1995

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறை
# புனித மரியாள் ஆலயத்தின்
# நூற்றாண்டுச் சிறப்பு மலர்



மலர்த் தொகுப்பு

எஸ். எம். யோசெவ்

**மார்கழி 1995**

வெயியீடு
Ceylon Printers - Colombo - 2.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காணிக்கை

✡✡✡✡✡✡✡✡✡✡✡✡✡

அன்பெனும் கொள்கலம் அரு நிதிச் சுரங்கம்
தன்னிகரில்லாத் தாய்மையின் வடிவம்
இனிய நம் அன்னை இயேசுவின் செல்வம்
மன்னுயிர் புரந்த மனுவேலன் மாதா
கன்னலின் இதயம் கனிந்த நம் தாயார்
விண்ணவர் போற்றும் விமலியின் பாதம்
மென் மலர் தொடுத்து இன்மனத்தோடே
நூற்றாண்டு நினைவாய்ச் சாற்றினோம் மாலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே


| | பக்கம் |
|---|---|
| காணிக்கை | 4 |
| என்னுரை | 5 |
| அணிந்துரை | 6 |
| யாழ் ஆயரின் வாழ்த்து | 7 |
| திருமலை - மட்டுநகர் ஆயரின் ஆசிச்செய்தி | 8 |
| கலாநிதி J. கமிலஸ் நிமலன் அடிகளாரின் வாழ்த்துச்செய்தி | 9 |
| முன்னாள் பங்குத் தந்தை வண. A. பிரான்சிஸ் குலாஸ் அடிகள் வாழ்த்துகிறார் | 10 |
| வரலாற்றுப் புகழ்மிக்க காவலூர் அன்றும் இன்றும் (எஸ். எம். ஜே.) | 11 |
| ஊர்காவற்றுறைப் பங்கு - தோற்றமும் வளர்ச்சியும் (விக்ரோறியா) | 16 |
| இடர் தீர்த்துக் காத்திடம்மா - (ஆசிரியர் அ. புவக்கீம்பிள்ளை) | 18 |
| காவலூரில் கத்தோலிக்க திருமறை வரலாற்றுக் கண்ணோட்டம் | 19 |
| நூற்றாண்டு விழாக்காணும் புனித மரியாள் ஆலயம் (செல்வி ஜசிந்தா சவிரிமுத்து) | 21 |
| கொட்டாஞ்சேனை சாந்தலூஷியா பேராலயத்தில் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா (அனுஷா.) | 23 |
| 175 ஆண்டு நிறைவைக்காணும் புனித அந்தோனியார் ஆலயம் (ஜே. எவ். ஜே) | 24 |
| வரலாற்றுப் பாதையில் புனித யாகப்பர் ஆலயம் (C. ஸ்ரனிஸ்லாஸ்) | 27 |
| 75 வருட நிறைவு கண்ட புனித வளன் ஆலயம் (எஸ். ஏ. ஞானரட்ணம்) | 28 |
| புனித அந்தோனியார் கல்லூரி - (பழைய மாணவன்) | 31 |
| காவலூர் ஆலயங்களின் இன்றைய நிலை - (கரம்பொனூரான்) | 33 |
| புனித மரியாள் மகளிர் பாடசாலையும், திருக்குடும்பக் கன்னியர் பணிகளும் - (திருமதி பிலோமினா ஸ்ரனிஸ்லாஸ்) | 35 |
| நீங்காத நினைவுக்குரிய நாயகன் | 36 |
| நினைவுகூருகின்றோம் | 36 |
| காவலூரைக் கைதூக்கிய கனவான்கள் - (காவலூரான்) | 37 |
| புரந்தருள்வாய் அம்மா தாயே - "யாழ் ஜெயம்" | 37 |
| ஊர்காவற்றுறையில் திருச்சிலுவைக் கன்னியரின் தியாகப்பணிகள் (ஓர் அபிமானி) | 38 |
| கலை வளர்த்த காவலூர்க் கலைஞர்கள் (J. F. ஜெகராஜசிங்கம்) | 39 |
| காவலூரின் குரு மணிகள் | 41 |
| காவலூர் தந்த ஆயர் திலகங்கள் | 43 |
| பெருமைப்படுகின்றோம் | 46 |
| இறைபணியில் காவலூர்க் கன்னிகா இரத்தினங்கள் | 47 |
| வரலாற்றுப்பாதையில்.............தொகுப்பு - வரலாற்றுப்பிரியன் | 48 |
| எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் | 50 |
| ஊருண்டிக் கோட்டையும் சிற்றாலயமும் (காவலூர்க் கவிஞர்) | 51 |
| நன்றி | 52 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

வரலாறு எப்பொழுதும் வாழ்ந்து கொண்டேஇருக்கும். நேற்றைய நிகழ்வுகள் இன்று வரலாகிறது. நாளைய சம்பவங்கள் பின்பு வரலாறாகப் பதிவாகின்றன. எழுதப்பட்ட வரலாறுகள் கடந்தகாலத்தைக் காட்டும் சான்றுகள் ஆகின்றன. எந்தநாட்டுக்கும் வரலாறு உண்டு. நம் முன்னோர் வாழ்க்கை வரலாறுகள் எமக்கு வழிகாட்ட உதவுகின்றன. பண்டைய பெருமைகள், சிறப்புகள் புதிய உருவாக்கலுக்கு உதவு கருவிகள் எனலாம். கடந்தவை கடந்தவைகளாக விட்டுவிட்டால் அவை மறந்தவைகளாக, பின் மறைந்தே போய்விடும். எனவேதான் ஆதிமுதல் வரலாறுகள் எழுதப்பட்டே வருகின்றன. வருங்கால சந்ததியினருக்கு எமது பண்டைய வரலாறு தெரியாமல்போகுமானால் பாரம்பரியங்களை, நம் பெருமைகளை இழந்துபோவாம். அதனால்தான் இந்த நூற்றாண்டு மலரை உருவாக்கி நம்மண்ணின் வரலாற்றை மறையவிடாது எழுத்து வடிவங் கொடுத்துக் காப்பாற்ற முனைந்துள்ளோம்.

1972ம் ஆண்டு கரம்பொன் பங்கு மலரை வெளியிட்டபோது காவலூர்ப் பங்கின் ஆலயங்கள் அடங்கிய வரலாற்றையும் எழுதவேண்டுமென ஆவலாய் இருந்தேன். அன்று அது கைகூடவில்லை. காவலூர் புனித மரியாள் நூற்றாண்டை முன்னிட்டு ஒரு மலரை வெளியிட வேண்டுமென ஒரு ஆவல் உருவாகியது. திருமலை – மட்டுநகர் ஆயர் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுடன் ஆலோசனை கலந்தபோது இன்றைய நிகழ்வுகளையும், நிலைபரங்களையும் உள்ளடக்கிய ஒரு வரலாற்றுத் தொகுப்பாய் அது அமைவது விரும்பத்தக்கது என்று ஆலோசனை தெரிவித்தார்கள். அதற்கமைய காவலூரைப்பற்றிய வரலாற்றைக் கத்தோலிக்க மறை வளர்ச்சியின் பின்னணியில் நான்கு ஆலயங்களின் வரலாற்று விபரங்களுடன், அங்கு பணியாற்றிய குரவர்கள், துறவிகள் முதலியோரின் சேவைகள் உட்பட பல தகவல்களையும் திரட்டி இயன்றளவு கோவைப்படுத்தி இந்நூலை உருவாக்கிஉள்ளேன்.

இந்த மலரை உருவாக்க ஆலோசனை வழங்கி நெறிப்படுத்தியதோடு, அணிந்துரை வழங்கிய பேராசான் J. F. ஜெகராஜசிங்கம் அவர்கட்கு நன்றிகள். தகவல்கள் பலதையும் அவ்வப்போது தந்தும் உதவியவர் அவரே. மேலும் வேண்டிய தகவல்களைத் தந்துதவிய யாழ் ஆயருக்கும், திருச்சிலுவைக் கன்னியர்களுக்கும், திருக்குடும்பக் கன்னியர் சபையினருக்கும் நன்றிகூறக் கடப்பாடுடையேன். இந்நூல் உருவாக்கத்துக்கு நிதி உதவி செய்த பெருமக்களுக்கும் கொட்டாஞ்சேனை சாந்தலூசியா பேராலயத்தில் நூற்றாண்டு விழாவைச் சிறப்பாக நடாத்த உதவிய அனைவருக்கும், வாழ்த்துச் செய்தியை நல்கிய யாழ் ஆயருக்கும், திருமலை – மட்டுநகர் ஆயருக்கும், வண. A. பிரான்சிஸ்குலாஸ், வண. கமிலஸ் நிமலன் அடிகளாருக்கும் சிறப்பிதழ் மூலம் சிறப்பித்த தினத்தந்தி உரிமையாளர் திரு. தே. இம்மனுவேல்பிள்ளை அவர்களுக்கும் புனித மரியாள் ஆலய மக்கள் சார்பாக நன்றி கூறிக்கொள்ளுகின்றேன். மிகுந்த சிரமங்களின் மத்தியில் இந்தமலர் உங்கள்கரங்களில் தரப்படுகின்றது. வரவேற்பது உங்கள் கடன்.

– மலராசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகழ்பெற்ற எழுத்தாளரும், பத்திரிகையாளரும் கொழும்பு புனித பெனடிக்ற் கல்லூரியின் பழைய ஆசிரியருமான

## திரு. J. F. ஜெகராஜசிங்கம் அவர்கள் வழங்கிய அணிந்துரை

ஓர் அந்நிய நாட்டில் அலைந்து திரிந்துவிட்டு வீடு திரும்பும்போது, பூரிப்படைந்து, "இதுதான் என் சொந்தநாடு, இதுவே நான் பிறந்த புண்ணிய பூமி", எனக்கூறிப் பெருமைப்படாத உணர்ச்சியற்ற கயவனும் இருக்கின்றானா? என ஓர் அழகான கவிதையைப் படைத்தார் தலைசிறந்த ஆங்கிலக் கவிஞர் சேர் வால்ரர் ஸ்கொட்.

இவ்வாறான அற்புத ஊர்ப்பற்றையும் தேசாபிமானத்தையும் எமக்கூட்ட முயன்றுள்ளார் ஆசிரியர் எஸ். எம். யோசெவ் அவர்கள். வடக்கு-கிழக்கு யுத்த சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு அகதி நிலைக்குத் தள்ளப்பட்டுத் தாயகத்தைவிட்டே இடம்பெயர்ந்தவர்களாகிய எமது உள்ளங்களில் தாயகப்பற்றையும், பிறந்தகத்தின் அபிமானத்தையும் தட்டி எழுப்புகின்றார் ஆசிரியர். பெருமைப்பட வேண்டிய பெரு முயற்சி இது. பத்திரிகைக் கட்டுரைகள் வாயிலாகவும், புனித மரியாள் ஆலயவரலாறு, நாரந்தனை சம்பேதுருபாவிலு ஆலயவரலாறு, சுருவில் அன்னை மரிமாதா ஆலயவரலாறு, தணுவில் சந்தானாள் ஆலய வரலாறு, கரம்பொன் பங்குமலர் போன்ற வரலாற்றுப் பிரசுரங்கள் மூலமாகவும் நம் மண்ணின் பெருமைமிகு வரலாறுகளைத் தந்த ஆரிரியர், காவலூர் வரலாற்றுப் பெருமைகளை இந்த நூற்றாண்டு மலர் வாயிலாக நமக்குத் தருகின்றார். நமது பூர்வீக வரலாறுகள் அழிந்துவிடாது பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் எழுந்த இந்நூல் எதிர்காலப் பரம்பரையினர் தம்முன்னோரைப்பற்றிய செய்திகளை அறிந்துகொள்ள உதவும் வரலாற்று ஆவணமாகவும் திகழும் என்பதற்கையமில்லை.

இது வரலாற்றுக் கருவூலம், களஞ்சியப்படுத்தப்பட வேண்டியது என்று கூறிவைக்க விரும்புகின்றேன். எமது பொன்னான தாயகத்தை மீண்டும் சென்றடைவோமோ என்பது பெரியதோர் கேள்விக்குறியாக இருக்கும்பொழுது, நம்பிக்கையைத் தளரவிடாது உள்ளச் சோர்வுகளைக் களைந்து, எமது மூதாதையர் விட்டுச் சென்ற சிறப்புக்களையும், பண்டைய பெருமைகளையும் எண்ணிப்பார்த்து எமது மண்ணின் மாண்புகளை மறந்துவிடாது, பிறந்த நாட்டில் பற்றுக்கொண்டிடத் தூண்டுகின்றது இந்நூல். எமது தாயகத்தின் பௌதீக, சமய, கலாச்சாரச் சின்னங்களாக அமைந்துள்ள பழம்பெரும் தேவாலயங்கள், திருத்தொண்டர்கள், கல்விக் கூடங்கள், பெருமைமிகு வரலாற்று மீதிகள் முதலியவற்றை மையமாகக் கொண்டு இம்மலர் தயாரிக்கப்பட்டிருப்பதே இதன் சிறப்பு அம்சமாகும்.

எத்தனையோ சிரமங்களுக்கு மத்தியிலும் மலராசிரியர் தனது கட்டுரைகளுக்குத் தேவையான தகவல்களையும், தரவுகளையும் திரட்டியிருப்பது பாராட்டுக்குரியதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயரின் வாழ்த்து



ஊர்காவற்றுறைப் பங்கின் பிரதான ஆலயமாக விளங்கும் புனித மரியாள் ஆலயம் அமைக்கப்பட்ட நூற்றாண்டை இவ்வருடம் நினைவுகூருகின்றோம். இத்தருணத்தில் தீவுப்பற்றிலுள்ள பழம்பெரும் கத்தோலிக்க சமூகத்தைக் கொண்ட சிறப்புமிக்க இவ்வாலயத்தினூடாக மக்கள்பெற்ற நன்மைகளை நினைவு கூருவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம். காவலூர்ப் பங்குமக்கள் ஒவ்வொரு ஆவணித்திங்களும் மரியன்னையின் விண்ணேற்பு விழாவைச் சிறப்புடன் கொண்டாடிப் பக்திப் பரவசத்தில் மூழ்கி நிற்கும் காட்சியை நினைத்துப் பார்த்தால் உள்ளம் பூரிக்கும். கலைஅழகு சிந்தப் பீடத்தை அலங்கரிக்கும் மரத்தினாலான சிங்காசனத்தில் கிருபாசனங்கொண்டு எழுந்தருளியிருக்கும் மோட்ச அலங்காரியின் எழில் உருவம் பக்தர்களின் மனதைவிட்டகலாது என்பதற்கையமில்லை.

நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் இத்தருணத்தில், போர்க்காலச் சூழ்நிலையால் இவ்வாலயம் மக்களின்றிக், குருக்களின்றிப் பொலிவிழந்து கவனிப்பாரற்று காடு பற்றியிருக்கும் நிலையை எண்ணும்போது துயரமே எம்மை வாட்டும்.

இவ்வேளையில் சமாதானத்தின் இராக்கினியாக விளங்கும் அன்னையின் வல்லபம் மிக்க பரிந்துரையினால் நீதியுடன்கூடிய நிரந்தர அமைதியை எமக்கருளி, காவலூரில் மக்கள் மீண்டும் வாழ்க்கையைத் தொடங்க அருள்பாலிக்க வேண்டுகின்றேன்.

மங்களகரமான இவ்விழாவின்போது இவ்வாலயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

நாட்டின் நெருக்கடி காரணமாக பல்வேறு இடங்களில் இடம்பெயர்ந்து பல இன்னல்களை அனுபவித்து வாழும் இவ்வாலயத்தைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த இனிய வாழ்த்துக்களையும், நல்லாசிகளையும் பரிவன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

**+ தோமஸ் சவுந்தரநாயகம்,**
*யாழ் ஆயர்,*
*ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.*
*15.7.95*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமலை - மட்டுநகர் ஆயரின் ஆசிச் செய்தி



வரலாற்றுப் புகழ்மிக்க காவலூர்ப் புனித மரியாள் ஆலயத்தின் நூற்றாண்டு நினைவாக விழா கொண்டாடப்படுவதையிட்டுப் பெருமகிழ்ச்சியடைகின்றேன். நூற்றாண்டு நிறைவின் நினைவாகச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிட முன்வந்த திரு. எஸ். எம். யோசெவ் அவர்களின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துகிறேன்.

நான் திருமுழுக்குப் பெற்ற இவ் ஆலயத்தின் அபிஷேக விழாவின்போது முதல் நன்மையும் உறுதிப் பூசுதலும் பெற்றதை மகிழ்ச்சியுடன் நினைவு கூருகின்றேன். தாய்வழிவந்த இவ் ஆலயத்தில் நான் உதவிப் பங்குத்தந்தையாகப் பணியாற்றிய நாட்களை மறந்துவிட முடியாது.

இன்று நூற்றாண்டு கண்டு நிற்கும் இவ்வாலயம் பழமையான உயிருள்ள விசுவாசத்துக்கும் அன்னையின் அளப்பரும் கருணைக்கும் சான்றாகத் திகழ்கின்றது.


இத்தருணத்தில் காவலூர், பங்குமக்களோ, பங்குத் தந்தையோ இல்லாது கவனிப்பார் அற்றுக் கைவிடப்பட்ட நிலையில் ஆலயங்கள் சிதைவுற்று புதர் மண்டிக்கிடக்கும் அவலநிலையை அறிந்து கவலைப்படுகின்றேன். என்றோ ஒருநாள் புலம்பெயர்ந்த மக்கள் மீண்டும் தம் சொந்த மண்ணில் புதுப்பொலிவுபெற்று விசுவாசத்தின் ஒளியை முன்எடுத்துச் செல்ல காவலூரின் பாதுகாவலியாம் அன்னை மரியாள் அருள் பாலிப்பாராக.

**+ ஜே. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை**
திருமலை-மட்டக்களப்பு ஆயர்,
ஆயர் இல்லம், மட்டக்களப்பு.
13.7.95



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வத்திக்கான் மறையறிவிப்புப் பேராயத்திலிருந்து தாயக ஆலய நூற்றாண்டு விழாவுக்கு கலாநிதி J. கமிலஸ் நிமலன் அடிகளார் வழங்கிய வாழ்த்துச் செய்தி



"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும் நற்றவவானிலும் நனி சிறந்தற்து", என்ற முதுமொழிக்கமைவாக எனது அன்னைக்கு மேலான அன்னையாம் புனித மரியாளின் ஆலய நூற்றாண்டு நிறைவுபெறுகின்ற இத்தருணத்தில் தாயக மக்களுடன் நானும் பெருமகிழ்வு அடைகின்றேன்.

நான் திருமுழுக்குப்பெற்ற இவ்வாலயத்தில் சிறுவனவாக ஓடியாடித்திரிந்த நாட்களை மறப்பதற்கில்லை. எனது பள்ளிப்பராயத்தில் இங்கு கண்டுகளித்த தேவதாயாரின் விண்ணேற்பு விழாக்களையும் வழிபாட்டு வைபவங்களையும் நினைவு கூருகின்றேன். கொடியேற்றம், நவநாட்கள், அன்னையின் திருச்சுருபப் பவனி என்னும் மங்களகரமான விழா நிகழ்ச்சிகள் நினைவில் நிற்கின்றன.

1983 ம் ஆண்டு இவ்வாலயத்தில் நான் குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்ட அந்தப் பெரியநாள் எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நாளாகும்.

100 ஆண்டு நிறைவைக்கண்ட இவ்வாலயம் இப்பங்கு மக்களின் விசுவாச வாழ்வில் காத்திரமான ஓரிடத்தைப் பெறுகின்றது. இன்றைய போர்க்காலச் சூழலினால் பாதிக்கப்பட்டு சொந்த மண்ணைவிட்டு இடம்பெயர்ந்து வெவ்வேறிடங்களில் குடியிருந்தாலும் கடந்தகாலத்தில் தேவதாயாரின் பரிந்துரையால் நாம் பெற்ற அளப்பரும் இகபர நன்மைகளையும், அத்தாயாரின் அன்புப் பராமரிப்பையும் அருள் உதவிகளையும் மறந்துவிட முடியாது. அன்னை மரியாள் நம் அனைவருக்கும் நல்கிய அனைத்து நன்மைகளுக்கும் இறைவனுக்கு நன்றி கூறுவோம்.

பிரச்சினைகள் தீர்ந்து கஷ்டங்கள் நீங்கி அனைவரும் சமத்துவம், சமாதானம், சகோதரத்துவத்துடன் வாழ அன்னையிடம் வேண்டுவோமாக.

பல்வேறு கஷ்டங்களின் மத்தியிலும் தேவதாயாரின் ஆலய நூற்றாண்டு விழாவைக் கொண்டாட ஆர்வங்காட்டிய எமது யாழ் ஆயருக்கும், தீவகப் பங்குத் தந்தைக்கும் எனது உளமார்ந்த நன்றிகள். நூற்றாண்டு நினைவு மலரை வெளிக்கொணரப் பெரிதும் உழைத்த ஆசிரியர் S.M. யோசெவ் அவர்கட்கு எனது பாராட்டுக்கள்.

**"அருள் நிறை மரியே வாழ்க"**

பங்கு மக்கள் அனைவருக்கும் இறைவனின் நல்லாசிகள்.

**அருட்திரு கலாநிதி ஜே. கமிலஸ் நிமலன்**
மறை அறிவிப்புப் பேராயம்,
வத்திக்கான்.
ஆனி மாதம் - 1995




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னைநாள் பங்குத்தந்தை

# அருட்திரு. A. பிரான்சிஸ் குலாஸ் அ.ம.தி. அடிகள்

வாழ்த்துகிறார்



தீவகத்தின் தலை சிறந்த பட்டினமாகிய காவலூரில் புகழ் நிறைந்த பாதுகாவலியாம் பரலோகஅன்னை கோவில்கொண்டிருக்கும் ஆலயத்தின் நூற்றாண்டு நிறைவு கண்டு மகிழ்வுறும் இவ்வேளையில் மாதாவின் செல்வ மக்களோடு சேர்ந்து நானும் இறைவனுக்கும் அவர் திருமகன் இயேசுவின் தாயாருக்கும் புகைழயும் நன்றியையும் தெரிவித்து, நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் ஆலய மக்கள் அனைவருக்கும் எனது இதயம் நிறைந்த ஆசிகளையும் வாழ்த்துக்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வனப்புறு தென்னஞ்சோலையின் நடுவே வானளாவும் கோபுரத்துடன் கம்பீரமாய் காட்சி தரும் அன்னை மரியின் ஆலயம் கண்கொள்ளாக் காட்சியாகும். மேகங்களை எட்டிப் பிடிப்பது போல உயர்ந்து நிற்கும் அக்கோபுர அழகே அலாதி. பீடத்தில் அமைந்துள்ள கலைஅழகுமிக்க உயர்ந்த சிம்மாசனத்தில் மோட்ச அலங்காரியாகிய தேவ தாயார் பொன்முடிபுனைந்து மோட்சமய அழகு சிந்தக் கோவில்கொண்டு எழுந்தருளியிருக்கும் காட்சி என்மனதை விட்டகலாது நிற்கின்றது. அந்த அன்னையின் ஆலய நூற்றாண்டுவிழா கொண்டாடப்படும் இத்தருணத்தில் தேவதாயாரின் தெரிதலான வரங்கள், கொடைகள் அனைத்தையும் மாதா பரிந்துரைத்துப் பெற்றுத்தர வேண்டும் என்று மன்றாடி மாதாவின் செல்வ மக்களுக்கு ஆசீர் நிரம்பக் கூறுகின்றேன்.

நான் குருமாணவனாய் இருந்தபோது காலஞ்சென்ற வண. L. J. அகுஸ்தீன் அடிகளாருடன் இவ்வாலய அபிஷேக விழாவில் பாடகர்குழுவில் ஒருவனாகப் பாடியது நெஞ்சைவிட்டு அகலாத நினைவாக இருக்கின்றது.

இது மாதா எனக்குத்தந்த அதிர்ஷ்டமான அழைப்பாகவே நான் கருதுகிறேன். பல வருடங்களின் பின், மாதா என்னைக் காவலூர்ப்பங்கிலே குருப்பணியாற்ற அழைத்ததை எண்ணிப் பெருமைப்படுகிறேன். இது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியம் என்றே எண்ணுகின்றேன். ஐந்தரை ஆண்டுகள் மாதா கோவில் குருமனையில் மாதாவின் நிழலில் பணியாற்றக் கிடைத்ததும் பெரும் பேறே.

சகல வசதிகளையும்கொண்ட இவ்வாலயம் காவலூர்ப்பங்கின் நடு நாயகமாகத் திகழ்ந்தது. பல பொது வழிபாடுகளும் சமய நிகழ்ச்சிகளும் இங்கு இடம்பெற்றன. காவலூர்மக்கள் விசுவாசம் நிறைந்தவர்கள். அவர்களின் விசுவாசம் அயர்லாந்து மக்களின் விசுவாசத்துக்கு (IRISH FAITH) ஒப்பிடக் கூடியது. நான்கு கோவிற் கிறிஸ்தவர்களும் ஒற்றுமையோடும் ஆர்வத்தோடும் மறைப்பணிகளிலும், ஆலய விழாக்களிலும், பக்தி முயற்சிகளிலும் பங்கு கொண்டு ஒத்துழைத்த பண்பாளர்களாயிருந்ததை மறந்துவிட முடியாது.

குருபக்தியும் அமைச்சலும் இறை நம்பிக்கையும்மிக்க காவலூர் மக்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடைக்கலமும் ஆதரவும் நம்பிக்கையுமாய் திகழ்பவள் தான் அன்னை மரியாள். காவலூர்ப் பங்குமக்கள் அனைவருமே அந்த அன்னைபால் அசைக்கமுடியாத அன்பு கொண்டிருந்தனர். எனவே இந்த நூற்றாண்டு விழா மாதா கோவில் மக்களுக்கு மாத்திரமல்ல பங்குமக்கள் அனைவருக்குமே பெரும் மகிழ்ச்சி தருகின்ற விழாவாகும். அபயம் என்று வருபவரை ஆதரிக்கும் அன்னையான மோட்ச அலங்காரி அல்லற்படுகின்ற மக்களை அரவணைத்து மீண்டும் சொந்த மண்ணில் அவளது பாதாரவிந்தங்களைப் பணிந்துவாழ வரம்அருள வேண்டுமெனப் பிராத்திக்கின்றேன். ஆசிஉரை எழுத வாய்ப்பளித்தமைக்கு நன்றி.

**"வான்லோக இராணி, வையக இராணி, மண் மீதிலே புனித மாது நீ"**

அமல உற்பவம்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

# வரலாற்றுப் புகழ்மிக்க காவலூர் அன்றும் இன்றும்

## (எஸ். எம். ஜே.)

**முகவுரை**

இலங்கையின் வடபுலத்தில் பண்டைய சிறப்புமிக்க துறைமுகமாக விளங்கியது ஊர்காவற்றுறையாகும். லைடன் தீவு என ஒல்லாந்தரால் அழைக்கப்பட்ட இத்தீவின் வடமேற்கில் ஊர்காவற்றுறை அமைந்துள்ளது. லைடன் தீவு வேலணைத் தீவு எனவும் அழைக்கப்படுகிறது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாற்றுக் குறிப்பு ஒன்று இதை தணதீவு எனச் சுட்டுகின்றது. கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டிலிருந்தே ஊர்காவற்றுறை துறைமுகமாய் இருந்தது எனச் சரித்திர ஆய்வாளர் கூறுகிறார்கள். பராக்கிரமபாகு மன்னன் காலத்தில் இது துறைமுகமாயிருந்தது என வரலாறு சான்றுபகருகின்றது. போத்துக்கேயர் வருவதற்குமுன் தென்இலங்கை அரசனான ஆறாம் பராக்கிரமபாகு யாழ்ப்பாண அரசை வெற்றிகொண்டு ஊர்காவற்றுறை துறைமுகத்தில் ஆதிக்கஞ் செலுத்தியதாகக் கூறப்படுகின்றது. காலகதியில் இது ஒரு துறைமுக நகரமாக உருவெடுத்தது.

**பெயர் எப்படி வந்தது :**

ஊர்காவற்றுறை என்ற பெயர் வரக் காரணம் என்ன என்று ஆராயின், ஊரைக் காவல் செய்கின்ற துறைமுகம் அமைந்திருந்தமையால் அவ்வாறு பெயர் வந்தது என்பர். வேறுசிலர் ஊரான் தோட்டம் என வழக்கில் இருந்த பெயர் சிங்களத்தில் "ஊறாதொட்ட" என வந்தது என்பர். பன்றிகள் ஏற்றியதுறை என்ற காரணத்தால் ஊறாதொட்ட எனப் பெயர்வந்தது என்று சொல்பவருமுளர். ஆனால் யானைகள் இத்துறைமுகத்தினூடாக ஏற்றுமதி செய்யப்பட்டது என்பதற்குச் சான்றுகள் உள. இப்பொழுது ஆங்கிலத்தில் Kayts என வழங்கப்படும் பெயர் ஆங்கிலேயரால் சூட்டப்பட்டது என்பர். ஆய்வுகளின்படி இது போர்த்துக்கேய சொல்லில் இருந்து மருவி வந்தது என்த் தெரிகிறது. போர்த்துக்கேய மொழியில் "Caes" என்றால் துறைமுகம் என்பது பொருள். அதிலிருந்தே பின் Kayts என்ற பதம் ஆங்கிலத்தில் மாற்றியமைக்கப்பட்டிருக்கலாம் என்று விளக்கம் தரப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பொற்காலம் :**

வட பகுதியில் அமைந்துள்ள ஒரு இயற்கைத் துறைமுகம் ஊர்காவற்றுறையாகும். வடகீழ், தென்மேல் பருவ காலங்கள் இரண்டிலும் பாதுகாப்பான துறையாக இது விளங்குவது விசேட அம்சமாகும். பன்னெடுங்காலமாக காவலூர் கடல் வணிகத்தில் சிறந்து விளங்கியது. தமிழ்நாட்டுடன் நெருங்கிய தொடர்பிருந்தமையால் அந்நாட்டுத் துறைமுகங்கள் வரைசென்று பண்டமாற்று வணிகஞ் செய்திருக்க வாய்ப்பிருந்தது. தென்கிழக்காசிய நாடுகள் ஈறாக காவலூர் மாலுமிகள் வணிகத்தில் ஈடுபட்டிருந்தனர். பிரித்தானியர் ஆட்சிக்காலத்திலேயே ஊர்காவற்றுறைத் துறைமுகம் புகழ் பெற்றிருந்தது எனலாம். பிரித்தானியர் ஆசிய நாடுகளான பேர்மா, சயாம், றங்கூன் முதலிய நாடுகளிலிருந்து அரிசியை இறக்குமதி செய்தனர். இந்த இறக்குமதி வர்த்தகத்தில் பிரதான பங்கெடுத்துக்கொண்ட பட்டுக்கோட்டைச் செட்டிமார் ஊர்காவற்றுறை, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை முதலாம் துறைமுகங்களை இறக்குமதி வர்த்தகத்துக்குப் பயன்படுத்தினர். அக்காலப் பகுதியில் காவலூர் மிகுந்த செல்வாக்குப் பெற்றிருந்தது. கப்பல்கள், படகுகள், டிங்கிகள், தோணிகள் என்று துறைமுகம் மரக்கலங்களால் நிறைந்திருக்கும். பனைமர உயரமான பாய்மரங்கள் வானைமுட்டி உயர்ந்துநிற்க, பாரியகப்பல்கள் எந்நேரமும் நங்கூரமிட்டுச் சரக்குகளை இறக்கும் காட்சியை ஐம்பது ஆண்டுகளுக்குமுன் கண்டவர்கள் பலர் இன்னும் சீவந்தராய் இருக்கிறார்கள். படகுகளில் பணியாற்றிய மாலுமிகளில் ஒரு சிலர் இன்னும் பண்டைய நிகழ்வுகளை அசைபோட்டுப் பார்க்கிறார்கள். கறிச் சரக்கு வகைகள், வெங்காயம், மிளகாய் சர்க்கரை முதல் கலிக்கட் ஓடுவரை கரை இறக்கப்பட்ட அந்தச் செழிப்பான காலம் எண்ணிப்பார்க்கப் பெருமையளிக்கின்றது. முந்நாளில் காவலூர்த் துறைமுகம் எப்பொழுதும் சுறுசுறுப்பாகவே இருக்கும். அது காவலூரின் பொற்காலம், செழிப்பான அந்த நாட்கள் என்று வருமோ.

பட்டுக்கோட்டைச் செட்டிமாரின் செல்வாக்கினால் காவலூரிலும் கப்பல் கட்டும் தொழில், படகுத்துறைத் தொழில் என்பன விருத்தி கண்டன. பலர் வேலை வாய்ப்புப் பெற்றதோடு மாலுமிகளாகவும், கப்பல் உரிமையாளராகவும் மிகுந்த உச்சநிலையில் இருந்தனர். யுத்தகாலப் பஞ்ச நிலைமைகள் காவலூரை அவ்வளவாகப் பாதிக்கவில்லை. காவலூர் அரிசிக் களஞ்சியமாக இருந்ததால் அரிசிக்கும் பஞ்சம் இருக்கவில்லை.

**அறுபதுகளுக்குப்பின் :**

சப்த தீவு மக்களும் சங்கமமாகும் இடம் காவலூராகவே இருந்தது. 1960ம் ஆண்டுவரை நெடுந்தீவு உட்பட அனைத்துத் தீவு மக்களும் ஊர்காவற்றுறைத் துறைமுகம் வந்துதான் காரைநகர் ஊடாக யாழ்ப்பாணஞ் சென்றனர். அதுவரை ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையே அனைவருக்கும் மருத்துவப் பணிக்கு நடுநிலையமாய் இருந்தது. பொலீஸ் நிலையம், நீதிமன்றம் என்பன காவலூர் பட்டினத்திலேயே இருந்தன. இதன் காரணமாக நீதித்துறை சார்ந்த சகல தேவைகள், சட்டத்தோடு தொடர்புடைய குற்றவியல் விசாரணைகள், வழக்குகள் அனைத்தும் காவலூரில் இடம்பெற்றமையால் நீதிமன்றம் கூடும் நாட்களில் தீவுப்பகுதி மக்கள் இங்கு கூடுவது வழக்கம். அதனால் ஊர்காவற்றுறைச் சந்தை எப்பொழுதும் கலகலப்பாகவே காணப்படும். 1950ம் ஆண்டுவரை காவலூர் சுங்கப்பகுதி கொழும்புக்கு அடுத்தாற்போல் வருமானத்தில் இரண்டாம் இடத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றிருந்தது. சுங்கப் பகுதியில் காவலூர் மக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றனர். கால் நடைகள் இறக்குமதி செய்யப்பட்டு கமக்காரர்களுக்கு விநியோகம் செய்யப்பட்டது. இந்தியாவிலிருந்து நல்லினக் காளை மாடுகளும், ஆடுகளும் பெருமளவில் வந்திறங்கிக் காவலூரின் மேற்கில் உள்ள மாட்டுக்காலை எனப்படும் தடை முகாமில் தடுத்து வைக்கப்பட்டு நோய்த்தடுப்புச் செய்யப்பட்ட பின்னரே விற்பனை செய்யப்பட்டன. மிருகங்களுக்கு மாத்திரமல்ல, மனிதருக்கும் அம்மை நோய்த் தடுப்பு முகாமும் மாட்டுக்காலையை அண்மித்த ஊர்காவற்றுறை மேற்குப் பிரேதசத்தில் அமைந்திருந்தது. சுகாதார வைத்தியப் பகுதியினர் இத்தடுப்பு நிலையத்தைப் பராமரித்து வந்தனர்.

**ஆய்வுக்குட்பட்ட ஆதிக் குடியேற்றம் :**

கிராம சேவகர் பணிகளை இலகுவாக்கத் தற்பொழுது மேற்கொள்ளப்பட்ட பரவலாக்கற் பிரிவுகளின்படி கரம்பொன்வடக்குப் பிரிவு ஊர்காவற்றுறை மேற்கை அடுத்த பகுதியாகும். மாட்டுக்காலையை அண்மித்த கரம்பொன் வடக்குப் பகுதியே ஆதிக் குடியேற்றப் பகுதியாகக் கருதப்படுகின்றது. ஊருண்டி என முன்னர் அழைக்கப்பட்ட இப்பகுதியே முதன் முதலில் மக்கள் செறிந்து வாழ்ந்த பகுதி என்பது ஆய்வாளர் கருத்தாக இருக்கின்றது. தொல்பொருள் ஆராய்ச்சி நிபுணரான கலாநிதி பொ. இரகுபதி அவர்கள் மேற்படி கருத்தை வெளியிட்டுள்ளார். அவரது ஆய்வுக் குறிப்புகளின்படி இப்பகுதி செம்மண் கலந்த பூமியாக இருந்தது என்றும் மக்கள் இங்கு குடியேறியிருந்தமையினாலேயே போர்த்துக்கேயர் இப்பகுதியில் ஒரு கோட்டையைக் கட்டினார்கள் என்றும் தெரிய வருகிறது. அந்தக் கோட்டை சிதைந்த நிலையில் இன்றும் பழங்கோட்டை என அழைக்கப்பட்டு வருகின்றது. சில ஆண்டுகளுக்கு முன் இக்கோட்டைப் பகுதியில் யாழ் திருமறைக் கலா மன்றத்தினர் திருப்பாடுகளின் காட்சியைத் (இயேசு சிலுவையில் மரித்த காட்சியை) (வீடியோ) படமாக்கியது குறிப்பிடற்பாலது. கல்வாரி மலையை இது ஒத்திருந்தமை காட்சிப்புலமாக்க உதவியது.

போர்த்துக்கேயரின் கீழ்த்திசை வரலாற்று நிபுணரான இலண்டன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த C. R. பொக்ஸ்ஸர் (C. R. Boxer) இலங்கையில் உள்ள போர்த்துக்கேயரின் கோட்டைகளை இனங்கண்டு ஆய்ந்தவேளை அவற்றுள் ஒன்றைப்பற்றிய ஐயமேற்பட்டபோது ஊர்காவற்றுறைக்கு வந்து இந்தப் பழங்கோட்டையைப் பார்த்தபின்னரே தான் தவறவிடப்பட்ட கோட்டை அதுதான் என்பதை நிச்சயப்படுத்தித் தெரிந்து கொண்டார் என அறியமுடிகிறது. பேராசிரியர் Boxer அவர்களை அழைத்து வந்த கொழும்பு பல்பலைக்கழக வரலாற்று அறிஞரான கலாநிதி திகிரி அபயசிங்கா அவர்கள் இதை உறுதிப்படுத்தியுள்ளார். கலாநிதி இராமகிருஷ்ணன் அவர்களும் இவ்ஆய்வுக்கு உதவியுள்ளார் என்பதும் நினைவுகூரத்தக்கதே.

கரையில் உள்ள போர்த்துக்கேயரின் பழங்கோட்டையைவிட வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமோர் வரலாற்று மீதி ஊர்காவற்றுறைக்குப் பெருமைதருகின்றது. காவலூருக்கும் காரைநகர் கடற்படைத் தளத்துக்குமிடையில் அமைந்துள்ள கடற்கோட்டை இலங்கையில் காணக்கூடிய மிக அபூர்வமான வரலாற்றுமூலமாகும். ஒல்லாந்தரால் அமைக்கப்பட்ட இக் கடற்கோட்டை "ஹமன் ஹீல்" என அழைக்கப்படுகின்றது. 1990ம் ஆண்டுக்குப் பின் இது கடற்படையின் கட்டுப்பாட்டில் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவலூரின் குடிப்பரம்பல் எப்போது ஏற்பட்டது என்பது அறிய முடியவில்லை. தென் இந்தியாவில், மணற்பாடு, தூத்துக்குடி, இராமேஸ்வரம், பாம்பன், திருநெல்வேலி, முதலிய இடங்களிலிருந்து தீவுப்பகுதியில் மக்கள் குடியேறியிருக்கலாம். இந்தியப் படையெழுச்சியின் போது போர்வீரராகவும், படைகளுக்குத் துணையாகவும் வந்தவர்கள் இங்கு குடியமர்ந்திருக்கலாம். வியாபார நோக்கத்தோடு வந்தவர்களிற் சிலர் இங்கு தங்கி அவர்களின் சந்ததி பெருகியும் இருக்கலாம். ஒரு பகுதியினர் மன்னார் மாந்தைப் பகுதியில் இருந்து வந்து குடியேறினர் என்பதற்கும் ஆதாரங்கள் உண்டு. ஊர்காவற்றுறை கிழக்கு, ஊர்காவற்றுறை மேற்கு முதலிய இடங்களில் வாழும் வகுப்பினருக்கு மன்னார்த் தொடர்புகள் இருப்பதாகத் தெரிகிறது. மற்றைய தீவுகளின் மக்களும் இங்கு வந்து குடியேறி இனப்பெருக்கம் ஏற்பட்டிருக்கலாம். எது எவ்வாறாயினும் 1990 வரை பல சமூகத்தவரையும் சேர்ந்த பன்னீராயிரம் மக்கள் ஊர்காவற்றுறைப் பட்டின எல்லைக்குள் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. கத்தோலிக்கரைப் பெரும்பான்மையாகக் கொண்ட இச்சனத்தொகை முக்கிய நான்கு சமூகத்தினரை அடக்கியுள்ளது என்பதற்கு இங்குள்ள நான்கு ஆலயங்கள் சான்று பகருகின்றன.

**ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறின் அவலங்கள் :**

ஊர்காவற்றுறை 1947ம் ஆண்டில் பட்டின சபை அந்தஸ்தைப் பெற்றது. ஐந்து வட்டாரப் பிரிவுகளை அடக்கிய பட்டின பரிபாலனம் இங்கிருந்தது. பல வழிகளில் துரிதமாக முன்னேறி வளர்ந்துகொண்டிருந்த காவலூர் எவருமே எதிர்பாராது 1990ம் ஆண்டு ஆவணி 22ல் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் உலகப்போரில் அகப்பட்ட ஜேர்மானிய நாட்டைப்போலவும், அணுக்குண்டு வீசப்பட்ட நாகசாக்கி போலும் சிதைந்து அழிந்த நிலையில் இன்று காட்சி தருகின்றது. வனப்பிழந்து, வடிவிழந்து குஷ்டரோகி போலவும் காட்சிதருகின்றது. குண்டு வீச்சு, ஷெல் வீச்சுக்களாலும், கடற்படைப் பீரங்கி வேட்டுக்களாலும் சிதைந்த கட்டடங்கள், புள்டோசர் போட்டு மிதித்துத் தரைமட்டமாக்கப்பட்ட வீடுகள் அரச அலுவலகங்கள் வீடுகளின் சுற்றுமதில்கள் சிதைந்து புதர்மண்டி, காடுகள்வளர்ந்ததுபோல் மரங்கள் வளர்ந்து மூடிக்கிடக்கும் பல வீதிகள் அடையாளங்காண முடியாதபடி காட்சிதருகின்றன.

1984க்குப்பின் நீதி மன்றம், பழைய பொலிஸ் நிலையம், புதிய பொலிஸ் நிலையம், வாடிவீடு என்பன தீவிரவாத சக்திகளால் அவை எதிரிகள் வசமாகாதவாறு தகர்க்கப்பட்டன. ஆனால் 1990 புரட்டாதியில் காவலூர்ப் புதிய தபாலகம் உட்பட பல அரசநிறுவனங்கள், சந்தைக்கட்டடங்கள், மக்கள் குடியிருப்பு மனைகள் என்பன தகர்க்கப்பட்டு தரைமட்டாக்கப்பட்டன. இறங்குதுறை மண்டபம் தகர்ந்து துறைமுகப்பாலம் சிதைந்து இதுதான் புகழ்மிக்க காவலூர்த் துறைமுகமோ என்று எண்ணத் தோன்றும்படி காட்சிதருகின்றது. வீடுகள் பல சுவர்களோடும் கூரைகளோடும் நின்றாலும் கதவுகளும் யன்னல்களுமில்லாது பாழடைந்த வீடுகளாய் தோற்றமளிக்கின்றன. ஆயிரக்கணக்கான வீடுகளிலிருந்த விலைமதிப்பற்ற தளபாடங்களும் பெறுமதிமிக்க பொருட்களும் எங்குபோய் மறைந்தனவோ? அவற்றின் பெறுமதி கணிப்பின் பல கோடி ரூபா மதிப்பிடலாம். சொத்துக்கள் வீடுகளுக்கு நஷ்டஈடு வழங்குவதானால் பில்லியன் கணக்கில் வரும். அமைதியில் வாழ்ந்த காவலூர் முந்திய இராணுவ நடவடிக்கைகளுக்குத் தப்பியிருந்த போதிலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990ம் ஆண்டு புரட்டாதி இருபத்தெட்டில் வரலாறு காணாத பேரழிவை எதிர்கொண்டு மக்கள் சொந்த மண்ணை விட்டு நிலைகுலைந்து நிர்க்கதியாய் அகதிகளாய் இடம் பெயர்ந்தனர். நாரந்தனை, சுருவில், சின்னமடு, சாட்டி முதலிய இடங்களில் அகதிகளாய் அடைக்கலம்புகுந்து சொத்துக்களை இழந்தாலும் சுகத்தை இழந்தாலும் உயிரையாவது காப்பாற்றிக் கொண்டால் என்றோ ஒருநாள் தாயகம் வரலாம் என்று தவித்துநின்றனர். ஆனால் அடைக்கலம் நாடிப் புலம்பெயர்ந்த இடங்களிற்கூட ஆறு மாதங்கள் நிம்மதிப் பெருமூச்சு விட்டிருக்க காலம் இடந்தரவில்லை.

**மக்களைத் துரத்திய 1991 :**

1991ம் ஆண்டு சித்திரை மாதத்தில் காவலூரிலிருந்து புலம்பெயர்ந்தவருடன் அடைக்கலம் தந்தவர்களும் சேர்ந்து லைடன்தீவைவிட்டே வெளியேறிக் குடாநாட்டை நோக்கி இடம்பெயர்ந்த அவலங்களைப் பெரிய புத்தகமாய் எழுதலாம். லைடன் தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு மக்கள் 75,000 பேர் குடாநாட்டை நோக்கிப் படையெடுத்தனர். எகிப்திலிருந்து இஸ்றாயேல் மக்கள் இரேவாடு இரவாகப் புலம்பெயர்ந்தபோது நிகழ்ந்த ஆறாத்துயரங்கள் தீவகமக்களையும் வாட்டி வருத்தியது. காவலூர் மக்களும் இதில் அடங்குவர். கத்தோலிக்க மறைத் தொண்டர்களும், குருமாரும், மனித முன்னேற்ற நடுநிலையமும், பங்குத் தந்தையர்களும், அரசசார்பற்ற தாபனங்களும் அந்தக்காலகட்டத்தில் ஆற்றிய மனிதநேயப் பணிகளால் லைடன் தீவு மக்கள் தம் உயிரையாவது காப்பாற்ற முடிந்தது என்றால் மிகையில்லை. ஷெல் வீச்சு, விமானக்குண்டு வீச்சு, துப்பாக்கிச் சூடுகளால் பலர் உயிரிழந்தனர், சிலர் அங்கவீனமாகினர். பல குடும்பங்கள் அவ்வாறான சோக அனுபவங்களைச் சுமந்து துன்பக்கடலில் தத்தளித்து மீள முடியாத இழப்புக்களை எதிர்கொண்டு வாழுகிறார்கள். யாழ்குடாநாட்டில் வாழும் காவலூர்மக்கள் இந்த வரலாற்றை எழுதும்வரை இதே ஏக்கங்களுக்கு முகங்கொடுத்து மனமடிவுடனும் அச்ச உணர்வுகளுடனும் நிம்மதி இழந்தவர்களாகவே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பெற்ற ஒரு சிலரது குடும்பங்களும், வசதிவாய்ப்புள்ள சிலரும் கொழும்பிலும் பிற இடங்களிலும் வாழுகிறார்கள். அவர்கள்கூட நிம்மதியாய், மனநிறைவாய் வாழுகிறார்கள் என்றுகூறிவிட முடியாது.

**நல்லதொரு எதிர்காலம் வருமா?**

மீண்டும் நம் தாயகம் திரும்புவோமா? சொந்த மண்ணில் அமைதிபெற முடியுமா? எமது அவலங்கள் இன்னல்கள் எப்போது நீங்கும்? விடிவுகாலம் வருமா? இதுதான் காவலூர்மக்களது ஏக்கமாக உளது. 1990 ஆவணி 22 இல் யாழ்ப்பாணக் கோட்டையைப் பிடிக்கவெனக் காவலூரில் வந்திறங்கி, மண்டைதீவு சென்ற அரசபடைகள், கோட்டையைக் கோட்டைவிட்டு 1990 புரட்டாதி 28இல் திரும்பிவந்து நாட்டைப் பிடித்த கதையில் நலிவுற்றது லைடன் தீவும், மண்டைதீவுமாகும். அதிலும் காவலூரே அழிவுகளைப் பெருமளவு எதிர்கொண்டு வரலாறு காணாத அனர்த்தங்களுக்கு முகங்கொடுத்துப் பண்டைய பெருமைகள் அனைத்தையும் இழந்து நிர்க்கதி நிலையில்உள்ள வரலாற்று நிகழ்வு வரலாறாக இருக்கும் வண்ணம் இதை எழுதுகின்றோம். தீவக மக்களின் துர்ப்பாக்கிய நிலைமைகளின் ஒரு துளிதான் இது. விரிக்கின் மிகும் என்பதால் சுருக்கித் தந்தோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறைப் பங்கு - தோற்றமும் வளர்ச்சியும்

## - விக்ரோறியா -

மாந்தைக்கு அடுத்தாற்போல் கத்தோலிக்கரைப் பெரும்பான்மையினராகக் கொண்ட பட்டினம் ஊர்காவற்றுறையாகும். போர்த்துக்கேயர் காலமுதல் நாநூறு ஆண்டுகளுக்கு மேலாக கத்தோலிக்க பாரம்பரியங்களோடு வளர்ந்த காவலூர்ப்பங்கு பெத்தக்கெனி ஆண்டகையின் காலத்தில் (1849 - 1853) மன்னார்ப் பங்குடன் மதுரை மறைமாவட்டத்தைச் சேர்ந்த இயேசுசபைக் குருமாரின் பரிபாலனத்தின் கீழ் இருந்தது. அதற்கு நெடுங்காலத்துக்கு முன் காவலூர் தீவுப்பற்று அடங்கலாக கோவைக் குரவர் எனப்படும் வேதபோதகக் குருமார் அல்லது தியான சம்பிரதாயக் குருமாரின் பரிபாலனத்தில் இருந்தது. பிரான்சிஸ்கன் சபைக் குருமாரே முதலில் இப்பகுதியில் மறைப்பணியாற்றியவர்கள் எனத் தெரிகிறது. அல்லைப்பிட்டி, மண்டைதீவு, நெடுந்தீவு, லைடன்தீவு, எழுவைதீவு, புங்குடுதீவு அனைத்தும் ஊர்காவற்றுறைப் பங்கு என்ற பெயராலேயே அழைக்கப்பட்டது. அன்றியும் ஊர்காவற்றுறையே தலைமைத் தானமாய் விளங்கிற்று என்பது திருச்சபை வரலாற்றில் காணக்கிடக்கின்றது.

ஆயர் யூலன் ஆண்டகையின் காலத்தில் (1893 - 98) மண்டைதீவு தனிப் பங்குத்தளமாகியது. புங்குடுதீவு, எழுவைதீவு என்பன 1902ம் ஆண்டு முதல் நெடுந்தீவுப்பங்கு எனப் பிரிக்கப்பட்டு பரிபாலிக்கப்பட்டது. எழுவைதீவு 1911ம் ஆண்டு ஊர்காவற்றுறையுடன் இணைக்கப்பட்டது. கரம்பொன் பங்கு 1938ம் ஆண்டு தனிப்பங்குத்தளமாகியது. மண்டைதீவு, அல்லைப்பிட்டி, நாரந்தனை, புங்குடுதீவு என்பன ஒன்றாக இணைக்கப்பட்ட பங்குத்தளமாய் இருந்தது.

1908ம் ஆண்டு ஊர்காவற்றுறை, நாரந்தனை, நெடுந்தீவு, என்பன தனித்தனி நிருவாகப் பங்குகள் ஆகின. மண்டைதீவும், அல்லைப்பிட்டியும் இணைக்கப்பட்டு ஒரு பங்கு ஆயிற்று.

1990ம் ஆண்டின் நிலைவரங்களின்படி சுருவில், மெலிஞ்சிமுனை என்பன கரம்பொன் பங்கு எனவும் நாரந்தனை, சின்னமடு (சரவணை), புங்குடுதீவு என்பன நாரந்தனைப் பங்கு எனவும், மண்டைதீவு அல்லைப்பிட்டி இணைந்து மண்டைதீவுப் பங்கு எனவும், எழுவைதீவு, ஊர்காவற்துறை, அனலைதீவு நயினாதீவு யாவும் ஊர்காவற்றுறைப் பங்கு எனவும் பிரிக்கப்பட்டு நிருவகிக்கப்பட்டது.

காவலூர்ப் பங்கிலே நான்கு ஆலயங்கள் உள. உதய திசையில் புனித அந்தோனியார் ஆலயமும், மேற்கிலே புனித யாகப்பர் ஆலயமும், மத்தியில் புனித மரியாள் ஆலயமும், புனித சூசையப்பர் ஆலயமும் அமைந்து நகரை அலங்கரித்து நிற்கின்றன. இவற்றின் வரலாறுகள் தனித்தனியாகத் தரப்படுகின்றன.

1850ம் ஆண்டுக்குப்பின் அமலமரித்தியாகிகள் சபைக் குருமாரே ஊர்காவற்றுறை உட்படத் தீவுப்பகுதி அடங்கலும் மறைப்பணி ஆற்றினர். கிடைக்கப்பெற்ற விபரங்களின் அடிப்படையில் 1790 களிலிருந்து இங்கு பணியாற்றிய குருமாரின் பட்டியலைக் கீழே தருகின்றோம்.

1854க்குப் பின் உள்ள விபரங்களே ஊர்ஜிதப்படுத்தப்பட்டவைகளாக ஆயர் இல்லப் பதிவுகளை ஆதாரமாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது.

1780 களின் இறுதிப்பகுதியில் கோவைக் குரவரான வண. வியோனாடோ றிபெயிறோ அடிகளார் பணியாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815 வண. டல்காடோ - கோவைக் குரவர்

1816ம் ஆண்டிலிருந்து 1842ம் ஆண்டுவரை வண. செபஸ்தியாங்குதீனு, மற்றும்

வண. சீ. செல்வதோர் பியாதிசு

வண. லவுஸ் தீத்த

வண. பிலிப்நேரியு

வண. கொன்ஸ்தந்தீனு கோமஸ்

வண. கயித்தான் தியேஸ்

வண. சீ. சீ. யூசைப் பேதுரு

வண. சீ. சீ. பேதுரு கொவிஞ்ஞு

வண. பிரான்சீஸ்கு தியேசு

1842 - 1850 தெரியவில்லை

1850 - 1854 வண. சில்வானுஸ் லோறன்ஸ்

1854க்குப்பின் சேவை விபரம் தெரியவில்லை

1877 முதல் வண. X. N. சந்திரசேகரர்

1894 - 1902 வண. E. வேளாண்டர்

1902 - 1907 வண. A. டோறா

1907 - 1910 வண. E. டெலோஜெஸ்

1910 - 1911 வண. N. பெறேறா

1911 - 1913 வண. ஓவென் வில்லியம்

1913 - 1913 ஐப்பசி வரை வண. E. வியாட்சே

1913 கார்த்திகை - 1914 ஐப்பசி வரை வண. F. றோடே

1914 ஐப்பசி - 1918 மார்கழிவரை வண. ஓவன் வில்லியம்

1919 தை - 1921 சித்திரை வரை வண். S. ஆசீர்வாதம்

1921 வைகாசி - 1923 புரட்டாசி வரை வண. H. பெரூசல்

1923 ஐப்பசி - 1924 தை வரை வண. S. R. மாட்டீன்

1924 வைகாசி - 1927 வண. A. டோறா

1927 - 1930 வரை வண. S. G. கில்லறி

1931 ஆவணி - 1931 வண. B. A. மருசலின்

1931 புரட்டாதி - 1932 ஆவணி வரை வண. S. P. அல்பிறட்

1932 புரட்டாதி - 1935 சித்திரை வரை வண. A. பிறெளண்

1935 வைகாசி 1935 ஐப்பசி வரை வண. S. கோமஸ்

1935 கார்த்திகை - 1939 பங்குனி வரை வண. N. யோசெவ்

1939 ஆடி - 1941 ஆடிவரை வண. S. ஆசீர்வாதம்

1941 ஆடி - 1947 மாசி வரை வண. J. A. இராசநாயகம்

1947 பங்குனி - 1948 புரட்டாதி வரை வண. B. வில்லியம் இயேசுதாசன்

1948 ஐப்பசி - 1950 ஆடி வரை வண. N. A. பெனடிக்ற்

1950 ஆடி - 1953 சித்திரை வரை வண. பிலிப் பொன்னையா

1953 ஆடி - 1960 மாசி வரை வண. S. A. ஞானப்பிரகாசம்

1964 தை - 1964 வைகாசிவரை வண. விக்ரர் குரூஸ்

1964 ஆனி - 1965 ஆவணிவரை வண. லோறன்ஸ் சேவியர்

1965 ஆவணி - 1967 ஆவணி வரை வண. M. J. மரியாம்பிள்ளை
(பங்குத்தந்தை, கல்லூரி அதிபர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*1967 ஆவணி – 1969 மார்கழி வரை வண. S. A. சுவாம்பிள்ளை*
*1970 வைகாசி – 1971 வரை வண. தார்சீசியஸ் பெர்னான்டோ*
*1971 வைகாசி – 1972 ஆடி வரை வண. B. E. அல்பிறட்*
*(பங்குத் தந்தை, கல்லூரி அதிபர்)*
*1972 மார்கழி – 1974 மாசி வரை வண. S. J. பிரான்சிஸ்*
*(பங்குத் தந்தை, கல்லூரி அதிபர்)*
*1974 மாசி – 1978 பங்குனி வரை வண. லோறன்ஸ் சேவியர்*
*1978 வைகாசி – 1983 ஆடி வரை வண. A. பிரான்சிஸ் குலாஸ்*
*1983 ஆவணி – 1985 சித்திரை வரை வண. N. பீற்றர்*
*1985 வைகாசி – 1991 சித்திரை வரை வண. S. F. கிருபானந்தன்*

*தற்பொழுது தீவகப் பங்குத் தந்தையாக வண. S. இயூஜின் பிரான்சிஸ் அடிகளார் பணியாற்றுகிறார்.*

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

## இடர்தீர்த்துக் காத்திடம்மா
### (திரை விருத்தம்)

சீராரும் தேவதிரு மகனான இயேசுதனைச்
சித்தமுவந் துதரமேந்திச்
சிதையாத கன்னிகையாய் செப்பரிய அற்புதமாய்ச்
செகமீதே யீன்ற தாயே!
பாராறு பன்னிரண்டு பரவவக வைதனிலே
பற்றுமுயிர் நீத்துயிர்த்துப்
பாதிமதி மீதுமலர்ப் பங்கயமாம் பதமிரண்டும்
பதியவைத் துதயமாகும்
பேராரு மருணபிர காசனையோ ராடையெனப்
பிரியமொடு பூண்டுகொண்டு
பெட்புமிகு வானோர்கள் பிரியாது புடைசூழ்து
பேறுடையா ளென்று போற்ற
ஈராறு விண்மீன்க ளிணைந்தமுடி சிரமேந்தி
எழுந்து பரலோகமேறி
இருக்கின்ற இராக்கினியே ஏங்கியழும் எங்களது
இடர் தீர்த்துக் காத்திடம்மா!!

(ஆசிரியர் அ. யுவக்கீம்பிள்ளை)
– கரம்பொன் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரில் கத்தோலிக்க திருமறை

## வரலாற்றுக் கண்ணோட்டம்

யாழ்ப்பாண இராச்சியத்தைப் போர்த்துக்கேயர் கைப்பற்றிய பின்னரே கத்தோலிக்க சமயம் இங்கு பரவியது என்பதே வரலாறு. போர்த்துக்கேயர் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகப் பிரான்சிஸ்கன் சபைக் குருமாரை ஐரோப்பாவிலிருந்து தருவித்து தற்பொழுது யாழ்ப்பாணக் கோட்டை இருக்கும் இடத்திலே ஒரு ஆச்சிரமத்தை நிறுவி அங்கிருந்துகொண்டே யாழ்குடாநாடெங்கும் தீவுப்பகுதி உட்பட திருமறையைப் போதிக்க வழிவகுத்தனர்.

ஊர்காவற்றுறையில் கிறிஸ்துமறையைப் பரப்ப முதன்முதலில் அனுப்பப்பட்டவர் பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த பிரான்சிஸ்கு டி ஒறியன்ரே அடிகளாரேயாவார். அவர் ஊர்காவற்றுறைத் துறைமுகத்துக்கு அருகிலே ஒரு சிலுவையை நாட்டி, அதற்கண்மையில் ஒரு கொட்டிலை அமைத்து வேதபோதகஞ் செய்து வந்தார். அவரது போதனையாலும், சாதனையாலும் கவரப்பட்ட மக்கள் மறை போதனைகளுக்குச் செவிமடுத்து திருமுழுக்குப் பெற்று கிறிஸ்து மறையைத் தழுவினர். 1591ம் ஆண்டிலிருந்து 1616ம் ஆண்டுவரை யாழ்ப்பாண அரசின் அரசனாகவிருந்த எட்டாம் பரராசசேகரன் ஊர்காவற்றுறையிலே கிறிஸ்துமறை பரவுவதைக்கண்டு சினந்து தனது படைகளை அனுப்பி அதைத் தடை செய்யக் கட்டளையிட்டான். படைவீரர் துறைமுகத்தின் அருகே நடப்பட்டிருந்த சிலுவையைப் பிடுங்கி எறிய முற்பட்டபோது மேற்குறிப்பிட்ட பிரான்சிஸ்கு அடிகளார் சிலுவையைக் கட்டித்தழுவியபடியே, "சுத்தமான சிலுவையே! உன் அரவணைப்பில் நான் இரத்தஞ் சிந்தி மரிக்க எனக்குக் கிட்டுமோ," எனக் கதறி அழுதார். அந்தக் குரவரின் திட சித்தத்தையும் உறுதியான விசுவாசத்தையும் கண்ணுற்றுக் குருவானவருக்கும் புனிதச் சிலுவைக்கும் எவ்வித தீங்குமிழைக்காது படையினர் வந்தவழியே திரும்பிச் சென்றனர் என்கிறது வரலாறு.

மேற்படி சம்பவத்தைக் கண்ணுற்ற மக்கள் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். இதன் காரணமாக குருவானவர்பால் கவரப்பட்டு அவரது போதனைகளைக் கேட்கப் பெருந் தொகையில் வரத்தொடங்கினர். நாளடைவில் பெருமளவு மக்கள் திருமுழுக்குப் பெற்றுத் திருமறையில் சேர்ந்துகொள்வதில் ஆர்வங்காட்டினர். படிப்படியாகப் பலர் கிறிஸ்து மறையைப் பின்பற்றத் தொடங்கினர்.

### ஊர்காவற்றுறையில் போர்த்துக்கேயரால் கட்டப்பட்ட முதல் ஆலயம்

யாழ்ப்பாண இராச்சியத்திலும், தீவுப்பற்றிலும் கத்தோலிக்க சமயத்தைப் போதித்தவர்களுள் கண்ணாடிச் சுவாமியார் என அழைக்கப்பட்ட பேதுறு தே பெற்றங்கோர் சுவாமியார் முன்னோடியாகத் திகழ்ந்தார். இவர் போர்த்துக்கேயர் பெருமளவில் குடியேறியிருந்த யாழ்ப்பாணத்தில் ஓர் பேராலயத்தைக் கட்டவேண்டுமென்று மிகுந்த அக்கறை காட்டினார். தஞ்சாவூர் மன்னன் உபகரித்த பணத்தை முதலாகக் கொண்டு 1614ம் ஆண்டு யாழ்ப்பாணக் கோட்டைப் பகுதியில் வெற்றி மாதா ஆலயம் அமைக்க அத்திபாரமிடப்பட்டது. அதே ஆண்டு ஊர்காவற்றுறையில் புனித யுவானியார் ஆலயத்துக்கும் குருமடத்துக்கும் அடிக்கல் நாட்டப்பட்டது. வாடிவீடு (Rest House) இருந்த இடத்தில்தான் யுவானியார் பெயரால் காவலூரில் முதல் ஆலயம் அமைக்கப்பட்டது. சுங்கப் பகுதிக் கட்டடங்கள் உள்ள இடத்தில் (Customs) குருமடம் அமைந்திருந்தது. அத்திபாரம் இடப்பட்டு பத்து ஆண்டுகளின் பின்பே இக்கட்டட நிர்மாண வேலை முற்றுப் பெற்றது என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்காவற்றுறையைத் தவிர வேலணையில் ஆரோக்கிய மாதா ஆலயமும் அல்லைப்பிட்டியில் புனித சூசையப்பர் ஆலயமும் கண்ணாடிச் சுவாமியாரால் கட்டப்பட்டன. ஊர்காவற்றுறை புனித யுவானியார் ஆலயத்தில் 3,800 கிறிஸ்தவர்களும், வேலணையில் 1,380 கிறிஸ்தவர்களும், அல்லைப்பிட்டியில் 2,700 கிறிஸ்தவர்களும் அன்று பதிவு செய்யப்பட்டிருந்தனர் எனத் தெரியவருகிறது.

அல்லைப்பிட்டி புனித சூசையப்பர் ஆலயத்தின் சிதைவுகளையும், ஊர்காவற்றுறையில் புனித யுவானியார் ஆலயம் இருந்ததற்கான அடையாளங்களையும் இன்றும் காணலாம். ஆயினும் வேலணையில் ஆரோக்கிய மாதா கோவில் இருந்தஇடம் தெரியாமல் முற்றாகவே தரைமட்டமாகிவிட்டது. ஊர்காவற்றுறையில் ஊன்றப்பட்ட வேத வித்தானது ஓங்கி வளர்ந்து கிளைத்துப் பலிதமடைவதற்கு ஏதுவாகத் திருமுழுக்குப்பெற்ற புதிய கிறிஸ்தவர்கள் சத்தியமறையை இஸ்திரமாக கைக்கொள்ளும் பொருட்டு ஒவ்வொரு தலைமை அதிகாரியின் வீட்டிலும் ஒவ்வொரு பிள்ளையை எடுத்து வளைத்து வேத சத்தியங்களைப் படிப்பித்து வரலாயினர். இதன்பயனாகவே காவலூரில் கத்தோலிக்க திருமறை இடையூறெதுவுமின்றி வளர்ந்து, அகலப்பரந்து கிளைத்துச் செழித்தது.

## ஒல்லாந்தராட்சியினால் வீழ்ச்சியுற்ற கத்தோலிக்க திருமறை

1658ம் ஆண்டு ஒல்லாந்தர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியதும் போர்த்துக்கேயரைத் துரத்தி தமது ஆளுகையை நிறுவினர். யாழ்ப்பாணத்திலும் தீவுப் பகுதியிலும் வேரூண்றியிருந்த கத்தோலிக்க திருமறையைச் சாய்த்து அழித்துவிடக் கங்கணங் கட்டிய ஒல்லாந்தர் பல ஒடுக்கு முறைகளைக் கையாண்டனர். துன்புறுத்தல்கள், மரண தண்டனை உட்பட பல சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர். கத்தோலிக்க ஆலயங்கள் அழிக்கப்பட்டன; குருமார் துரத்தியடிக்கப்பட்டனர்; பிரசித்த வழிபாடுகள், திருப்பலிகள் தடைசெய்யப்பட்டன.

ஊர்காவற்றுறையில் புனித யுவானியார் ஆலயமும் குருமடமும் தகர்த்து அழிக்கப்பட்டன; வேலணை புனித ஆரோக்கிய மாதா ஆலயமும், அல்லைப்பிட்டி புனித சூசையப்பர் ஆலயமும் தரைமட்டமாக்கப்பட்டன. சமய அனுட்டானமுமின்றி, குருக்களுமின்றிச் சடங்கு சம்பிரதாயங்கள் யாவும் மறைந்து மக்கள் தத்தளித்தனர். எனினும் பலர் இரகசியமாக வேதக் கடமைகளை அனுசரித்துப் பிரமாணிக்கமாக வாழ்ந்து விசுவாசத்தைக் காப்பாற்றினர். 1687ம் ஆண்டு முதல் ஆசாரத்துக்குரிய யோசெவ்வாஸ் அடிகளாரும் அவரை அடியொற்றிவந்த கோவைக் குருமாரும் கத்தோலிக்க விசுவாசத் தீ அணைந்துவிடாது பாதுகாத்தனர். மறைந்து வாழ்ந்து இரகசியமாக தேவதிரவிய அனுமானங்களையும் செபதப வழிபாடுகளையும், திருப்பலி ஆராதனைகளையும் செய்து ஞான வாழ்வில் மக்களை உறுதிப்படுத்தியதன் பயனாக நூறு வருடத்துக்கு மேலாக ஒல்லாந்தர் தமது கெடுபிடிகளினாலும் பலவந்தங்களாலும் கத்தோலிக்க மறையை அழிக்க எடுத்த முயற்சி தோல்வி கண்டது எனலாம். ஒல்லாந்தராட்சியின் இறுதிக்காலத்தில் சட்டங்களில் தளர்வு ஏற்பட்டதனால் மீண்டும் கத்தோலிக்க திருமறை தழைக்க வழி பிறந்தது. பிரித்தானியர் ஆட்சியில் பூரண மத சுதந்திரம் அளிக்கப்படவே கத்தோலிக்க ஆலயங்கள் எழத்தொடங்கின. திருமறை புத்தூக்கம் பெறத் தொடங்கியது. கோவைக் குருமாரைத் தொடர்ந்து பிரித்தானியர் ஆட்சியின்போது ஐரோப்பிய குருமாரின் வருகையோடு மறுமலர்ச்சி உதயமாயிற்று என்க. சுதேசக் குருக்கள் தோன்றவே நவயுகம் பிறந்தது எனலாம்.

(காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்கள் எழுதிய கரம்பொன் வேளாங்கண்ணி மாதா ஆலய வரலாற்றில் இருந்து தொகுக்கப்பட்டது – மலர் ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு விழாக்காணும் புனித மரியாள் ஆலயம்

செல்வி. ஜசிந்தா சவிரிமுத்து

கோவில்களால் வளம்பெற்ற காவலூர் முன்நாட்களில் 'சின்னறோமை' எனவும் சிறப்பாக அழைக்கப்பட்டது என்பர். பல சமூகத்தினர் வாழும் காரணத்தால் பிரதான நான்கு சமூகத்தினருக்கும் தனித்தனி நான்கு ஆலயங்கள் எழுப்பப்பட்டன. இவ்வாண்டு நூற்றாண்டு விழாக்காணும் புனித மரியாள் ஆலயம் காவலூரின் மத்தியில் கம்பீரமாய்க் காட்சியளிக்கின்றது. சுருவில் வீதியையும், மண்குழி வீதியையும் தொட்டுக்கொண்டு ஓங்கிவளர்ந்த தென்னஞ்சோலையின் நடுவே வானளாவிய கோபுரத்துடன் எடுப்பாய் எழுந்து நிற்கும் இவ்வாலயம் வரலாற்றுப் பழைமைமிக்கது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வரலாற்றுக் குறிப்புகளின் அடிப்படையில் நோக்கினால் தற்போது காவலூரில் அமைந்துள்ள ஆலயங்களுக்குள் முந்தியது புனித மரியாள் ஆலயம் எனத் தெரிகிறது.

1780 களில் கோவைக் குரவரான வண. லியோனாடோ றிபெயிறோ அடிகளார் முதன் முதலில் புனித மரியாளின் நாமத்தினால் ஒரு சிறிய ஆலயத்தைக் கட்டினார் என வண. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் குறிப்பிட்டுள்ளார். நூறு ஆண்டுகளுக்குப் பின் பழைய புனித மரியாள் ஆலயம் இடிக்கப்பட்டு இன்று நாம் காணும் ஆலய நிர்மாணப்பணி தொடங்கியது. 1888ம் ஆண்டு புதிய ஆலயக் கட்டுமானப் பணி ஆரம்பிக்கப்பட்டது. 1895ல் இவ்ஆலய முகப்புக் கட்டிமுடிக்கப்பட்டது. இக்குறிப்பு இன்றும் இந்த முகப்பில் காணப்படுகின்றது. மாதா கோவில் கிறிஸ்தவரான S. M. இராசகாரியர் அவர்களால் இந்தமுகப்புக் கட்டிக் கொடுக்கப்பட்டது. வண. டெலோஜெஸ் அடிகளார் பங்குத் தந்தையாக இருந்த காலத்தில் (1908 - 1910) ஆலயத்தின் நடுப்பகுதி கட்டி முடிக்கப்பட்டது.

பீடப்பகுதிக் கோபுரமும் கப்பலாவும் தென் இந்தியச் சிற்பிகளால் அமைக்கப்பட்டது எனத் தெரிகிறது. அப்பணி 1910ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு 1916ம் ஆண்டளவில் முற்றுப்பெற்றது.

இதற்கிடையில் 1912ம் ஆண்டு வைகாசியில் வணக்கமாத ஆராதனையின்போது, பீடத்தை மறைத்திருந்த கிடுகுத் தட்டியில் தீப்பிடிக்கவே மாதாவின் அலங்காரத் திருவுருவச் சுரூபம் தீபிடிக்கும் ஆபத்திலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்பட்டது என முன்னோர் சொல்லக் கேள்விப்பட்டுள்ளோம்.

சித்திர வேலைப் பாடமைந்த உயர்ந்த சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்து விண்ணேற்ற மாட்சிதரும் மோட்ச அலங்காரியின் எழில் உருவம் காண்பவர்களை ஈர்க்கும் தேவவசீகரம் பொருந்திய அற்புதக் கலைப்படைப்பாகும். தங்கமுடி பளபளக்க மோட்சோமயமாய் காட்சிதரும் அன்னையின் திருமுகத் தரிசனம் பக்தர்களைப் பரவசத்தில் ஆழ்த்தும். மஞ்சவண்ணா மரத்தினால் இந்திய சிற்பி ஒருவர் இங்கு வந்து வடித்துக் கொடுத்த மகத்தான கலைப்படைப்பு இதுவாகும். ஒரு ஆள் உயரமான இந்த அன்னையின் திருக்கோலம்கண்டவர் மெய்மறந்து நிற்பர். இலங்கையில் இதற்கு நிகரான ஒரு அழகுருவத்தை வேறு எங்கேயும் காண முடியாது எனப் போற்றப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் ஆலயத்தின் அபிஷேக விழா ஆலயவரலாற்றில் சிறப்பான ஒரு நிகழ்வாகும். அச்சமயம் காவலூர்ப் பங்குத் தந்தையாகவிருந்த வண. ஜே. ஏ. இராசநாயகம் அடிகளாரின் அயரா முயற்சியால் (1941 - 1947) இவ்வாலயம் 1944ம் ஆண்டு புரட்டாதி மாதம் பதினேழாம் திகதி யாழ் ஆயர் ஜே. ஏ. கியோமார் ஆண்டகை அவர்களால் அபிஷேகஞ் செய்யப்பட்டது. கடந்த ஆண்டு இவ்வாலய அபிஷேக விழாவின் பொன்விழாவாகும். ஆலய அபிஷேகத்துக்கு முன்னோடியாக, புதிய சிங்காசனமும் மாபிள் பீடமும், மாபிள்தளப்பதிப்போடு கிறாதியும் மற்றும் வேலைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாலயத்தை அமைப்பதற்கும், அதை அபிஷேகஞ் செய்வதற்கும், பின் அதைப் பராமரித்து நிருவகிப்பதற்கும் பெரும் பணியாற்றிப் பொருளுதவி செய்த கொடை வள்ளல்களையும், பரோபகாரிகளையும் இந்த நூற்றாண்டு மலரில் நன்றியோடு நினைவு கூருகின்றோம். இவர்களுள் ஒருசிலரைக் குறிப்பிட வேண்டிய கடப்பாடும் எமக்குண்டு.

**ச.த.** என அழைக்கப்படும் பிரபல வர்த்தகரும் அவரது சகோதரர்களும் தம்பொருளில் பெருமளவை இவ்வாலய நிருமாணப் பணிக்கு வழங்கிய கொடை வள்ளல்கள் எனப் போற்றப்படுகிறார்கள். அன்றைய ஆலய நிருவாகிகளாயிருந்த மூப்பர் அந்தோனிப்பிள்ளை, உபதேசியார் சந்தியாப்பிள்ளை, வர்த்தகர்களான S. மனவேற்பிள்ளை, S. இன்னாசிமுத்து, S. சவிரிமுத்து, கொழும்பில் பிரபல வர்த்தகராக விளங்கிய M. பஸ்ரியன் (பார்ளி பஸ்ரியன்) A. M. யோசெவ் (Laiden Industries) மற்றும் ஆலய மக்களோடு காவலூர் மத்தி (நடுத்தெரு) வாழ் பெரு மக்களையும் ஈண்டு நினைவு கூருகின்றோம்.

புனித மரியாள் ஆலய வரலாற்றில் ஆலயத்தின் (கோவிற் பணியாளராக) சங்கிருஸ்தாம் ஆகப் பணியாற்றிய பஸ்ரியாம்பிள்ளையவர்கள் (வண. கிங்ஸ்லி புறூனோ சந்தியாம்பிள்ளை அவர்ளின் பேரன்) முன்னோடியாகத் திகழ்ந்தார். அவரைத் தொடர்ந்து 1928ம் ஆண்டு முதல் 1958ம் ஆண்டுவரை இப்பணியை ஆற்றியவர் திரு. யக்கோப்பிள்ளை சவிரிமுத்து ஆவார். மூப்பர் அந்தோனிப்பிள்ளை அவர்களின் பின் அவரது மகன் அ. பேதுருப்பிள்ளையவர்கள் ஆலயத்தைப் பராமரித்து நிருவகிக்கவும், ஆலய விழாக்களைச் சிறப்பாகக் கொண்டாடவும் அரும்பணியாற்றியதோடு கோவிற் பணியாளர் பொறுப்பையும் ஏற்றுச் சிறந்த தொண்டாற்றிய மரியன்னையின் ஊழியனாக விளங்கி 1988ம் ஆண்டுவரை பணியாற்றினார். இன்று நாம் காணும் ஆலயக் குருமனை மாதாகோவிற் கிறிஸ்தவரான வண. J. பிரான்சிஸ் அடிகளாரின் பெரு முயற்சியால் திரு. S. மனுவேற்பிள்ளை அவர்களால் கட்டிக் கொடுக்கப்பட்டது எனக் கூறப்படுகின்றது. சுமார் எழுபது ஆண்டுகளுக்கு முன் இக்குருமனை கட்டப்பட்டிருக்கலாம் எனக்கொள்ள முடியும். ஆலய மக்களால் உருவாக்கப்பட்ட தென்னந்தோப்பு, 75 ஆண்டு முதிர்ச்சி கண்ட தென்னை மரங்களைக் கொண்டது. ஆலயத்தை அழகு செய்வதோடு ஆலய தாபரிப்புக்கும் அவை உதவுகின்றன.

1960ம் ஆண்டுக்குப்பின் புனித மரியாள் ஆலயமே பங்கின் நடு நிலையமாகவும் பங்குத் தந்தையின் பணி மனையாகவும் செயற்பட்டு வருகின்றது. இன்றைய புனித சூசையப்பர் ஆலயக் கிறிஸ்தவர்களின் மூதாதையர் புனித மரியாள் ஆலயத்தின் உரிமையாளராகவும், பங்காளிகளாகவும் இருந்து இவ்வாலயத்தை உருவாக்க உறுதுணையாய் இருந்தவர்கள் என்பதை குறிப்பிடாதிருக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

75 வருடங்களுக்கு முன் அவர்களின் முன்னோர் புனித மரியாள் ஆலயப் பணிகளுக்குக் கைகொடுத்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாய் இருந்தவர்கள் என்பதை நினைவுகூர வேண்டியது இன்றியமையாததாகும். இவ்வரலாற்றில் பெயர் குறிப்பிடப்படாத பலர் ஆலயப் பணிகளிலும், அதன் வளர்ச்சிக்கான முயற்சிகளிலும் அதன் நிருவாகத்திலும் தம் பங்களிப்பையையும், உடல் உழைப்பையும், ஆதரவையும் நல்கியுள்ளனர். கட்டளைகாரராக, நிருவாகிகளாகப் பணியாற்றி மறைந்த அடியார்கள் உபகாரிகள் அனைவரையும் இந்த நூற்றாண்டு விழாவில் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். மேலும் ஆலயப் பணிகளில் முன்நின்று உழைத்த பங்குத் தந்தையர்கள், திருக்குடும்பக் கன்னியர்கள் அனைவரையும் நினைவு கூர்ந்து நன்றி கூறுகின்றோம்.

### கொட்டாஞ்சேனை சாந்த லூஷியா பேராலயத்தில்

## காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா

- அனுஷா -

காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு நினைவாக ஆவணித் திங்கள் பன்னிரண்டாம் நாள் (12.8.95) அன்று கொழும்பு கொட்டாஞ்சேனை சாந்த லூஷியா பேராலயத்தில் நன்றித்திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது. கரம்பொன் முன்னைநாள் பங்குத் தந்தை அருட்திரு றூபன் மரியாம்பிள்ளை அடிகளார் திருப்பலி நிறைவேற்றினார்.

காவலூரிலிருந்து இடம்பெயர்ந்துவந்து கொழும்பிலும், நீர்கொழும்பிலும் வாழும் மாதாகோவில் மக்களும், ஏனைய பங்குமக்களும், கரம்பொன், நாரந்தனை, சுருவில் மக்களும் திருப்பலியில் பங்குகொண்டு இறைவனின் தாயாம் மரியன்னைக்கு நன்றி செலுத்தி நின்றனர். தேவதாயார் வழியாக நூற்றாண்டு காலமாகப் பெற்றுக் கொண்ட அனைத்து நன்மைகளுக்கும் நன்றி செலுத்தி, விரைவில் சமாதானம் ஏற்பட வேண்டுமென்றும், மீண்டும் சொந்தஊருக்கு அனைவரும்சென்று அமைதியாக வாழ தேவதாயார் பரிந்துரை செய்ய வேண்டுமென்றும் மன்றாடித் திருப்பலி செலுத்தினர்.

நூற்றாண்டு நினைவாக நினைவுமலர் ஒன்றும் வெளியிடப்பட்டது. தினத்தந்தி முழு அளவிலான விசேட சிறப்பிதழைப் பிரசுரித்திருந்தமை பாராட்டுக்குரியதாகும். யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்களும், திருமலை மட்டுநகர் ஆயர் அவர்களும், முன்னாள் பங்குத் தந்தை வண. A. பிரான்சிஸ் குலாஸ் அடிகளாரும், வத்திக்கானிலிருந்து மறைபரப்புப் பேராயத்தில் பணியாற்றும் வண. கலாநிதி ஜே. கமிலஸ் நிமலன் அடிகளாரும் வாழ்த்துச் செய்திகள் அனுப்பியிருந்தமை புனித மரியாள் ஆலய மக்களுக்கு மன நிறைவையும் மகிழ்ச்சியையும் அளித்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

175 ஆண்டு நிறைவைக்காணும்

# புனித அந்தோனியார் ஆலயம் (1820 – 1995)

(ஜே. எவ். ஜே.)

வரலாற்றுப் பெருமைமிக்க ஊர்காவற்றுறையில் கத்தோலிக்க திருமறையின் வரலாறு 400 ஆண்டு பழமைமிக்கது. போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றிய காலமுதல் இப்பகுதியில் திருமறை பரப்பப்பட்டதற்கு வரலாறு சான்று பகருகின்றது. ஊர்காவற்றுறைக் கத்தோலிக்க மக்களின் வரலாற்றில் புனித அந்தோனியார் ஆலயம் மகத்தான இடத்தை வகுத்துள்ளது. காவலூரின் விசுவாச வாழ்க்கையில் இவ்வாலயத்தின் பங்களிப்புச் சிறப்பானதாக இருந்ததை இவ்வாலய வரலாறு எடுத்தியம்புகின்றது. இது தீவுப்பகுதி முழுவதற்கும் நடுநிலையமாகவும், தலைமைத்துவ இடமாகவும் விளங்கியது. பல பங்குத் தளங்கள் தோன்றுவதற்கு முன் இவ்வாலயமே தீவகத்தின் நிருவாக அலகாகச் செயற்பட்டது. திருச்சபையின் ஆளுகைக்குத் தலைமைப் பீடமாக விளங்கியதனால் சகல பதிவுகளும் இங்கேதான் இடம்பெற்றன. அதற்கான ஆவணங்களும். சுவடித் தொகுப்புக்களும் இன்றும் ஆதாரமாக இருக்கின்றன.

டச்சுக்காரரின் ஆட்சிக் காலத்தில் காவலூரில் கத்தோலிக்க ஆலயங்கள் (பெரும்பாலும் உறுதியற்ற ஆலய அமைப்புக்கள்) அழிக்கப்பட்டன, அல்லது சிதைக்கப்பட்டன. டச்சு ஆட்சியின் முடிவில் ஆங்கிலேயர் மதசுதந்திரம் வழங்கியதையடுத்துப் பல ஆலயங்கள் மீண்டும் விரைவாக உருவாகின. காவலூரில் ஆங்கிலேய ஆட்சியின் தொடக்க காலங்களில் முதன் முதலில் அமைக்கப்பட்ட ஆலயம் புனித தோமையார் ஆலயம் என்று கூறப்படுகின்றது. நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1932ம் ஆண்டு எழுதிய காவலூர் புனித அந்தோனியார் ஆலய வரலாற்றில் இதைக் குறிப்பிட்டுள்ளார். தற்பொழுது புனித அந்தோனியார் ஆலயம் அமைந்துள்ள இடத்திலேயே முந்திய தோமையார் ஆலயம் இருந்தது என அவர் எழுதியுள்ளார். டச்சுக்கால வேதகலாபனையினால் கத்தோலிக்க ஆலயங்கள் சிதைக்கப்பட்ட போது அவ்ஆலயங்களில் இருந்த புனிதர்களின் திரு உருவங்கள் விசுவாசிகளால் பாதுகாக்கப்பட்டு நிலத்திலும், கிணறுகளிலும், மரப்பொந்துகளிலும் மறைத்து வைக்கப்பட்டன. அன்று ஊர்காவற்றுறைப் புனிததோமையார் ஆலயத்துக்கண்மையில் ஒரு பாவட்டங்காடு இருந்தது என்றும், விறகுவெட்டி ஒருவர் ஒருமரத்தைத் தறித்த சமயம் அந்த மரப்பொந்தினுள்ளே பதுவைப் பதியராம் புனித அந்தோனியாரின் திருச் சுரூபம் இருப்பதைக் கண்டு பங்குத் தந்தையாருக்கு அறிவிக்கவே பங்குக் குருவானவரும், பக்தர்களும் புனித அந்தோனியாரின் அந்த அற்புத சுரூபத்தை ஆசாரத்துடன் எடுத்து வந்து புனித தோமையார் ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து வைத்தனர் என்பதே வரலாறு. புனித அந்தோனியாரின் பரிந்துரையால் அற்புதங்கள் பெருகின. புனித அந்தோனியாரால் இவ்ஆலயம் பிரபலம் பெறவே புனித தோமையார் ஆலயம் காலகதியில் புனித அந்தோனியார் ஆலயம் ஆனது என்பர். தற்போதுள்ள புனித அந்தோனியார் ஆலயம் 1820ம் ஆண்டு கட்டப்பட்டது. போத்துக்கேயரின் கட்டடவடிவமைப்பைத் தழுவி அமைக்கப்பட்ட முகப்புத் தோற்றத்தைப் பெற்றிருந்த இவ்வாலயம் சமீபகாலத்தில் புனரமைக்கப்பட்டு நவீனமயப்படுத்தப்பட்டது. 1921ம் ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாலய நூற்றாண்டு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. முன்னாள் யாழ் மறைவட்ட ஆயர் புறோ ஆண்டகை நூற்றாண்டுத் திருப்பலியை நிறைவேற்றியமை காவலூர் வரலாற்று நிகழ்வுகளில் சிறப்பானதாகும். 1970ம் ஆண்டு இவ்வாலயத்தின் 150வது ஆண்டு நிறைவு விழாவின்போது யாழ் துணை ஆயர் L. R. அன்ரனி ஆண்டகை திருப்பலி நிறைவேற்றியமை பலருக்கு நினைவிருக்கும். இவ்வாண்டு இவ்வாலயம் 175வது ஆண்டு நிறைவு விழாவைக் கண்டு நிற்கின்றது. பதுவைப் பதியர் பரமபதமடைந்த 700 வது ஆண்டு விழாவை 1932ம் ஆண்டு கண்டு களித்த காவலூர்ப் பங்கு மக்கள். இவ்வாண்டு புனித அந்தோனியார் பிறந்த எட்டாம் நூற்றாண்டு நிறைவைக் கொண்டாட முடியாது இருப்பது மனக்குறையே.

யாழ் ஆயர்களாயிருந்த கென்றியூலன் ஆண்டகையும், அவரைத் தொடர்ந்து மெலிசன் ஆண்டகையும் காவலூரில் பங்குத் தந்தையர்களாக இருந்தனர் என்பதும் அவர்களது காலத்தில் புனித அந்தோனியர் ஆலயக் குருமனையிலேயே தங்கியிருந்தனர் என்பதும் குறிப்பிடற்பாலது. பல வரலாற்று மறை நிகழ்வுகள் புனித அந்தோனியார் ஆலயத்தில் இடம் பெற்றிருந்தன. எதிர்காலச் சந்ததியினரின் நலன்கருதிச் சிலவற்றைக் குறிப்பிடுகின்றோம்.

முதலில் பிரான்சிஸ்கன் சபைக் குருமாரும், யோசேவாஸ் அடிகளாரின் வருகையின் பின் பிரித்தானியர் காலம்வரை கோவைக் குருமாரான தியான சம்பிரதாயசபைக் குருமாரும், இயேசுசபைக் குருமாரும் வேதபோதகப் பணியை மேற்கொண்டனர். அதன்பின் 1845ம் ஆண்டுக்குப் பிற்பட்ட காலப்பகுதியில் அமலமரித் தியாகிகள் சபைக் குருமாரின் வருகையைத் தொடர்ந்து ஐரோப்பிய குருமாரும், சுதேசிகளான அமலமரித் தியாகிகள் (O.M.I.) சபைக் குருமாரும் நீண்ட காலமாக ஊர்காவற்றுறைப் பங்கில் பணியாற்றியுள்ளனர். அமலமரித் தியாகிகளின் வருகையோடு திருச்சபை மறுமலர்ச்சி கண்டது. ஆரம்பகாலத்தில் பல இடர்ப்பாடுகள் எழுந்தன. பிரிவினைச் சபையினர் முரண்பட்டதனால் விசுவாசிகள் இடறல்பட்டனர். விசுவாசத்தில் அவர்களை உறுதிப்படுத்தி, திருச்சபையின் பராமரிப்பிலும் ஆளுகையின் கீழும் அவர்களை ஒன்றுபடுத்த வேண்டிய பெரும்பணியை அமலமரித் தியாகிகள் எதிர்கொண்டனர். மன்னார், மாந்தைப் பகுதியிலும் இவ்வாறான பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டிய சூழ்நிலைகள் அன்று காணப்பட்டன. அவை படிப்படியாக வெற்றிகொள்ளப்பட்டுப் பிரிவினைவாதிகள் மீளவும் திருச்சபையில் சங்கமமாகினர்.

அமலமரித் தியாகிகள் முதன்முதலில் ஊர்காவற்றுறையிலேயே மேற்சொன்ன பிரச்சினைக்கு முகங்கொடுத்து மகாஞானவொடுக்கம் ஒன்றை ஏற்பாடு செய்தனர். 1857ம் ஆண்டு ஆயர் சமேரியா அவர்களது தலைமையில் இந்த ஞான போதக வைபவம் புனித அந்தோனியார் ஆலயத்திலேயே நடைபெற்றது. அப்போது பின்னர் பேராயராக விளங்கிய பொஞ்ஜீன் ஆண்டகையும் (குருவாக இருந்தபோது) இந்த ஞானவொடுக்கத்தில் கலந்து கொண்டவர்களுள் ஒருவராக இருந்தார் என்பது நினைவு கூரத்தக்கது.

அமலமரித் தியாகிகள் நடத்திய ஞானொவாடுக்கத்தின் பொன் விழா 1908ம் ஆண்டு இங்கு கொண்டாடப்பட்டது. அப்பொழுது யாழ்மறை மாவட்ட ஆயர் யூலன் ஆண்டகை ஊர்காவற்றுறைக்கு வருகைதந்து சிறப்பித்தார். 1921ம் ஆண்டு இவ்வாலய நூற்றாண்டுவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டபோது மேதகு புறோ ஆண்டகை வருகை தந்து பெருமைப் படுத்தினார். 1932ம் ஆண்டு புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தோனியார் பரமபதம் அடைந்த 700வது ஆண்டு நிறைவு விழாவின்போது யாழ் ஆயர் J. A. கியோமார் ஆண்டகை திருப்பலி நிறைவேற்றியமை குறிப்பிடற்பாலது.

புனித அந்தோனியாரின் அற்புதத்துக்குச் சான்று பகரும் முக்கிய சம்பவம் ஒன்றையும் குறிப்பிடுவது விசுவாசத்துக்கு உரமூட்டுவதாய் அமையும். 1900ம் ஆண்டு காவலூரில் வாந்தி பேதி தலைகாட்டிப் பலர் மடிந்தனர். இக்கொள்ளை நோய் பரவியதை அறிந்த ஆயர் யூலன் ஆண்டகை தாமே நேராக காவலூருக்கு விஜயம் செய்து, புனித அந்தோனியாரின் அற்புதமான திருச் சுரூபத்தின் முன் முழந்தாள் மடித்துச் செபித்த பின் புனித அந்தோனியாரின் திருச் சுரூபத்தைப் பவனியாக எடுத்து ஆலயத்தைச் சுற்றிவரும்படி கட்டளையிட்டார். அதன் பயனாக அற்புதமாக வாந்திபேதி மறைந்தது எனக் கூறப்படுகிறது. இரண்டு படகுகளில் பெருமளவு உணவுப்பொருட்கள்கூட ஆயர் அவர்களால் காவலூர் மக்களுக்கு நிவாரண உதவியாக அனுப்பிவைக்கப்பட்டது என்பதும் வரலாற்றுக் குறிப்புகளில் காணக்கிடக்கின்றது.

1908ம் ஆண்டு கொண்டாடப்பட்ட ஞானவொடுக்கப் பொன்விழாவின் போது 50 நாள் பரிபூரண பலன் அருளப்பட்டமையும் ஒரு வரலாற்று நிகழ்வாகும். அத்துடன் ஆலய முன்றலில் 1857ல் நாட்டப்பட்ட சிலுவை மரம் புதுக்கி அமைக்கப்பட்டது எனவும் தெரிகிறது.

1905ம் ஆண்டு பாப்பரசரின் பிரதிநிதி மொன்சிஞ்ஞோர் செலஸ்கி ஆண்டகை ஊர்காவற்றுறைக்கு விஜயம் செய்தார் எனவும் அவருக்கு புனித அந்தோனியார் ஆலயத்தில் மாபெரும் வரவேற்பு வைபவம் இடம்பெற்றது எனவும் தெரிகிறது. 1913ம் ஆண்டு அமலமரித் தியாகிகள் சபையின் கிரேஷ்டர் அதிவணக்கத்துக்குரிய டொன்ரென் ஆண்டகை காவலூருக்கு விஜயம் செய்தபோது முழுத்தீவுப் பகுதிக்கும் பாப்பரசரின் ஆசீர்வாம் இங்கு வழங்கப்பட்டது.

1921ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலய நூற்றாண்டு விழாவின்போது வண. L. அகுஸ்தீன் அடிகளாரின் குருத்துவ அபிஷேகம் காவலூரில் இடம்பெற்றது ஒரு சிறப்பான வரலாற்று நிகழ்வு எனலாம். யாழ்ப்பாணப் பேராலயத்துக்கு வெளியே இடம்பெற்ற முதலாவது திருநிலைப்படுத்தல் வைபவம் இதுவே. யாழ் ஆயர் புறோ ஆண்டகை இந்தக் குருத்துவ அபிஷேகத்தை நடத்தி வைத்தார்.

வண. ஒவண் வில்லியம் அடிகளாரின் காலத்திலேயே இவ்வாலயத்தின் புதிய குருமனை அமைக்கப்பட்டதோடு ஆலயமும் புனரமைக்கப்பட்டது. ஆலய முகப்பு 1975ல் புதுக்கி அமைக்கப்பட்டது.

மன்னார் வேத சாட்சிகளின் மரபில் வந்தவர்களின் வழித் தோன்றல்களே புனித அந்தோனியார் ஆலய மக்கள் என்ற பெருமைக்குரியவர்கள் இவர்கள். முதன் முதலில் சாட்டிப்பகுதியில் குடியேறி வேளான் தொழில் செய்து கமம் புலங்களுடன் காணி பூமிகள் நிறைந்து செல்வச் செழிப்போடு இருந்தார்கள். அவர்களின் முன்னோருக்குச் சொந்தமான காணிகள் வேலணை, நாரந்தனை வரை செறிந்திருந்தமைக்குப் பண்டைய தோம்புகள் சான்று பகருகின்றன. பின்னர் இவர்கள் புலம் பெயர்ந்து காவலூரின் உதய திசையில் குடியமர்ந்தனர். ஊர்காவற்றுறை துறைமுக நகரமாக உருப்பெற்று கடல்வணிகம் விருத்தியடையவே உதயதிசைமக்களின் கவனம் கடற்றொழிலால் ஈர்க்கப்பட்டது. அதன் காரணமாக அவர்கள் சிறந்த மாலுமிகளானார்கள். இன்று இவர்கள் இலங்கையின் தலைசிறந்த கப்பற் தளபதிகள் (Captains) ஆகவும் படகு செலுத்தும் வல்லுனர்களாகவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளங்குகிறார்கள். அரச கப்பற் கூட்டுத்தாபனம், தனியார் கப்பல் கம்பனிகள், இலங்கைக் கடற்படை என்பனவற்றில் தொழில்புரிந்து கடற்றொழில் நிபுனர்களாகப் பலர் விளங்கியுள்ளனர். உதயதிசை மக்கள் பக்தியில் சிறந்தவர்கள்; விசுவாசம் மிகுந்தவர்கள்; குருபக்தி மிக்கவர்கள். புனித அந்தோனியாரிடம் மிகுந்த அன்புடையவர்கள். ஆலய விழாக்களை கோலாகலமாகக் கொண்டாடுபவர்கள். ஒழுக்க சீலர்களாக விளங்கிய அவர்களில் இன்று பல கல்விமான்களும் உதயமாகியுள்ளனர். உதயதிசை மக்களின் புகழைப் பறைசாற்ற, பண்டைய வேதசாட்சிகளின் மரபில் உதித்தவர்கள் என்ற பெருமைக்கு அச்சாரமாக அவர்களின் மக்களில் ஒருவர் யாழ் ஆயராக இருப்பது முன்னவர் தவப்பயனேயாகும். மன்னார் மறைவட்டத்தின் முதல் ஆயர் என்ற பெருமைக்குரிய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் உதய திசை மக்களுக்கு மாத்திரமல்ல காவலூருக்கே பெருமை தேடித்தந்துள்ளார்.

காவலூரின் கத்தோலிக்க திருமறை வரலாற்றுடன் பின்னிப் பிணைந்த புனித அந்தோனியார் ஆலயமும் உதயதிசை மக்களும் காவலூர்ப் பங்கில் பிரதான அங்கம் வகித்து வருவது கண்கூடு. வரலாற்று நிகழ்வுகள் பலதைக் கண்ட புனித அந்தோனியார் ஆலயம் வருங்காலத்திலும் வளமான வாழ்க்கைக்கு வழிகாட்டியாக அமைய வேண்டும்.

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

## வரலாற்றுப் பாதையில் புனித யாகப்பர் ஆலயம்

– C. இஸ்ரனிஸ்லாஸ் –

காவலூரில் உள்ள பழமைமிகு மூன்று ஆலயங்களுள் புனித யாகப்பர் ஆலயமும் ஒன்று. இங்கையில் காணப்படும் புனித யாகப்பர் ஆலயங்களில் மூத்தது என வரையறை செய்யப்பட்டவற்றுள் இதுவும் ஒன்று. இவ்வாலயத்தின் பூர்வீகம் அறிய முடியாதிருக்கின்றது. இலங்கையில் ஸ்பானிய நாட்டுக் குருமார் தொண்டாற்றிய இடங்களில் தம்நாட்டின் பாதுகாவலரான புனித யாகப்பரின் பெயரால் ஆலயங்களை எழுப்பினர் எனத் தெரியவருகின்றது. காவலூரிலும் அவ்வாறு நிகழ்ந்திருக்கலாம். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் ஆய்வுகளின்படி இங்கு ஒரு மண்கோவில் இருந்திருக்கிறது. இன்று நாம்காணும் புனிதயாகப்பர் ஆலயத்துக்கு 1815ம் ஆண்டு தை மாதம் முதலாம் தேதி கோவைக் குரவரான வண. டல்காடோ என்ற தியான சம்பிரதாயசபைக் குரவர் அடிக்கல் நாட்டினார் எனத் தெரிகிறது. இவ்வாலய முகப்பு 1854ம் ஆண்டு கட்டி முடிக்கப்பட்டது. முகப்பின் மேல் சம்மனசுச் சுவாமியார் என அழைக்கப்பட்ட வண. விஸ்திரினி அடிகளார் ஒரு சிலுவையை நாட்டினார். இவ்வாலயத்துக்கான புதிய பீடப் பகுதி 1890ல் ஆரம்பிக்கப்பட்டு கட்டுமானப் பணிகள் தொடர்ந்தன. நடுக் கோவிற் சுவர்கள் வண. A. டோறாச் சுவாமியாரின் காலத்தில் கட்டி முடிக்கப்பட்டன. 1911ம் ஆண்டுப் பகுதியில் ஆலயக் கூரை வேலையும் நிறைவு செய்யப்பட்டு ஓட்டினால் கூரை வேயப்பட்டது. அதேகாலத்தில் குருமனையும் கட்டப்பட்டது எனத் தெரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூற்றாண்டின் ஆரம்பகாலத்தில் இவ்வாலயத்தின் மூப்பராயிருந்த சாந்தா குரூஸ் என்பவர் ஆலயப் பணியில் மிகுந்த அர்ப்பணத்தோடு பணிபுரிந்தவர் என அன்றும் இன்றும் இவ்வாலய மூதாதையர்களாலும் வழிந்தோன்றல்களாலும் நினைவுகூரப்பட்டு வருகின்றார். வண. சந்திரசேகரர் ஊர்காவற்றுறையில் பணியாற்றியபோது புனித யாகப்பர் ஆலயத்திலிருந்தே ஒருமாதா சுரூபத்தை எடுத்துச்சென்று சின்னமடுத் திருப்பதியில் தாபித்தார் என சின்னமடு வரலாறு கூறுகின்றது. இங்கு தொம்மைக்குட்டி, அண்ணாவிமனவல், அடப்பனார் முதலிய பெருமக்கள் புகழுடன் வாழ்ந்தனர் எனத் தெரிகிறது. 1975ம் ஆண்டுவரை இவ்வாலயத்தில் சங்கிருஸ்தாமாகவும் மூப்பராகவும் பணியாற்றி ஆலயத்துக்கு அருந்தொண்டாற்றிய பே. குருசுமுத்து அவர்கள் காவலூர் மக்களின் நன்மதிப்பைப் பெற்றிருந்தார்.

காவலூர் மேற்குமக்கள் தனி ஒரு சமூகத்தினராயினும் முழுப்பங்கிலும் சமரச மனப்பான்மையுடன் ஒன்றுபட்டு ஒற்றுமையுடன் வாழ்ந்தவர்கள். பண்பாடு மிக்கவர்கள். சிறந்த மாலுமிகளாகவும் கடலோடிகளாகவும் முன்னணியில் திகழ்ந்தவர்கள். கடல் வணிகத்தில் மிகுந்த ஈடுபாடுடையவர்களாகவும் விளங்கினர். காவலூரின் கத்தோலிக்க பாரம்பரியங்களைக் கட்டிக் காப்பதில் ஊர்காவற்றுறை மேற்குமக்கள் பெரும் பங்கேற்றிருந்தனர் என்றால் மிகையில்லை. கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பேணி வளர்த்தவர்கள். நாட்டுக்கூத்து, நாடகம், இறைவழிபாட்டோடு தொடர்புடைய பாடல்கள் - ஒப்பாரி அம்மானை தேவாரம், திரைவிருத்தம், பசாம் வாசிப்பு என்பனவற்றிலும் பாவைக்கூத்து அல்லது பொம்மலாட்ட சம்பிரதாயத்தில் "பாசு" என்னும் திருப்பாடுகளின் காட்சியைக் காட்டுவதிலும் வல்லவர்கள். மேஸ்திரி மரியான்தம்பி, செபஸ்தியாம்பிள்ளை முதலியோர் இவர்களுள் தலை சிறந்து விளங்கினர். மன்னாரிலும், முல்லைத்தீவிலும் திருப்பாடுகளின் "பாசு" காட்டிப் புகழ்பெற்றவர்கள் இவர்கள் என்பது பெருமைக்குரியதே. போர்க்காலச் சூழலில் மிகவும் பாதிக்கப்பட்டது இவ் ஆலயமேமாகும். 1988ம் ஆண்டளவில் புதிய ஆலயம் ஒன்றை அமைக்க முஸ்திப்புச் செய்யப்பட்டபோதும் நம்நாட்டு நிலைமை இடந்தரவில்லை.

## 75 வருட நிறைவுகாணும் புனிதவளன் ஆலயம்

(1920 - 1995)

(எஸ். ஏ. ஞானரெட்ணம்.

பண்டுதொட்டுப் பண்பாட்டுக்குப் புகுதுறையாய் விளங்கிய காவலூர் கத்தோலிக்க மறையின் வரலாற்றில் ஆலயங்களால் வளம்பெற்று விளங்குவது தனிச் சிறப்பம்சமாகும். காவலூர்ப் பங்கில் அமைக்கப்பட்ட ஆலயங்கள் தொன்மை மிக்கன என்பதைப் பங்கின் ஆரம்பகால வரலாறு எடுத்துரைக்கின்றது. இன்று இங்கு காணப்படும் ஆலயங்களில் மிக அண்மையில் எழுந்ததே புனித சூசையப்பர் ஆலயமாகும். இவ்வாண்டு இவ்வாலயம் அதன் 75வது ஆண்டு நிறைவைக் கண்டு நிற்கின்றது. இவ்வாலய 75வது ஆண்டு விழா கனடாவில் உள்ள ஸ்காபரோவில் கடந்த 7.5.95 அன்று கொண்டாடப்பட்டது என்பதை நம்நாட்டுச் செய்தித் தாழ்களிலும் அறியமுடிந்தது. காவலூரிலிருந்து இடம்பெயர்ந்து கனடாவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழும் புனித சூசையப்பர் ஆலய மக்கள் இந்த விழாவை அங்கு கொண்டாடினர். 1970ம் ஆண்டு இவ்வாலயப் பொன்விழா காவலூரில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டது. அப்போது வெளியிடப்பட்ட பொன்விழா மலரிலிருந்து இந்த ஆலய வரலாற்றைத் திரட்டித்தருகின்றோம்.

காவலூரில் நடுத்தெரு என்னுமிடத்தை (ஊர்காவற்றுறை மத்தி) வதிவிடமாக் கொண்ட மக்கள் பன்னெடுங்காலமாகப் புனித மரியாள் ஆலயத்தின் விசுவாசிகளாகவே இருந்தனர். இன்று நாம் காணும் மரியாள் ஆலயத்தை அமைப்பதற்கும் அதைப் பரிபாலிப்பதற்கும் இன்றைய புனிதவளன் ஆலய மக்களின் மூதாதையர்கள் காத்திரமான பங்களிப்பைச் செய்துள்ளனர். ஆலய விழாக்கள், ஈஸ்ரர் பண்டிகையை ஒட்டிவரும் பாஸ்குப் பெருநாள், மற்றும் விழாக்களிலும், ஆலய நிருவாகத்திலும் தேவமாதா ஆலயத்தின் பெரும்பான்மைச் சமூகத்தினருடன் ஒத்துழைத்துச் சமதையாக வாழ்ந்து வந்தனர்.

இருப்பினும் அவ்வப்போது உரிமைகோரல் அடிப்படையில் திருவிழாப் பங்களிப்பு விடயங்களில் முரண்பட்டுக் கொண்டனர் எனத் தெரிகிறது. சமத்துவத் தார்ப்பரியம், புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை இருசாராரிலும் இல்லாத காரணத்தால் கசப்புணர்வுகள் வலுவடைந்தன. 1917ம் ஆண்டு சித்திரை மாதத்தில் திருப்பாடுகளின் காட்சியின்போது அரும்பிய அபிப்பிராய பேதமே பின்னர் பிரிவினைக்கு வித்திட்டது.

நடுத்தெரு மக்களின் தன்மான உணர்ச்சியும், சுயாதீன மனப்பான்மையும், தமக்கென ஒரு வழிபாட்டுத் தலம் அமைக்க வேண்டுமென்ற எண்ணெத்துக்கு வலுவூட்டின. கௌரவத்தின் உத்வேகமே இவ்வாலயம் எழக்காரணமாகும் என புனித சூசையப்பர் சபைத் துறவியான காலஞ்சென்ற அருட்சகோதரர் வி. பேதுருப்பிள்ளை S. S. J. அவர்கள் புனிதவளன் ஆலய பொன்விழா மலரில் குறிப்பிட்டுள்ளார். மிகச் சிறியளவு மக்கள் தொகையினர் (அன்று 50 குடும்பங்கள்) உறுதிப்பாட்டுடன் கூடிய அயரா உழைப்பினாலும் அர்ப்பணத்தோடும், தியாக சிந்தையோடும், ஒருமைப்பாட்டுடன் செயற்பட்டதன் பயனே இன்று நாம் காணும் புனித சூசையப்பரின் வனப்புறு ஆலயமாகும். கரம்பொன், நாரந்தனை, சுருவில் ஊர்காவற்றுறைப் பகுதியில் வாழ்ந்த தனவந்தர், கொடைவள்ளல்களின் நன்கொடைகளும், புனித சூசையப்பர்சபைத் துறவிகளின் பக்கபலமும், இவ்வாலய மக்களின் உடல்உழைப்பும், உபயமும் எழில்மிகு ஆலயத்தைத் தோற்றுவிக்க உதவின.

புனித சூசையப்பர் ஆலயம் ஆரம்பிக்கப்பட இசைவாக இருந்து அவர்களை ஊக்கப்படுத்தி வழிநடத்தியவர் அக்காலகட்டத்தில் காவலூரின் பங்குத் தந்தையாக இருந்த வண. எஸ். ஆசீர்வாதம் அடிகளாரேயாவார். பெரிய ஆசீர்வாதம் எனப் பங்கு மக்களால் அக்காலத்தில் அன்பாக அழைக்கப்பட்ட ஆசீர்வாதம் அடிகளார் பெயருக்கேற்ற பெருந்தகை என விபரிக்கப்படுபவர். அறிவு ஆற்றல், பரிபாலனத்திறன் மிக்கவர். அவரின் உற்சாகமே புனிதவளன் ஆலயமக்களுக்கு உறுதுணையாய் அமைந்தது. அக்கால கட்டத்தில் உதவிப் பங்குத் தந்தையாக இருந்த வண. P. நீக்கலஸ் அடிகளாரின் அயரா உழைப்பும் பேரூக்கமுமே இவ்வாலயத்துக்கு உருவத்தைக் கொடுத்தது. பசிநோக்காது, கண்துஞ்சாது, கருமமே கண்ணாக உழைத்துத் தம் சுகத்தைக்கூட இழந்தவர் வண. P. நிக்கலஸ் அடிகள். புனித சூசையப்பரைத் தம்பாதுகாவலராகக் கொண்ட புனித சூசையப்பர் சபைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறவிகள் இவ்வாலயத்துக்குக் கைகொடுத்துதவியதோடு புனித சூசையப்பரின் பக்தியையும் இவ்வாலயத்தினூடாகப் பரப்பினர் எனலாம். இந்த ஆலய அமைப்பு சூசையப்பர் பக்தியை வளர்க்க உறுதுணையானதால் அவர்கள் உத்வேகத்துடன் பணியாற்றிப் பெரும் பங்களிப்பினை வழங்கினர்.

கொட்டிற் கோவிலாக ஆரம்பமாகிய இவ்வாலயம் 1920ம் ஆண்டு மாசிமாதம் 17ம் நாள் புனித சூசையப்பருக்கு அர்ப்பணம் செய்யப்பட்டு முதற்திருப்பலி மிக ஆரவாரமாக ஒப்புக் கொடுக்கப்பட்டது. 1925ம் ஆண்டு முன்நாள் யாழ் ஆயர் வந்தனைக்குரிய J. A. கியோமார் ஆண்டகை ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டினார். வண. S. G. கில்லறிச் சுவாமிகளின் காலத்தில் கப்பலாக்கட்டிடப்பணி நிறைவு பெற்றது. நடுக்கோவிற் சுவர்கள் கட்டும்பணி 1936ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மீண்டும் வண. S. ஆசீர்வாதம்அடிகளார் 1937ல் பங்குத் தந்தையாக வந்த காலத்தில் அவரது உதவிக் கட்டளைக் குரவராயிருந்த வண. P. நீக்கலஸ் அடிகளாரின் பெரு முயற்சியால் முன்னெடுக்கப்பட்டது. 1948ல் சுவர்களும் முகப்பும் முற்றுப்பெறவே வண. வில்லியம் இயேசுதாசன் அடிகளாரின் பதவிக் காலத்தில் கூரை அமைக்கப்பட்டது. 1952ல் வண. பிலிப் பொன்னையா அடிகளார் காலத்தில் தளம் சீமேந்திடப்பட்டது. 1967ல் வண. M. J. மரியாம்பிள்ளை அடிகளாரின் முயற்சியால் கப்பலாச் சிறகுச்சுவர்கள் நிறைவுசெய்யப்பட்டன.

வண. B.E. அல்பிறட் அடிகளாரின் காலத்தில் புதிய பீடம் அமைக்கப்பட்டது. மிக அண்மையில் விறாந்தைகள் அமைக்கப்பட்டு பொன்விழாவின்போது முகப்பும் புதுப் பொலிவு பெற்றது.

மிகச் சிறிய சமுதாயமான நடுத்தெரு மக்கள் தியாக சிந்தையோடு புனித சூசையப்பரை மகிமைப்படுத்த தக்கதோர் ஆலயத்தை அமைத்தனர். இன்று அது அலங்காரமாய் நடுத்தெரு வாசிகளின் சொந்த ஆலயமாய் சுதந்திர தீபமாய், சுயமரியாதையின் பட்டொளிவீசி நிற்கின்றது. இவ்ஆலயம். யாழ் குடாநாட்டிலும், தீவகத்திலும் புனித வளனாரின் பக்தியைத் தூண்டும் கலங்கரை விளக்கமாகத் திகழுகின்றது. “கோவில் உயரக் குடி உயரும்.” என்ற முதுமொழிக்கமைவாக புனித சூசையப்பர் ஆலய மக்களும் துரித வளர்ச்சிகண்டு பல குடும்பங்கள் மேன்மையுற்றிருப்பது சான்றாக நிற்கின்றது.

நடுத்தெருவாழ் மக்களின் நெஞ்சங்களில் நீங்காத இடம் பிடித்திருப்பவர் இவ்வாலயத்துக்கு வித்திட்டுப்போஷித்து, கோவிற் பணியில் தம்மையே அர்ப்பணித்து வழிகாட்டி நடுத்தெரு சமுதாயத்தைக் கட்டியெழுப்பக் காரணரான வண. S. ஆசீர்வாதம் அடிகளாரேஎன்றால் அது வெறும் புகழ்ச்சியல்ல.

அண்மைக்காலப் போர்க்காலச் சூழ்நிலைகளால் பாதிக்கப்பட்டு குண்டு வீச்சுக்களுக்கும் ஷெல் அடிகளுக்கும் உள்ளாக்கப்பட்டு ஆலயம் சிதைவுகளை எதிர்கொண்டிருப்பது வேதனை தருகின்றது. பெருந் தியாகத்தின் பயனாகத் தலை நிமிர்ந்த இவ் ஆலயம் இவ்வாறு சேதமுற்று இருப்பது கண்ணீரும், செந்நீரும் சிந்தி அதை உருவாக்கிய மக்களுக்குப் பெரும் உள்ளத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது என்பது உண்மையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியார் கல்லூரி

## அறிவொளி பரப்பிய கலைக்கூடம்

## (ஒரு பழையமாணவன்)

காவலூரின் கலைக்கூடமாய் கலைச்சுடராய் 120 ஆண்டுகளுக்கு மேலாகக் கல்விப் பணியாற்றி நிற்பதுதான் புனித அந்தோனியார் கல்லூரி. ஆன்மீக வளத்துக்கு ஆலயங்கள் போல் அறிவு வளம்பெற கல்விச்செல்வத்தை அள்ளிவழங்கிய அமுதசுரபி அது என்று கூறலாம். தீவகத்தின் முன்னோடிப் பாடசாலையாகத் தலைசிறந்த கல்விமான்களை உருவாக்கிய பெருமை அதற்குண்டு. காவலூர் உட்பட கரம்பொன் சுருவில், நாரந்தனை, சரவணை, வேலணை ஈறாக அயற் கிராமங்களில் உள்ள மக்களின் கல்விக்கு ஊற்றாகத் திகழ்ந்தது. சப்த தீவுகளின் நன்மக்களை உருவாக்கும் பெரும் கலைத்தொண்டை ஆற்றிநின்றது.

கல்வித்துறையில் சமகாலத்தில் தோன்றிய பெரிய கல்லூரிகளுக்கு ஈடுகொடுத்து நல்ல பெறுபேறுகளைக் கண்ட கல்லூரி இது. காவலூர்ப் பங்கின் ஆன்மீக வாழ்வுக்கும், ஒழுக்க நலனுக்கும், விசுவாச உறுதிப்பாட்டுக்கும் உறுதுணையாய் நல்மக்களை உருவாக்கிய பயிற்சிப் பாசறையாய் அது விளங்கியது. காவலூருக்குக் கண் எனத் திகழ்ந்தது இக்கல்லூரி என்றால் அது வெறும் பேச்சல்ல.

யாழ் நகருக்கு வெளியே முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்ட ஆங்கில-சுயமொழிப் பாடசாலை இதுவேயாகும். ஈழத்திருநாட்டிலும் உலகின் பல பாகங்களிலும் பரந்து வாழும் இப்பாடசாலைப் பழைய மாணவர்கள் இக்கல்லூரியின் புகழ்விளங்க சிறந்த பதவிகளை வகித்து உன்னத நிலைகளில் காணப்படுவதே இப் பாடசாலையின் பெயரைப் பறைசாற்றுவதாக உள்ளது. இந்த நாட்டின் வரலாற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட ஆயர்களைப் பெற்று பழைய மாணவரின் புகழிலேபெருமைப்பட்டுக் கொள்ளக்கூடிய ஒரே ஒரு கல்லூரி புனித அந்தோனியார் கல்லூரியே. ஆறு ஆயர்கள் இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் என்ற பேறுடைய கல்லூரி இது வென்றே கூற முடியும். இலங்கையின் முதல் தமிழ் ஆயரும், யாழ் மறைமாவட்டத்தின் முதற் சுதேச ஆயருமான காலஞ்சென்ற J. A. எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகையைத் தொடர்ந்து திருமலை - மட்டுநகர் முதல் தமிழ்த் துணை ஆயரும் பின்னர் யாழ் ஆயராகப் பணியாற்றி ஓய்வு பெற்றவருமான பேரருட்திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையும், முன்னாள் யாழ் துணை ஆயரும், பின் திருமலை - மட்டுநகர் ஆயராகவுமிருந்து இளைப்பாறிய L. R. அன்ரனி ஆண்டகையும், இன்றைய யாழ் ஆயரும் மன்னார் மறை வட்டத்தின் முதல் ஆயராகவுமிருந்த ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், இன்றைய திருமலை - மட்டுநகர் ஆயர் J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களும், மலேஷியா ஆயர் வேந்தக்கோன் ஆண்டகையும் காவலூர் புனித அந்தோனியார் கல்லூரியில் பயின்றவர்கள் என்ற பெருமைக்குரியவர்கள்.

காலஞ்சென்ற பல்மொழி வேந்தர் கலாநிதி தாவீது அடிகள், தவத்திரு தனிநாயக அடிகள் ஆகிய புகழ்மிகு கல்விமான்களும் இக்கல்லூரிக்குப் புகழ்சூட்டித் தந்துள்ளனர். இருபதுக்கு மேற்பட்ட குருக்கள் இக்கல்லூரியில் ஆரம்பக் கல்வியைப் பெற்றுக்கொண்டவர்களாக இருப்பதும் பெருமையே. பெருமைசால் இக்கல்லூரி 1872ம் ஆண்டு ஆரம்பமாகியது. வண. பொயிசோ அடிகளார் தீவுப் பகுதியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைப்பணி ஆற்றியபோது அவரால் ஆரம்பிக்கப்பட்டதுதான் புனித அந்தோனியார் கல்லூரி. அதன் முதல் அதிபராயிருந்த சுவாம்பிள்ளை அவர்கள் ஊர்காவற்றுறைப் பங்குக்கு முதற் குரவரை நல்கிய பெருமைக்குரியவராவார். அவரது மகனே வண. S. ஸ்ரனிஸ்லோஸ் அடிகள் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லூரியின் வளர்ச்சிக்கும், காவலூர் மக்களின் அன்புக்கும் அபிமானத்துக்கும் பாத்திரமானவர்கள், என்றும் நினைவில் நிற்பவர்கள் புனித சூசையப்பர் சபைத் துறவிகளேயாவர். கலை, கலாச்சாரம், பண்பாடு ஒழுக்கம் என்பனவற்றைக் கட்டிக்காத்து வளர்த்த பெருமைக்குரிய துறவிகள் என அவர்கள் போற்றப்படுகிறார்கள். அர்ப்பணச் சிந்தையுடன் அவர்கள் ஆற்றிய அரும் பணிகள் எழுதப்போனால் விரியும்.
1886ம் ஆண்டு தீவகப் பங்குத் தந்தையாகப் பணியாற்றிய வண. J. N. S. சந்திரசேகரர் அடிகளாரின் பெரு முயற்சியால் புனித அந்தோனியார் பாடசாலை (பின்கல்லூரி அந்தஸ்துப்பெற்றது) புனித சூசையப்பர் சபைத் துறவிகளின் பரிபாலனத்துக்கு ஒப்படைக்கப்பட்டது. கல்விப்பணியில் சிறந்து விளங்கிய புனித சூசையப்பர் சபைத் துறவிகள் யாழ் மறைமாவட்டத்திலும் மன்னார், முல்லைத்தீவு, திருமலை, மட்டுநகர் மறைமாவட்டத்திலும், பதுளை, ஹற்றன் பகுதியிலும் அரும்பணியாற்றியதை நாடறியும். பல கல்விமான்களைக் கொண்ட இச்சபை கல்விக்கு ஆற்றிய சேவை காலமெல்லாம் நினைவில் நிற்கவேண்டியதாகும்.
புனித அந்தோனியார் கல்லூரியை ஆங்கிலப் பாடசாலையின் தரத்துக்கு உயர்த்த அரும்பாடுபட்டு, தீவுப்பகுதியில் ஆங்கிலக் கல்விக்கு முன்னோடிகள் ஆனார்கள். காலத்தின் தேவைக்கு ஏற்ப கல்லூரித்தரம்பெற முயன்றுழைத்தனர். மக்களின் பங்களிப்பு, அன்பளிப்புகள், சிரமதானப் பணிகள், நன்கொடைகள், உடல் உழைப்புகளினால் முதலில் இன்றுநாம் காணும் றோ. க. பாடசாலை இருந்த இடத்தில் ஒரு விசாலமான பாடசாலை மண்டபத்தை அமைத்தனர். அதன் பின்னரே 1928ம் ஆண்டளவில் இன்றைய புனித அந்தோனியார் கல்லூரியின் பிரதான கட்டடம் உருவாக்கப்பட்டது.

மக்களால் இன்றும் நினைவுகூரப்படும் தியாகத் துறவிகளான அருட் சகோதரர் பீற்றர்போல், பிலிப், பாக்கியநாதர், லீனஸ், அலோசியஸ், மனுவேற்பிள்ளை என்பவர்கள் அதிபர்களாகவும், அருட்சகோதரர் சைமன், ஜோண்மேரி, அதிரியாம்பிள்ளை, பீற்றர், பேதுருப்பிள்ளை, பெர்னான்டோ, வில்லியம், ரைற்ரஸ், அலெக்சிஸ் ஆகியோர் ஆசிரியர்களாகவும் பணியாற்றியவர்கள். அவர்களுள் சைமன் விறதர் தமிழ்மொழியில் பாண்டித்தியம் பெற்று விளங்கியவர். அவரிடம் தமிழ் பயின்றவர்கள் பின் சிறந்த ஆசிரியர்களாகவும், எழுத்தாளராகவும், கவிஞர்களாகவும் விளங்கினர். அவர்களுள் ஒருவர்தான் காலஞ்சென்ற காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா என்பது பெருமைக்குரியது. கரம்பொன் மேற்கைச் சேர்ந்த முதலியார் குலசபாநாதன், சைமன் விறதர் பயிற்றிய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பெரும் தியாகத்தினால் அரும்பாடுபட்டு உருவாகியதுதான் புனித அந்தோனியார் கல்லூரி. தாம் செய்த ஊழியத்தின் அறுவடையைக் காணுமுன்னரே கல்லூரி நிருவாகம் யாழ்ஆயரின் நேரடிக் கண்காணிப்பில் குருமாரிடம் ஒப்படைக்கப்பட்டது. 1938ம் ஆண்டு வண. A. S. யோசெவ் அடிகளார் கல்லூரிப் பொறுப்பை ஏற்று முதல் குரு அதிபர்ஆனார். அவரது வருகையுடன் இப்பாடசாலை கல்லூரி அந்தஸ்துப் பெற்றுத் துரித வளர்ச்சிகண்டது. 1947ம் ஆண்டுவரை பத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டுக்காலம் அவரது சிறந்த முன்னோடி முயற்சிகளால் கல்லூரி சிறப்புப் பெற்றிருந்தது. அவர் கனவுகண்ட புதிய கல்லூரிக்கட்டடம் வரைபடத்தோடும் மாதிரி உருவத்தோடும் நின்றுவிட்டது. அவரது திடீர்மறைவு இத்திட்டத்துக்கு முற்றுப்புள்ளிவைத்துவிட்டது. எனினும் மேற்குப் பக்கத்தில் காணப்படும் மண்டபம் வண. யோசெவ் அடிகளாரை நினைவுகூர உதவும்.

வண. A. S. யோசெவ் அடிகளாரின் பின் வண. அருள்நேசன் (நீக்கிலாப்பிள்ளை) வண. J. A. கருணாகரர், வண. P. J. ஜீவரெத்தினம், வண. P. J. ஸ்ரனிஸ்லாஸ், வண. M. J. மரியாம்பிள்ளை. வண. பெஞ்ஜமின் அல்பிறட், வண. B. சூசைப்பிள்ளை, ஆகியோரும், வண. S. J. பிரான்சிஸ் அடிகளாரும் இங்கு அதிபர்களாகப் பணியாற்றிக் கல்லூரியின் விருத்திக்கும், வளர்ச்சிக்கும் உழைத்தனர் என்பது ஈண்டு குறிப்பிடற்பாலது. 1960 முதல் தனியார் பாடசாலையாக யாழ் ஆயரால் நிருவகிக்கப்பட்ட இக்கல்லூரி 1975ம் ஆண்டுக்குப்பின் அரசிடம் ஒப்படைக்கப்பட்டது.

வண. B. சூசைப்பிள்ளை அடிகளாரைத் தொடர்ந்து 1979ம் ஆண்டு முதல் திரு. S. A. E. இரட்ணராஜா அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றுப் பலதுறைகளிலும் கல்லூரியை வளர்த்தெடுத்துச் சிறந்த நிருவாகியாக விளங்கினார். இவரே இக்கல்லூரியைப் பொறுப்பேற்ற முதல் பொது நிலையினர் என்பது குறிப்பிடத்தக்கது. 1990ம் ஆண்டு போர்ச் சூழ்நிலைகளினால் இக்கல்லூரி ஈடுசெய்ய முடியாத பேரழிவுகளைக் கண்டு, பெரும் பகுதி சிதைவுற்றுக் காணப்படுகின்றது. நூற்றாண்டு காலமாக காவலூரில் கல்விப்பணிக்குக் கலங்கரை விளக்கமாக ஒளிவீசிய இக்கலைக்கூடம் இப்படி ஒரு நிலைக்கு வந்துவிட்டதைக் காவலூர் மக்கள் மாத்திரமல்ல லைடன் தீவு மக்கள் அனைவருமே பேரழிவாகக் கருதிக் கவலையில் மூழ்கியுள்ளனர். அறிவொளி பரப்பி, மறைப் பணிக்கு கைகொடுத்த மாபெரும் தாபனம் இப்படியாக வேண்டுமா? என்றே எல்லோரும் ஏக்கத் தவிப்பில் தத்தளிக்கின்றார்கள். சமீப காலங்களில் கொத்தணி அமைப்பிலும், வட்டார நிலையிலும் இக்கல்லூரி மைதானம் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டி, விளையாட்டுப் போட்டிகள் என்பன நிகழும் மத்திய நிலையமாக விளங்கியது. சிறந்த விளையாட்டு மைதானத்தை உடைய இப்பாடசாலை பல பொது வைபவங்கள் விழாக்களுக்கு நிகழ்விடமாக விளங்கிப் பெருமை பெற்றிருந்தது. இன்று?..........இதுதான் எல்லோரும் ஏக்கத்துடன் எழுப்பும் கேள்விக்குறி. மீண்டும் இக்கலைக் கூடத்தைப் புனரமைப்பது என்றோ?

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

## காவலூர் ஆலயங்களின் இன்றைய நிலை

**- கரம்பொனூரான் -**

கடந்த ஆண்டு நூற்றாண்டு விழாவைக் கண்ட சரவணை, சின்னமடு செபமாலை மாதாவின் திருத்தலம் 1991ம் ஆண்டு முதல் பக்தர்களின் காலடி படாத திருத்தலமாகப் பற்றைகள் படர்ந்த காட்டுநிலம் போலக் காட்சியளிப்பது அன்னையின் அரவணைப்பில் அல்லும் பகலும் வாழ்ந்த அடியார்களுக்கு இதயக் குமுறலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றது. வருடந்தோறும் பக்திப்பரவசத்தில் மூழ்கி நிற்கும் பக்தர்கள், ஆலயப்பணிசெய்த தொண்டர்களின் உள்ளங்கள் ஏங்கித் தவிக்கின்றன. புண்ணான இதயங்கள் வெம்புகின்றன. சின்ன மடுத் திருத்தலத்தில் நூற்றாண்டு விழா கொண்டாட முடியவில்லையே என்று துடிக்கின்றனர். யுத்த நிலையினால் சொந்த மண்ணில் வாழமுடியாது இடம் பெயர்ந்து நாட்டின் நாலா திசைகளிலும் சிதறிப்போயிருக்கும் அவலநிலையின் தாக்கம் இது.

இந்த ஆண்டு காவலூர் புனித அந்தோனியார் ஆலயம் அதன் 175வது ஆண்டு நிறைவைக் காணுகின்றது. கூடவே புனித அந்தோனியாரின் 800வது பிறந்த ஆண்டு விழாவும் சேர்ந்து வந்தவேளை, சொந்தஊரில் இப்பெருவிழாவைக் கோலாகலமாகக் கொண்டாடிமகிழக் கொடுத்துவைக்கவில்லை. இதுதான் இன்று புனித அந்தோனியார் பக்தர்களின் வேதனை.

காவலூர் புனித சூசையப்பர் ஆலயம் அதன் 75வது ஆண்டு நிறைவைக் காணுகின்றது. ஆனால் விழா எடுக்க அங்கே ஆட்கள் இல்லையே. எப்போது எம் மண்ணில்நின்று எம் ஆலயத்தில் தொழுவோம், வழிபடுவோம். இதுவும் கவலையே.

புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா இவ்வாண்டு கொண்டாடப்பட்டது. ஆனால் அன்னையின் பதியில் இவ்விழாவை ஆரவாரத்துடன் அகமகிழ்ந்து கொண்டாட முடியாத துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டதும் ஒரு துயரமே!

400 வருடப் பழமைமிக்க கத்தோலிக்கமக்கள் ஆண்டாண்டு காலமாகக் கட்டிக்காத்த இப்புனித ஆலயங்கள் வன்முறைச் சம்பவங்களால் கவனிப்பார் அற்று நிராதரவான நிலையில் செடிகொடிகளும், பற்றையும், மரங்களும் வளர்ந்து புதர் மண்டிக்கிடக்க காணும்போது வேதனை தாங்க முடியவில்லை.

வௌவாலும், புறாக்களும் புகலிடந்தேடி அவற்றின் எச்சங்களால் நாற்றமெடுக்கும் கட்டடங்களாக தேவாலயங்கள் மாறிவிட்டன. இருட்டுக் குகைகளாகக் காணப்படும் அவ்வாலயங்களில் அன்று தீபங்களும், தூபங்களும் தினமும் இருந்தன. இன்று விளக்குவைக்க ஆள்இல்லை. அருள்மலிந்த அந்த ஆலயங்கள் இன்று இருள் கவிந்து சூனியமாய்க் காட்சி தருகின்றன. அவை அழகழிந்து பொலிவிழந்து தூர்ந்துபோன புராதனக் கட்டடங்கள் போல் தோற்றமளிக்கின்றன. சில ஆலயங்கள் ஷெல் தாக்குதல்களாலும், குண்டுவீச்சுக்களாலும் குதறப்பட்டுள்ளதைக்காண வேதனைநெஞ்சைப் பிழக்கும்.

சில ஆலயங்களில் அங்கிருந்த புனிதர்களின் திரு உருவங்கள் காணாமற் போயுள்ளன. சில புனிதச் சின்னங்கள் சிதைக்கப்பட்டுள்ளன. மக்களின் வழிபாட்டுத் தலங்களே இப்படி என்றால் மக்கள் குடியிருப்புமனைகள், பாடசாலைகள், பொதுக் கட்டடங்கள், கடைகள், அலுவலகங்கள், தாபனங்கள் உட்பட எல்லாக் கட்டடங்களும் எந்த நிலையில் இருக்கும் என்பதைக் கற்பனைபண்ணிப் பாருங்கள். பிரதான வீதிகள் ஒன்று இரண்டைத்தவிர மற்ற எல்லா வீதிகளுமே புதர்மண்டிக் காட்டுப் பிரதேச வீதிகள் போல் காட்சி தருகின்றன. குச்சு ஒழுங்கைகள், சிறிய வீதிகள் பல இருந்த இடமே தெரியாது மூடப்பட்டுள்ளன. பாழடைந்த மனைகள்போல் குடியிருந்த வீடுகள் தென்படுகின்றன. இது இன்றைய காவலூர், கரம்பொன், நாரந்தனை போன்ற வனப்புறு ஊர்களின் அவல நிலையின் ஒரு துளி. வளம் இழந்த லைடன்தீவின் சோகக் காட்சியின் சில படங்கள். கண்ணறாவிக் காட்சிகளின் கண்ணோட்டக் கீற்று இது. யுத்தம் தந்த அவலங்களின் ஓலச் சிதறல் இவை எனலாம்.

*(தினத்தந்தி 1995 ஜுலை மாதம் 02ம் திகதி)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித மரியாள் மகளிர் பாடசாலையும் திருக்குடும்பக் கன்னியர் பணிகளும்

(திருமதி. பிலோமினா இஸ்ரனிஸ்லாஸ்)

காவலூர்ப் பங்கின் வரலாற்றில் புனித மரியாள் பாடசாலை மகத்தான பணியாற்றியுள்ளதைக் குறிப்பிடாதிருக்க முடியாது. பங்கின் மறைப்பணிக்கும் மகளிர் கல்விப் பணிக்கும் அப்பாடசாலை கணிசமான பங்களிப்பை நல்கியுள்ளது. காவலூரில் அமைந்துள்ள ஒரேஒரு மகளிர் கல்விக் கூடம் இதுவேயாகும். காவலூர் மகளிர் கல்விக்கும், பெண்களின் முன்னேற்றம், ஒழுக்கம், பண்பாடுகளை வளர்த்தெடுப்பதிலும் சிறந்த தாய்மாரை உருவாக்குவதிலும் இப்பாடசாலை அரும்பணியாற்றியிருப்பதை ஈண்டு பெருமையுடன் குறிப்பிடுகின்றோம். நன்றி மறப்பது நன்றாமோ?

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் குறிப்புகளின்படி காவலூர் புனித மரியாள் ஆலயத்துடன் ஒரு ஆங்கில பாடசாலை 1850களில் இருந்தது எனத் தெரியவருகின்றது. அது தனியே மகளிர் பாடசாலையாக இருந்தது எனக் கூறமுடியவில்லை. ஆயினும் 1898ம் ஆண்டு ஊர்காவற்றுறையில் திருக்குடும்பக் கன்னியர்மடம் தாபிக்கப்பட்டதைத் தொடர்ந்து அந்த மகளிர் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கலாம். அதன் அடிப்படையில் ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுகாலம் திருக்குடும்பக் கன்னியர்கள் காவலூரில் கல்விப்பணிஆற்றியுள்ளனர் என்பது தெளிவாகின்றது.

சமய மறுமலர்ச்சிக்கும், விசவாச உறுதிப்பாட்டுக்கும், சமுதாய விழிப்புணர்வுக்கும், மாதர் கல்வி மேம்பாட்டுக்கும், கலை கலாச்சார விருத்திக்கும், வழிபாடுகள், சமய விழாக்கள், ஆலய விழாக்கள் என்பன சிறப்பாக நடைபெறவும், குருமார் தம்பணிகளை திறம்பட ஆற்றவும் திருக்குடும்பக் கன்னியர் சபைச் சகோதரிகள் கைகொடுத்து உதவினர். மறைக் கல்விப் போதனைகளுக்கும், மறைக் கல்வியோடு தொடர்புடைய சமயக் கலைநிகழ்ச்சிகள், போட்டிகள் சமயப் பரீட்சைகள் என்பனவற்றைச் சிறப்பாக நடத்துவதில் பேருதவி செய்தவர்கள் இவர்களே. முதல் நன்மை, உறுதிப்பூசுதல் தேவதிரவிய அனுமானங்களுக்குச் சிறாரை ஆயத்தம் செய்தல், பாடகர் குழாமைப் பயிற்றுதல் போன்ற நல்முயற்சிகளில் பங்குத்தளத்தில் பெரும்பணியாற்றி பங்கின் ஞான வளர்ச்சிக்கு துணை நின்ற திருக்குடும்பக் கன்னியரின் சேவை காவலூர்ப் பங்கின் வரலாற்றில் என்றும் நினைவுகூரப்பட வேண்டியதே.

இப்பாடசாலையின் வரலாற்றில் இங்கு அதிபர்களாகவும், ஆசிரியர்களாகவும், ஞான வழிகாட்டிகளாகவும் பணியாற்றிய திருக்குடும்பக் கன்னியர்சபை அருட் செல்வியரை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

புனித மரியாள் ஆலயத்துக்கு இவர்கள் ஆற்றிய பணிகளுக்காகவும் ஆலய விழாக்களைச் சிறப்பிக்க அவர்கள் தந்த ஒத்துழைப்புக்காகவும் ஆலயமக்கள் என்றும் கடப்பாடுடையர். பல யுவதிகளை மறைப்பணியில் ஊக்குவித்து துறவு வாழ்வுக்கு அவர்களை வழிநடத்தி எம்பங்கில் பல அருட்செல்வியரை தோற்றுவித்தமை மகத்தான ஒரு ஞானப்பணி எனலாம். வாழ்க திருக்குடும்ப கன்னியர் சபை! வளர்க உங்கள் பணிகள்!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்காத நினைவுக்குரிய நாயகன்

போர்க்கால அவலங்களின் மத்தியில் சிக்கித்தவித்த இன்னல் மிகுந்த ஒரு காலகட்டத்தில் பங்கு மக்களைப் பாதுகாத்த தியாகத் துறவிதான் வண. S. F. கிருபானந்தன் அடிகளார். நல்ல ஆயனுக்கு ஓர் எடுத்துக்காட்டு. உயிரையும் துச்சமாக மதித்து மக்கள் சேவையே மகேசன் சேவை என வாழ்ந்து காட்டியவர். 1985ம் ஆண்டு முதல் 1991ம் ஆண்டு வைகாசி வரை காவலூரில் பணியாற்றித் தீவக மக்கள் அனைவரதும் அன்புக்குப் பாத்திரமானவர். 1990 முதல் 1991 வைகாசி வரை இராணுவ நடவடிக்கையால் மக்கள் இடம் பெயர்ந்து நாரந்தனை, சின்னமடு, சாட்டி, சுருவில் முதலிய இடங்களில் உள்ள ஆலயங்களில் தஞ்சமடைந்தபோது அனைத்து மக்களையும் பாதுகாத்துப் போஷித்து ஆதரித்த ஒரு கர்ம வீரன் அவர். இரவு பகல், மழை வெயில், இராணுவ ஆபத்துக்கள் அனைத்தையும் பொருட்படுத்தாது, அரசிடமும், அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்திடமும் உதவிபெற்று மக்கள் பசிதீர்த்தவர். மருத்துவ, சுகாதார நலன்களைக் கவனித்தவர்; நிவாரண உதவிகளைச் செம்மையாக விநியோகிக்க வழி செய்தவர்; வதிவிடவசதிகளைப் பெற்றுக்கொடுத்தவர். அனைவருக்கும் - சாதி சமய பேதமின்றி மனிதநேயப் பணி ஆற்றியவர். இளையோர், முதியோர், வாலிபர், வயோதிபர், நோயாளர் அனைவரது நலனுக்காகவும் குரல் கொடுத்தவர்; மிகவும் சிரமமான பயணங்களைத் துணிவுடன் மேற்கொண்டவர். கோழி தன் குஞ்சுகளைக் காப்பதுபோல் மக்களைக் காத்தவர். காருண்ணிய சீலன், மக்கள் தொண்டன், சிறந்த நிருவாகி, வாக்குவன்மைமிக்க பிரசங்கி, சுருங்கச்சொல்லி விளங்க வைக்கும் ஆற்றல் மிக்கவர். இளைஞர், யுவதிகளை நல்வழிப்படுத்தி மறைப்பணியாற்றியவர். பங்குத்தளத்தில் புதுமைகாண விளைந்தவர்; விழாக்களைச் சிறப்பாக, கருத்துடையதாகக் கொண்டாடுவதில் ஆர்வமுடையவர்; பேரன்புக்குப் பாத்திரமான அடிகளார் பல எதிர்பார்ப்புகளுடன் கூடிய ஒரு எதிர்காலத்தைச் சமைக்க வல்ல இளமையும், உறுதியும், ஆற்றலும் கொண்டவர். அவர் திடீரென நோய்வாய்ப்பட்டிருப்பது அவரது அன்புப் பணியை அவாவிநின்ற மக்களுக்கு ஆறாத்துயரை அளித்துள்ளது. அவரது உடல் நலனுக்காகப் பங்கு மக்கள் செபிக்க கடப்பாடுடையர். எம்மைக் கைதூக்கிக் காத்த வள்ளலை எல்லாம்வல்ல இறைவன் காப்பாற்ற அனுதினமும் பிரார்த்திப்போமாக. யாழ் மறைவட்டம் சிறந்த ஒரு குருவானவரின் சேவைகளை இழக்காதிருக்க இறைவன் கருணைகாட்ட வேண்டுமென மன்றாடுவோமாக.

## நினைவுகூருகின்றோம்

காவலூர்ப் பங்கில் பணியாற்றி இறைவனடி சேர்ந்த பங்குக் குரவர்கள், சங். புனித சூசையப்பர் சபைத் துறவிகள், திருச்சிலுவைக் கன்னியர்கள், திருக்குடும்பக் கன்னியர்கள், கட்டளைகாரர், மூப்பர்கள், கோவிற்பணியாளர், ஆலயப் பணிகளுக்குப் பொருளுதவி செய்து சிறப்பித்தவர்கள், மற்றும் அடியார்கள், உபகாரிகள் அனைவரையும் இந்த நூற்றாண்டு மலரில் நினைவு கூருகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவலூரைக் கைதூக்கிவிட்ட கனவான்கள்
(காவலூரான்)

மறைப்பணியோடு, மனித மேம்பாட்டுக்கும், கல்வி அபிவிருத்திக்கும், கலை கலாச்சாரம், சமூக ஒற்றுமை, ஒழுக்கவிழுப்பங்களின் உயர்ச்சிக்கும் உழைத்துச் சமுதாய நலன்களைப் பேணிவளர்த்த தியாகத் துறவிகள் காவலூரில் பணியாற்றிய புனித சூசையப்பர்சபைத் துறவிகள் என்றால் அது முகஸ்துதியல்ல. மக்களோடு இரண்டறக்கலந்து அவர்கள் இன்பதுன்பங்களில் பங்கெடுத்து மனிதநேயத்தை வளர்த்த அந்தத் துறிவிகள் பலரது மேம்பாட்டுக்கு விசேஷமாக ஏழைக்குடும்பங்களின் உயர்ச்சிக்கு உறுதுணையாயிருந்தனர். இரண்டாம் உலகப்போரின்போது பாடசாலை மாணவருக்கு மதியஉணவு அளித்துப் போஷித்த இந்தப் பெருந்தகையினரை மறக்க முடியுமா? இல்லங்களுக்குச் சென்று மாணவரை விசாரித்து குடும்ப நிலைபரங்களை அறிந்து பின்தங்கிய வகுப்பினரை ஆதரித்து ஏழை மாணவர்கள் பலரை நல்வழிப்படுத்தினர். பக்திச் சபைகளைத் தாபித்து சமய வாழ்க்கையைச் சீர்ப்படுத்தினர். திரு இருதய சபையைத் தோற்றுவித்து இயேசுவின் திரு இருதயப் பக்தியைப் பரப்பினர். ஆலய வழிபாடுகளுக்குச் சிறப்புச்சேர்க்கப் பக்திப் பாடல்களை யாத்து இசைஅமைத்துப் பாடச்செய்தனர். கீர்த்தனை மாலையை உருவாக்கி இசைஅமைத்து இலங்கை முழுவதும் இறைபுகழ்பாடச் செய்த பெருமைக்குரியவர்கள் இவர்களே. புனித அந்தோனியார் கல்லூரியை வளர்த்தெடுத்துச் சிறந்த ஒரு தாபனமாக்க மூலகர்த்தாக்களாய்த் திகழ்ந்தவர்கள் புனித சூசையப்பர் சபைத் துறவிகள்தான் என்று துணிந்து கூறலாம். 50 ஆண்டுகளுக்கு முன் நம்மிடையே அரும்பணியாற்றி, காவலூருடன், கரம்பொன், நாரந்தனை, சுருவில், வேலணை, ஈறாகச் சாதிமத பேதமற்று அனைவரது அன்புக்கும் பாத்திரமானவர்கள். 1896ம் ஆண்டு முதல் இவர்கள் சுமார் 50 ஆண்டுகள்வரை காவலூரில் நற்பணியாற்றி 1945ல் இடம்பெயர்ந்து கிழக்கு மாகாணத்தில் தமது சேவையை நல்கச் சென்றனர். தன்னலங் கருதாது, கைமாறு, எதிர்பாராது காவலூரின் உயர்ச்சிக்கு வித்திட்ட தியாகத் துறவிகளான புனித சூசையப்பர் சபைத் துறவிகளை அன்போடு நினைவு கூருகின்றோம்.

1975களில் இவர்கள் காவலூரில் மீண்டும் பணியாற்ற வந்தமை வரவேற்புக்குரியதே. ஆனால் காலம் சதிசெய்துவிட்டது.

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

### புரந்தருள்வாய் அம்மா தாயே!
(தேவாரம்)

இன்னிசையின் கீதவளம் எங்கும் பொங்க
இதயெமலாம் கருணையலை எழுந்து பொங்க
அன்னை எமதன்னை மரி அன்னை என்றே
அடியார்கள் வாழ்த்துமொலி அருவிபொங்க
இன்னலொழிந் தின்பமிரு நிலத்திற் பொங்க
இணையில்லாப் பேரின்பம் என்றும் பொங்க
பொன்னின் அரியாசனத்தி லினிதமர்ந்தே
புரந்தருள்வாய் மோட்சலங்காரித் தாயே!

"யாழ் ஜெயம்"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊர்காவற்றுறையில் திருச்சிலுவைக் கன்னியரின் தியாகப்பணி

(ஓர் அபிமானி)

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஊர்காவற்றுறை அரசினர் வைத்தியசாலையில் மருத்துவத் தாதிமாராகப் பணியாற்றிய தாய்மாரைப் பலர் மறந்திருக்க மாட்டார்கள். ஆம் அவர்கள் விண்ணில் நின்றுவந்த தேவதைகள் போல் அங்கு திருத்தொண்டாற்றிய மனித நேயப் பணியாளர்கள். சாதிமத பேதமற்று அனைவரையும் அரவணைத்த அன்னையர்கள் அவர்கள். பண்பு, பரிவு, பாசம் மனிதநேயம், அப்பழுக்கற்ற கடமைஉணர்வு, கண்ணியம், கரிசனை சகிப்புத்தன்மை இத்தனை பண்புகளுடன் தேவஉலக மாதரோ, தரும சீமாட்டிகளோ என்று வியப்புறுவண்ணம் தம்பணி வாழ்வை அர்ப்பண சிந்தையுடன் மேற்கொண்டனர். மலர்ந்த முகத்துடன் இதமான மொழிபேசி நோயாளரைப் பராமரிக்கும்போது மருந்தைவிட அவர்களது இன்முகம் கண்டாலே நோய் பறந்துவிடும். சிஸ்ரர் அகுஸ்தீனா, சிஸ்ரர் ஜெம்மா, சிஸ்ரர் இம்மானுவேல், சிஸ்ரர் பெனடிக்ரா முதலியோரைப் பலருக்கு ஞாபகம் இருக்கலாம். தாதிமாருக்கு அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு; மருத்துவ சேவைக்கு ஒரு கலங்கரை விளக்கம். தாய்அன்பை தியாக மனப்பான்மையோடு நோயாளருடன் பகிர்ந்து அன்பெனும் அணிகலம்பூண்டு சகிப்புத்தன்மையுடன் எந்தவேளையிலும் பணியாற்றக் காத்திருப்பது அவர்களது பணிவாழ்வின் இலக்கணமாயிருந்தது. 1930ம் ஆண்டு முதல் சிறிமாவோபண்டாரநாயக்கா அரசாங்கம் சமயத் துறவிகளான கத்தோலிக்க தாதிமார் அரசினர் வைத்தியசாலைகளில் பணி ஆற்றுவதை சட்டமூலம் தடுத்து நிறுத்தும்வரை இந்த அன்னையர்கள் காவலூரில் பணியாற்றினர்.

அவர்கள் பணியாற்றிய காலத்தில் வைத்தியசாலையில் புனிதம், நேர்மை, ஒழுங்கு, கட்டுப்பாடு நிருவாகத் திறமை, சேவை நலம் என்பன சிறப்பாகப் போற்றப்பட்டன. அனைத்து மக்களின் இதயம் கவர்ந்த அந்தத் தாய்மாரின் சேவை மறக்கமுடியாததாகும். அவர்களது வதிவிடத்தில் புனிதமான சிற்றாலயம் ஒன்று தெய்வமணம் கமழ்ந்து தேவதரிசனம் கிடைத்ததுபோன்று அருள்சுரந்து அனைவரையும் ஈர்த்தது. பல ஆண்டுகள் அங்கு புனித அந்தோனியார் கல்லூரி அதிபர்களாயிருந்த குருமார் திருப்பலி செலுத்தி வந்தது மறக்க முடியாத நிகழ்வாகும். அதன் பயனாகவே இன்று அந்த இடத்தில் வேளாங்கண்ணி மாதா பெயரால் ஒரு சிற்றாலயம் வண. லோறன்ஸ் சேவியர் அடிகளாரின் காலத்தில் அமைக்கப்பட்டது. இவ்வாலயம் வைத்தியசாலையில் சிகிச்சைபெற வரும் நோயாளருக்குப் பெருமளவு அருள்வளங்களையும் தெய்வஆசியையும் பெற்றுக்கொள்ள உதவியாக விளங்குகின்றது. தமிழ் மொழியைப் பயின்று மழலை மொழிபேசி நடமாடும் தெய்வங்கள்போல் அறப்பணியாற்றிய அன்னையருள் ஒருவரான சிஸ்ரர் கறோலினா ரைபொயிட் நோயாளியைப் பராமரித்தபோது தானும் அந்நோயினால் பாதிக்கப்பட்டு மரணமானார். அவரது பூதவுடல் ஊர்காவற்றுறை சேமக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது பலரும் அறிந்ததே. காவலூர்மக்கள் இந்த நூற்றாண்டுமலரில் மருத்துவப் பணியால் மகத்துவம்பெற்ற இந்த அன்னையரை நன்றியுடன் நினைவு கூருகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைவளர்த்த காவலூர்க்கலைஞர்கள்

(J. F. ஜெகராஜசிங்கம்)

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ்க் கலைகளோடு சிற்பக்கலையும், படகு கட்டுதல், வார்ப்புத் தொழில், பொம்மலாட்டம், உலோகவேலை, கட்டடக்கலை, கப்பலோட்டுதல் என்னும் இன்னோரன்ன கலைகளில் வல்ல கலைஞர்களை ஈன்ற பெருமை காவலூருக்கு உண்டு. இன்றைய சந்ததியினர் சிலருக்கு இவர்களுள் ஒரு சிலரைப்பற்றித் தெரிந்திருக்கலாம். ஆனால் பல நூற்றாண்டுகளாகப் புகழ்மிகு கலைஞர்கள் காவலூரில் வாழ்ந்து நாடளாவிய கீர்த்தியைப் பெற்றுவிளங்கினர். சிலர் ஊரளாவிய புகழுடையவர்கள். தவக்காலத்தில் இடம்பெற்ற 'பாசு' (திருப்பாடுகளின் காட்சி) வாசாப்பு போன்ற கலைப்படைப்புகளுக்கும், நாட்டுக் கூத்து, இசைநாடகங்கள், போன்ற கலைகளுக்கும் காவலூர் பெயர்பெற்றிருந்தது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்தும் அயந்தீவுகளிலிருந்தும் இக்கலைக் காட்சிகளைக் கண்டுகளிக்க நூற்றுக்கணக்கான கலை இரசிகர்களும் அபிமானிகளும் எமது ஊருக்குப் படையெடுத்தனர்.

சிலசமயங்களில் தம்சொந்த ஊர்களில் அத்தகைய காட்சிகளை மேடையேற்றுவதற்காக எமது ஊரைச்சேர்ந்த கலைவிற்பன்னர்களின் ஆதரவை நாடிவருவர். காவலூர் புனித அந்தோனியார் ஆலயத்தைச் சேர்ந்த பிரபல மேஸ்திரியாரான (சிற்பக்கலை) முத்துக்குட்டியர், அவரின் மைந்தர்களான பெரிய விதானையார், தியோகுப்பறுநாந்து, இம்மனுவேல் மேஸ்திரியார், முதலியோர் இப்பட்டியலில் அடங்குவர். முத்துக் குட்டியரும், இம்மனுவேலும் ஆலய வழிபாட்டுக்குரிய புனிதர்களின் திருவுருவங்களைச் சமைப்பதில் கைதேர்ந்தவர்களாய் விளங்கினர். தென் இலங்கையிலும் முத்துக்குட்டி மேஸ்திரியாரின் புகழ் பரவியிருந்தது. கொழும்பு முகத்துவாரத்தில் புனித யாகப்பர் ஆலயத்திலும் அளவை புனித சூசையப்பர் ஆலயத்திலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள கல்லறைச் சுருவங்கள் முத்துக்குட்டி மேஸ்திரியாரின் கைவண்ணத்துக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். அவரே முதன் முதலில் பாஸ்குக் காட்சிப் பாவைகளைக் கண்இமைக்கச் செய்தவர் என்று புகழப்படுகின்றது.

முத்துக்குட்டியரைப் போலவே அவரது மகன் இம்மனுவேல் அவர்களும் சிற்பக்கலையில் வல்லுனராக விளங்கினார். இளவாலை, புங்குடுதீவு, மண்டைதீவுப் பகுதிகளில் காணப்படும் கல்லறைச் சுருவங்களும், காவலூர் புனித சூசையப்பர் ஆலயத்திலுள்ள கல்லறைச் சுரூவமும் அவரால் உருவாக்கப்பட்டவைகளே. காவலூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் குருசுக்கோவில் முகப்பில் வேலணை வீதியில் அடியாருக்கு அருளீயும் புனித அந்தோனியாரின் திருஉருவம் கலைஞர் இம்மனுவேலின் வினைத்திறனுக்கு எடுத்துக்காட்டாகும். இது சீமேந்தினால் உருவாக்கப்பட்டது என்பர்.

இசைத்துறையில் "கோடையிடி" எனப் புகழப்பட்ட மிருதங்க வித்துவான் ச. பி. தம்பாப்பிள்ளை அண்ணாவியார் உதய திசையில் உதித்த புகழ்மிகு கலைஞனாவார். இணுவில் மயிலன், காரைநகர் முருகன் போன்ற மிருதங்க வித்துவான்களுக்கு ஆசானாக விளங்கியவர் கோடைஇடி தம்பாப்பிள்ளை என்பது பெருமைக்குரியதே. இவர் புகழ்பெற்ற நடிகரும், நாடக இயக்குநருமாகவும் திகழ்ந்தவர். திருகோணமலை, முல்லைத்தீவு, மன்னார்ப் பகுதிகளிலும் அவரது புகழ் பரவியிருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலைமறைகாயாய் இருந்த கரம்பொன், நாரந்தனை, காவலூர்ப் புலவர்களின் பாடல்களைத் தேடிச்சேர்த்துப் புதுப்பித்து அப்புலவர்களுக்கு ஆக்கத்தையும் ஊக்கத்தையும் அளித்து இலக்கியப் பணியாற்றியவர். ஒப்பாரி, அம்மானை, புலம்பல் என்பனவற்றைப் பதிப்பித்துப் பரப்பியவர். சினிமா மெட்டுக்களில் கத்தோலிக்க யாத்திரைத் தலங்களைப் பாடிப் புகழ் பெற்றவர். நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரால் நன்கு மதிக்கப்பட்டவர் அண்ணாவியார் தம்பாப்பிள்ளை என்பது குறிப்பிடற்பாலது.

தம்பாப்பிள்ளை அவர்களோடு நாடகங்களில் ஹார்மோனியம் வாசிப்பதில் கைதேர்ந்து அக்கால நாடக மேடைகளில் சபாஷ்பெற்ற ஒரு கலைஞர்தான் காவலூர் மத்தியைச் சேர்ந்த திரு செல்லத்துரை ஆவார். ஹார்மோனிய வித்துவான் செல்லத்துரையும், மிருதங்க வித்துவான் கோடையிடி தம்பாப்பிள்ளையும் காவலூரில் மாத்திரமல்ல தீவுப்பற்று எங்கணுமே புகழுடன் விளங்கினர். திருவாளர் செல்லத்துரை அவர்கள் உலோகவேலையிலும் சிறந்து விளங்கியவர். "உடையார்" என்ற அடை மொழியால் நன்கு பிரபலமானவர்.

"உடையார்" செல்லத்துரையைப் போலவே அவரது தந்தையார் மரியாம்பிள்ளையும் பிரபலமான ஒரு கலைஞன். "பக்கா மரியான்" என்ற பட்டப் பெயர் அவரது அபார ஆற்றலால் ஏற்பட்டதாகும். கப்பல் கட்டும் தொழிலிலும், பாரிய கப்பல்கள் தரைதட்டினால் அவற்றை மீட்டு எடுப்பதிலும், கப்பல் பழுதுபார்ப்பதிலும், ஆலயமணிகள் வார்ப்பதிலும் கைதேர்ந்தவர் மரியாம்பிள்ளை. தனியார் படகு உரிமையாளராலும், அரச அலுவலர்களாலும், அதிகாரிகளாலும் பாராட்டுப்பெற்ற மதியூகமிக்க தொழிலாளி இவர்.

அந்தோனியார் ஆலய மேஸ்திரிகளின் பின் மாதா கோவிலில் தவக்காலப் "பாசு" காட்டும் கலைநுட்பம் மிகுந்த ஒருவர் பிரபலமடைந்திருந்தார். அவரது கலைப்படைப்புகளான பாஸ்கு உடக்குகள், தலை உருவச் சிலைகள் அடங்கிய பெட்டகம் ஒன்று 1980கள் வரை புனித மரியாள் ஆலயக் களஞ்சிய அறையில் இருந்தது எனச் சொல்லப்படுகிறது. "கிறகம்" என்ற புனை பெயருடைய வஸ்தியாம்பிள்ளை சவரிமுத்து என்ற அக்கலைஞன் மரியாள் ஆலயத்திலும், கரம்பொன் புனித செபஸ்தியார் ஆலயத்திலும் "பாசு" காட்சிகளைக் காண்பித்தவர்.

ஊர்காவற்றுறை மேற்கில் 1970கள் வரை பொம்மலாட்டக் கலையின் அடிப்படையில் திருப்பாடுகளின் காட்சியை "பாசு" என்ற கலைவடிவில் மேடையேற்றுவதிலும் பொம்மைகள் உருவாக்குவதிலும் கைதேர்ந்தவராக விளங்கியவர் திருவாளர் மரியான்தம்பி மேஸ்திரியார். அவரும் திரு. செபஸ்தியாம்பிள்ளை என்பவரும் இத்துறையில் பிரபலமாகியிருந்தனர். 1990 ம் ஆண்டுவரை தவக்காலத்தில் இயேசு சிலுவை சுமக்கும் காட்சி மேற்படி ஆலய மக்கள் சிலரது கலைநுட்ப உதவியுடன் சிறப்பாக இடம்பெற்று வந்ததைக் காவலூர், கரம்பொன், நாரந்தனைப் பங்கு மக்கள் மறக்க முடியாது. காவலூர் ஈழம் புகழும் மதுரகவிப் புலவர் ஒருவரின் தாயகம் என்ற பெருமைக்குரியது. அரைநூற்றாண்டு காலமாக கவித்துவத்தால் தமிழ்மொழியை அலங்கரித்த காலஞ்சென்ற காவலூர்க் கவிஞர் ஞா. ம. செல்வராசா அவர்களைத் தந்தது உதயதிசையே. எண்ணற்ற கவிதைகளையும், பாடல்கள், பதிகங்கள், வரலாறுகள், நாடகங்கள், நாட்டுக் கூத்துக்களைத் தமிழ்கூறும் நல்லுலகுக்குத் தந்த பெரும் கவிஞன் அவர்.

1960 முதல் 1985 வரை பல நாட்டுக்கூத்து நாடகங்களை ஆக்கி, நாட்டக்கூத்துக் கலையை வளர்த்த ஒரு பெரும் புலவர் அவர். ஞான சவுந்தரி,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டாரவன்னியன், அன்னை வேளாங்கண்ணி, புனித அந்தோனியார், புனித யாகப்பர், புனித செபஸ்திரியார் என்னும் நாடகங்களை நமக்குப் புதிதாக எழுதித் தந்தவர். அவை மேடை ஏற்றப்பட்டு புகழ் ஈட்டியவை. தந்தை செல்வா, கலாநிதி சு. வித்தியானந்தன் முதலியோரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்ட காவலூர்க் கவிஞர் என்றும் நினைவு கூரத்தக்க ஒரு கலைஞன் ஆவார்.

ஊர்காவற்றுறை மேற்கில் காவலூர் பட்டினசபையின் ஒரு பகுதியையும் நாரந்தனை கிராமசபையையும் அங்கமாகக் கொண்டு கரம்பொன் வடக்காய் அமைந்த பருத்தியடைப்பு தமிழ்ப் பண்பாடும் சைவசமயப் பற்றும் கொண்ட கடற்றொழிலாளர் வாழும் பிரதேசமாகும். காவலூரின் கத்தோலிக்க மக்களும், பருத்தியடைப்பு மக்களும் நெருக்கமான அந்நியோன்னியத்துடன் வாழ்ந்து வருகிறார்கள். சகோதர சமத்துவ மனப்பான்மை நிலவிவருகின்றது. அமைதிக்கு அச்சாரமானது பருத்தியடைப்பு. இந்தியத் தொடர்பு காரணமாக கடல்வணிகத்தில் ஈடுபட்டு மாலுமிகள் நிறைந்து காணப்படும் ஒரு குறிச்சி பருத்தியடைப்பு. இந்தியாவில் இசை, நடனம் முதலியவற்றைக் கற்று அவர்களில் பலர் இசைக் கலைஞர்களாகவும் நடனசிகாமணிகளாகவும் திகழுகிறார்கள். இலங்கை வானொலிபுகழ் கலைஞர்களை உருவாக்கிய பருத்தியடைப்பு காவலூருக்கு கலைத்துறையில் புகழ்சேர்த்துள்ளமை ஈண்டு குறிப்பிடற்பாலது.

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

## காவலூரின் குருமணிகள்

விசுவாசப் பற்றுறுதி கொண்ட காவலூரை ஆலயங்கள் அலங்கரிப்பது போல யாழ்ப்பாணத் திருச்சபையை அலங்கரித்த குருதிலகங்களை ஈன்ற புண்ணிய பூமியாகவும் காவலூர் விளங்குவது அவர்களின் விசுவாசத்துக்குச் சான்றாகத் திகழுகின்றது. இன்றைய யாழ் ஆயரையும், திருமலை மட்டுநகர் ஆயரையும் தந்து புகழ் பெற்றிலங்கும் பேறுடைய பூமி அது. வரலாற்றுச் சிறப்புக்கு இவர்களின் திருச்சபைத் தலைமைத்துவம் கலங்கரை விளக்கமாக அமைகின்றது.

காவலூர்ப் பங்கின் முதல் குரவர் என்ற பெருமைக்குரியவர் வண. எஸ். ஜே. ஸ்ரனிஸ்லாஸ் O. M. I. அடிகளாராவார். அவர் மாதா கோவில் கிறிஸ்தவர்கள் திருச்சபைக்களித்த முதற்கனி என்று இறும்பூதெய்துவதில் நியாயமுண்டு. அவரைத் தொடர்ந்து வண. J. பிரான்சிஸ் அடிகளார் காவலூரின் இரண்டாவது குருமகனாவார். அவரும் புனித மரியாள் ஆலய மக்களின் தவப்புதல்வர்களில் ஒருவரே. இன்று திருமலை மட்டுநகர் ஆயராகத் திருச்சபையின் இளவரசர்களுள் ஒருவர் என்ற பதவியை அலங்கரிக்கும் ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளையும் மாதா கோவிலின் மைந்தன் என்றால் அது பெருமைப்பட வேண்டிய பெரும் பேறல்லவா?

ஈழமணித் திருநாட்டில் திருச்சபை என்னும் இறைவனின் திராட்சைத் தோட்டத்தில் இறைபணியாற்றிய, ஆற்றுகின்ற அருந்தவப் புதல்வர்களை உருவாக்கிய காவலூர் ஆசீர்வதிக்கப்பட்ட பூமியே.

காவலூர்ப் பங்கின் குருதிலகங்களின் விபரம் அடுத்தபக்கத்தில் தரப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரின் குரு திலகங்கள்

| பெயர் | பிறப்பு | குருத்துவம் | பங்கின் ஆலயம் | மறைவு |
|---|---|---|---|---|
| 1. வண. S. J. ஸ்ரனிஸ்லாஸ் O.M.I | .2-3-1880 | 24-1-1907 | புனித மரியாள் ஆலயம் | 02-04-1949 |
| 2. வண. J. பிரான்சிஸ் O.M.I. | 4-7-1879 | 31-1-1909 | புனித மரியாள் ஆலயம் | 22-04-1949 |
| 3. வண. L. J. அகுஸ்தீன் O.M.I. | 8-4-1892 | 31-1-1921 | புனித மரியாள் ஆலயம் | 14-04-1972 |
| 4. வண. M. S. நல்லையா O.M.I. | 9-12-1893 | 28-1-1924 | புனித மரியாள் ஆலயம் | 09-03-1963 |
| 5. வண. S. S. சூசைநாதர் O.M.I. | 17-12-1906 | 12-12-1933 | புனித மரியாாள் ஆலயம் | 11-09-1963 |
| 6. வண. X. S. தனிநாயகம் O.M.I. | 1-8-1913 | 19-3-1938 | புனித மரியாள் ஆலயம் | 01-09-1980 |
| 7. வண. M. இம்மானுவல் O.M.I. | 27-7-1927 | 6-8-1950 | புனித மரியாள் ஆலயம் | |
| 8. வண. J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை | 9-12-1936 | 20-12-1961 | புனித மரியாள் ஆலயம் | |
| 9. வண. B. மேரி யோசெவ் C.R. | 18-5-1930 | 15-6-1971 | புனித மரியாள் ஆலயம் | |
| 10. வண. S. L. மரியநாயகம் S.J. | 21-5-1937 | 6-4-1970 | புனித மரியாள் ஆலயம் | 04-01-1993 |
| 11. வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் | 13-5-1948 | 24-4-1974 | புனித மரியாள் ஆலயம் | |
| 12. வண. J. கமிலஸ் நிமலன் | 15-3-1958 | 18-4-1983 | புனித மரியாள் ஆலயம் | |
| 13. வண. M. ஞானப்பிரகாசம் | 17-11-1947 | 11-8-1984 | புனித மரியாள் ஆலயம் | |
| 14. வண. விக்ரர் இம்மனுவேல் இராசநாயகம் | 1916 | 28-12-1942 | புனித அந்தோனியார் ஆலயம் | 17-11-1972 |
| 15. வண. தோமஸ் சவுந்தரநாயகம் | 13-7-1938 | 12-12-1963 | புனித அந்தோனியார் ஆலயம் | |
| 16. வண. கில்லறி ஜெபநேசன் | 17-9-1934 | 01-9-1962 | புனித யாகப்பர் ஆலயம் | |
| 17. வண. சாள்ஸ் கொலின் | 25-5-62 | 31-7-1990 | புனித யாகப்பர் ஆலயம் | |
| 18. வண. யூலியஸ் இராசையா | 20-11-1922 | 2-3-1985 | புனித சூசையப்பர் ஆலயம் | 09-11-1992 |
| 19. வண. ஜெயராஜ் இராசையா S.J. | 9-7-1958 | 26-5-1991 | புனித சூசையப்பர் ஆலயம் | |

**காவலூர்த் துறவி**

*அருட் சகோதரர் ரெறன்ஸ் அஞ்சலோ சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ்கன் சபை - அமெரிக்கா - அவர் காவலூர் புனித மரியாள் ஆலயத்தைச் சேர்ந்தவர் என்பதையிட்டு நாம் பெருமைப்படுகின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூர் தந்த ஆயர் திலகங்கள்

## யாழ் ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம்



யாழ் மறைமாவட்டத்தை அலங்கரித்த சுதேச ஆயர்கள் வரிசையில் மூன்றாவது ஆயராக இன்று விளங்குகின்ற ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையவர்களைத் திருச்சபைக்கு நல்கிய பெரும்பேறுபெற்றஊர் காவலூராகும். அடுத்தடுத்து இரண்டு மறை மாவட்டங்களின் ஆட்சிப் பொறுப்பை ஏற்றவர் என்ற பெருமையும் அவருக்கே உரியது. மன்னார் மறை வட்டத்தின் முதல் ஆயர் என்ற புகழும் அவர் மூலமாக நமது மண்ணுக்குக் கிடைத்துள்ளது. உதயதிசையின் விடிவெள்ளி, காவலூரின் கலங்கரை விளக்கம், புனித அந்தோனியார் ஆலயம் தந்த அருந்தவப் புதல்வன். தாயகப் பெருமைக்குரிய சீரிய செம்மலை இந்த நூற்றாண்டு மலரில் வாழ்த்துகிறோம்.

| | |
|---|---|
| பிறப்பு உதயதிசை ஊர்காவற்றுறை | 20-07-1938 |
| குருத்துவம் | 21-12-1963 |
| மன்னார் மறைவட்ட ஆயராக நியமனம் | 24-01-1981 |
| ஆயராக பிரகடனம் | 27-05-1981 |
| ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டது (மடுப்பதியில்) | 30-07-1981 |
| மன்னார் மறைமாவட்டத்தைப் பொறுப்பேற்றது | 02-08-1981 |
| யாழ் ஆயராகப் பிரகடனம் செய்யப்பட்டது | 08-08-1992 |
| யாழ் ஆயராகப் பதவி அமர்வு | 05-11-1992 |

***வளர்க நின் பணி! வாழ்க நின் செங்கோல்!***

## திருமலை மட்டுநகர் ஆயர் J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை



விசுவாசப்பற்றுறுதிகொண்ட காவலூர்மக்களில் ஒருவரான ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை காவலூர்ப்பங்கின் விசுவாச வாழ்க்கைக்கு மற்றுமொரு ஆசீர்வாதமெனலாம். புனித மரியாள் ஆலயமக்களின் தவப்பயனான ஆண்டகை கிங்ஸ்லி சுவாம்பிள்ளை திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்தின் மூன்றாவது தமிழ் ஆயர் என்ற பெருமைக்குரியவர். கரம்பொன் பங்கும் காவலூர்ப் பங்கும் இந்த மூன்று ஆயர்களையும் கிழக்கிலங்கைக்கு நல்கியதனால் பெருமைப்பட நியாயமுண்டு. தாயகத்தின் பெருமைக்குக் காரணமான ஆயர் அவர்களை நூற்றாண்டு மலரில் பங்குமக்கள் சார்பாக வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம். பிறந்த மண்ணின் பேர்விளங்க பெருமை பெற்ற ஆயர் திலகமே!

***இறையருள் நிறையப்பெற்று இனிது நின் கொற்றம் வாழ்க!***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| பிறப்பு ஊர்காவற்றுறை - மண்குழி | 09-12-1936 |
| குருத்துவ அபிஷேகம் - றோமாபுரியில் | 20-12-1961 |
| திருமலை - மட்டுநகர் ஆயராக நியமனம் | 07-04-1983 |
| ஆயராக அபிஷேகம் - றோமாபுரியில் | 07-05-1983 |
| ஆயராகப் பதவியேற்பு | 07-06-1983 |

**அமைதியின் அண்ணல் ஆயர் L. R. அன்ரனி ஆண்டகை**



காவலூரின் சகோதரப்பங்காக விளங்கும் கரம்பொன்பங்கு. யாழ் மறைமாவட்டத்துக்கு மூன்ற ஆயர்களைத் தந்த புகழ்ச்சிக்குரிய பங்காகும். இவ் ஆயர்களில் இருவர் திருமலை - மட்டுநகர் மறைமாவட்டத் துணை ஆயர்களாகவுமிருந்த சிறப்புக்கு உரியவர்கள். L. R. அன்ரனி ஆண்டகையே இக்னேஷஸ் கிளென்னி ஆண்டகையின் வாரிசாக அந்தமறைமாவட்ட முதல் தமிழ் ஆயராகும் பேறு பெற்றவர். முதலில் யாழ் ஆயர் எமலியானுஸ்பிள்ளைக்குத் துணை ஆயராகவும் அவரது மறைவுக்குப்பின் யாழ் மறை வட்டப் பரிபாலகராகவும் பணியாற்றியவர். 1983ம் ஆண்டு ஆனி மாதத்தில் இளைப்பாறித் தற்போது திருமலை ஆயர்இல்லத்திலிருந்து ஆயர் கிங்ஸ்லி அவர்களுக்குத் துணையாயிருக்கிறார். அமைதியின் அண்ணல், ஆடம்பரமற்ற ஆயர். அன்னைமரியில் அளவற்ற அன்புடையவர். அவரது பதவிக்காலத்தில் நம்பங்கில் கரிசனை உள்ளவராயிருந்தார். நம் ஆலயவிழாக்களைச் சிறப்பிக்க அழைத்தபோதெல்லாம் ஆவலாய் வருவார். புனித மரியாள்ஆலயத்தில் தாம் திருமுழுக்குப் பெற்றதையும் உறுதிப்பூசுதல் அருளப்பட்டதையும் மறவாது நினைவு கூருபவர். அவரது பணிகளை நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

| | |
|---|---|
| பிறப்பு - கரம்பொன் | 19-04-1927 |
| குருத்துவ அபிஷேகம் | 07-12-1954 |

மரியாயின் வருடமான 1954ல் றோமாபுரியில் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டவர்.

ஆயர் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் துணைஆயராக 10-10-1968ல் நியமனம் பெற்றார்.

| | |
|---|---|
| ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டது | 21-11-1968 |
| திருமலை மட்டுநகர் துணை ஆயராக நியமனம் | 30-1-1973 |
| திருமலை மட்டுநகர் ஆயராக பதவி உயர்வு | 25-03-1974 |
| இளைப்பாறியது | 07-06-1983 |

***ஆண்டகையே நீடு வாழ்க என வாழ்த்துகிறோம்.***

**கரம்பொன் ஈன்ற அரும்பொன்**

நிகழ்கால வரலாற்றில் நிரந்தர இடம்பிடித்துச் சரித்திரநாயகனாகத் திகழ்பவர்தான் முன்னாள் யாழ் ஆயர் வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை. நெருக்கடி மிகுந்த ஒரு காலகட்டத்தில் இரண்டு தசாப்தகால ஆளுகையைப் போற்றும் விதத்தில் ஆற்றிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆயர் வ. தியோகுப்பிள்ளை



பெருந்தகை. மக்களின் துன்பங்களையும், அவலங்களையும் மனிதநேயத்தோடு நோக்கித் துயர்துடைப்புப் பணிகளுக்காக மனிதமுன்னேற்ற நடுநிலையத்தை அமைத்தவர். ஈழத் தமிழ்மக்கள் பெரும் இன்னல்களையும், அடக்கு முறைகளையும், சவால்களையும் எதிர்கொண்டவேளையில் உள்நாட்டிலும், உலக அரங்கிலும் உரிமைக்குரல் எழுப்பிய ஒரு வீரபுருஷன். அஞ்சா நெஞ்சுரம்மிக்க குரலாய் ஒலித்த நீதியின் மைந்தன்.

தமிழ்மண்ணில் ஆயர் அவர்களின் தனித்துவமான தமிழ்ப்பணி தமிழ்கூறும் நல்லுலகெங்கும் போற்றப்படுகின்றது. கலைப்பணிக்கும் திருமறைப்பணிக்கும் தம்மை அர்ப்பணித்து வழிகாட்டி வாழ்ந்த பெருமகன் அவர். தமிழ்மொழி, தமிழர் கலை, தமிழர் பண்பாடு, தமிழ் மரபு இவை அனைத்தோடும் கிறிஸ்தவம் இணைய வேண்டுமென்ற பேரார்வங்கொண்டு பணியாற்றியவர். ஈழத் தமிழரின் கலை வடிவங்களைப் பேணுவதில் வேட்கை கொண்டுழைத்தவர். சாதி மத பேதமற்று அவரது ஆளுமையை அனைவரும் போற்றி மதித்தனர். காலத்தின் தேவைக்கேற்ப கடவுள் நமக்குத்தந்த நம் ஆயர் அவர்களை நம் சகோதரப்பங்கான கரம்பொன் தந்த அருங்கொடை என்று பெருமைப்படுகின்றோம். காவலூர் அவரது பராமரிப்பில் பெற்ற அளப்பரும் நன்மைகளுக்காக இவ்வேளை நன்றிப்பெருக்குடன் நீடுவாழ்க என வாழ்த்துகின்றோம். காவலூர் இளைஞர் நலனில் அக்கறை கொண்டு அவர்களை நல்வழிப்படுத்தும் நோக்குடன் அவர் தோற்றுவித்த எமிலியானுஸ் தொழிற் பயிற்சி நிலையம் அவரை என்றும் நினைவுபடுத்தும் ஞாபகச் சின்னமாயிருக்கும். காவலூரில் காலமெல்லாம் நினைவு கூரத்தக்க பணிகள் ஆற்றி 1945ம் ஆண்டு நம்பதிவிட்டு நீங்கிய புனித சூசையப்பர் சபைத் துறவிகளை மீண்டும் நம்மிடை பணிசெய்ய அழைத்து நமது மக்களை வழிநடத்த ஆயர் தியோகுப்பிள்ளை அவர்கள் எடுத்த முயற்சிக்காக நாம் அவரைப் பாராட்டவே வேண்டும். திருமலை - மட்டுநகர் முதல் தமிழ் துணை ஆயராகவும் யாழ் மறைமாவட்ட இரண்டாவது தமிழ் ஆயராகவும் பணியாற்றிப் பெருமைபெற்ற ஆயர் தியோகுப்பிள்ளையவர்கள் 1992ம் ஆண்டு 75 வயதுப் பூர்த்தியையும், 50 ஆண்டு குருத்துவப் பணி நிறைவையும் ஆயர் பதவியில் 25 ஆண்டு நிறைவையும் ஒருங்கே கண்டுகளித்து இளைப்பாறியுள்ளார்.

இலங்கையில் ஆயர்பதவிக்கு உயர்த்தப்பட்ட முதல் மேற்றிராசனக்குரு ஆயர் தியோகுப்பிள்ளை என்பது குறிப்பிடற்பாலது.

| | |
|---|---|
| பிறப்பு - கரம்பொன் | 09-04-1917 |
| குருத்துவ அபிஷேகம் (றோமாபுரியில்) | 22-12-1941 |
| திருமலை மட்டுநகர் துணை ஆயராக நியமனம் | 09-02-1967 |
| திருமலையில் ஆயராக அபிஷேகம் | 11-05-1967 |
| யாழ் ஆயராகப் பதவி ஏற்றல் | 1972ம் ஆண்டு |
| ஓய்வு பெற்றது | வைகாசி 1992ம் ஆண்டு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காவலூரை நேசித்த கரம்பொனூர்க் கோமான்

**ஆயர் J. எமிலியானுஸ்பிள்ளை**



ஈழத்திருநாட்டின் முதற் தமிழ் ஆயர்; யாழ் மறை மாவட்டத்தின் முதற் சுதேச ஆயர். 23 ஆண்டுகள் ஆயராகப் பணியாற்றி இலங்கையின் எத்திசையிலும் கீர்த்திபெற்றிருந்தவரே காலஞ்சென்ற எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை. செல்வாக்கு மிக்க இராசதந்திரிக்கு நிகரான கௌரவம் பெற்றிருந்தவர். காவலூரை நேசித்த கனவான். புனித அந்தோனியார் கல்லூரியை தனியார் பாடசாலையாகத் தானே நிருவகித்துக் கத்தோலிக்க பிள்ளைகள் கத்தோலிக்க சூழலில் கல்வி கற்க வேண்டும் என்று ஆசித்தவர். காவலூரைத் தன் கண்மணிபோல நேசித்துப் போஷித்தவர். அதன் வளர்ச்சியில் கருத்தாய் இருந்தவர். எமிலியானுஸ்பிள்ளை தொழிற்கல்வி நிலையம் அவரது நினைவுச் சின்னமாக இருக்கின்றது. அன்னாரை இந்த நூற்றாண்டு மலரில் மிகுந்த நன்றியோடு நினைவு கூருகின்றோம்.

| | |
|---|---|
| பிறப்பு | 1901ம் ஆண்டு |
| குருத்துவ அபிஷேகம் | 1929ம் ஆண்டு |
| ஆயராக அபிஷேகம் | 1949ம் ஆண்டு |
| மறைவு | 17-7-1972ம் ஆண்டு |

## பெருமைப்படுகின்றோம்

காவலூரின் தவப் புதல்வர்களுள் ஒருவரான வண. கலாநிதி கமிலஸ் நிமலன் ஜோண்பிள்ளை அடிகளார் வத்திக்கான் மக்கள் நற்செய்தி அறிவிப்புப் பேராயத்தில் பணியாற்றுவதற்காக 16.9.94ல் நியமனம் பெற்றுள்ளமை காவலூருக்கும் பெருமையளிக்கும் செய்தியாகும். யாழ்மறைமாவட்டக் குரவர் ஒருவருக்குக் கிடைத்துள்ள இப்பெரிய கௌரவம் அவரின் தாயகத்துக்குக் கிடைத்த பெரும்பேறாகும். சிறப்பாக மாதாகோவில் மக்கள், தம் புதல்வர்களில் ஒருவர் பெற்ற மகிமையில் இறும்பூதெய்துவர் என்பதற்கையமில்லை. "ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக்கேட்ட தாய்", என்ற வள்ளுவர் வாசகத்துக்கமைய தாயகத்தின் பெருமைக்குக் காரணமான இவரை நாம் பாராட்டாது இருக்க முடியுமா? றோமாபுரியில் அத்தனேயே றோமானோ (Athaeneo Romano) குருத்துவ பல்கலைக்கழகத்தில் இறையியல் கலாநிதிப்பட்டம் பெற்றபின் இவருக்கு மேற்படி நியமனம் வழங்கப்பட்டுள்ளது. வத்திக்கான் பேராயத்தில் சிங்கப்பூர், மலேஷியா, புருணை, இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் உள்ள மறை மாவட்டங்களுக்குப் பொறுப்பாகவும், ஆசிய ஆயர் பேரவைக்கான வத்திக்கான் பேராயத்தின் உதவியாளராகவும், அருட்திரு கலாநிதி J. கமிலஸ் நிமலன் தற்போது பணியாற்றி வருகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைபணியில் காவலூரின் கன்னிகா இரத்தினங்கள்

| பெயரும் துறவற சபையும் | பங்கின் ஆலயம் | மறைவு |
|---|---|---|
| **திருக்குடும்ப கன்னியர் சபை** | | |
| 1. அருட்செல்வி மரிஸ்ரெல்லா | புனித மரியாள் ஆலயம் | காலமானார் |
| 2. அருட்செல்வி பெர்ணதேத் | புனித மரியாள் ஆலயம் | காலமானார் |
| 3. அருட்செல்வி ஏஞ்சல்மோர் | புனித மரியாள் ஆலயம் | காலமானார் |
| 4. அருட்செல்வி பேக்மன்ஸ் | புனித மரியாள் ஆலயம் | காலமானார் |
| 5. அருட்செல்வி ஓடில் | புனித மரியாள் ஆலயம் | காலமானார் |
| 6. அருட்செல்வி மாசில்லா | புனித மரியாள் ஆலயம் | |
| 7. அருட்செல்வி செரிபின் | புனித யாகப்பர் ஆலயம் | |
| 8. அருட்செல்வி வலன்ரைன் | புனித யாகப்பர் ஆலயம் | |
| 9. அருட்செல்வி பெனிக்னா | புனித யாகப்பர் ஆலயம் | |
| 10. அருட்செல்வி தேக்கிளா | புனித யாகப்பர் ஆலயம் | |
| 11. அருட்செல்வி ஹெலன்மேரி | புனித யாகப்பர் ஆலயம் | |
| 12. அருட்செல்வி டொறத்தி | புனித யாகப்பர் ஆலயம் | |
| 13. அருட்செல்வி எவறெஸ்ரா | புனித சூசையப்பர் ஆலயம் | |
| 14. அருட்செல்வி மரிஸ்ரெல்லா | புனித மரியாள் ஆலயம் | |
| 15. அருட்செல்வி கலிஸ்ரா | புனித சூசையப்பர் ஆலயம் | |
| 16. அருட்செல்வி கிறிஸ்ரா | புனித யாகப்பர் ஆலயம் | |
| **நல்லாயன் கன்னியர் சபை** | | |
| 1. அருட்செல்வி மொணிக்கா | புனித மரியாள் ஆலயம் | |
| 2. அருட்செல்வி பெலிசிற்றா | புனித சூசையப்பர் ஆலயம் | |
| 3. அருட்செல்வி கமலா சிறீநாதன் | புனித அந்தோனியார் ஆலயம் | |
| 4. அருட்செல்வி பத்மினி | புனித சூசையப்பர் ஆலயம் | |
| **Contemplative Carmel Mattakuliya** | | |
| 1. Rev. Sr. of the Holy Face | St. Marys Church | |
| **Apostolic Carmel (Jaffna)** | | |
| 1. Rev. Sr. Della Rose | St. Marys Church | |
| **Benedictines Nuns** | | |
| **The Society of Grace and Compassion** | | |
| 1. Rev. Sr. Marina Manuel | St. Marys Church | |
| 2. Rev. Sr. Mary Concy Mariampillai | St. Marys Church | |
| 3. Rev. Sr. Dulcy Singarayer | St. Marys Church | |
| **திருச்சிலுவைக் கன்னியர் சபை** | | |
| 1. அருட்செல்வி றினா இராசையா | புனித சூசையப்பர் ஆலயம் | |
| 2. அருட்செல்வி இயேசுமலர் சவிரிமுத்து | புனித சூசையப்பர் ஆலயம் | |
| **அன்புக் கன்னியர் சபை** | | |
| 1. அருட்செல்வி நயோமியா | புனித மரியாள் ஆலயம் | |
| **The Society of the Messenger of Jesus** | | |
| 1. Rev Sr. Maristella Santhiapillai | St. Marys Church | |
| 2. Rev. Sr. Margret Anthonipillai | St. Marys Church | |
| 3. Rev. Sr. Jeya Anthonipillai | St. Marys Church | |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரலாற்றுப் பாதையில்.............

தொகுப்பு – வரலாற்றுப் பிரியன்

1614ல் – போர்த்துக்கேயர் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றியபின் திருமறைவித்து தீவகத்தில் ஊன்றப்பட்டது. காவலூரில் மறைபரப்பிய பேதுருதே பெற்றங்கோர் அடிகளார் காவலூர்த் முறைமுகத்துக் கணித்தாய் ஆலயம் ஒன்றை அமைக்கவும் பிரான்சிஸ்கன் மிஷனரிமாரின் குருமடம் ஒன்றைக் கட்டவும் அடிக்கல் நாட்டினார். ஆலயமும், குருமடமும் பத்து ஆண்டுகளில் நிறைவு பெற்றன. காவலூரில் முதன் முதலில் எழுந்த ஆலயம் திருமுழுக்கு அருளப்பர் ஆலயமே.

1658 - 1687 வரை ஒல்லாந்தரின் ஒடுக்கு முறை வேதகலாபனை காரணமாக காவலூரில ஆலயங்கள் தகர்க்கப்பட்டன.

1687க்குப்பின் திருமறை மீண்டும் புத்துயிர் பெறத் தொடங்கிற்று.

1780 களில் கோவைக் குரவரான வண. லியோனாடோ றிபெயிறோ அடிகளாரால் புனித மரியாள் ஆலயம் அமைக்கப்பட்டது. நூறு ஆண்டுகளுக்குப்பின் அச்சிற்றாலயம் இடிக்கப்பட்டு 1888 ம் ஆண்டு புதிய ஆலயக் கட்டுமானப் பணி ஆரம்பமாகியது.

1815 ம் ஆண்டு கோவைக் குரவரான வண. டல்காடோ அடிகளார் புனித யாகப்பர் ஆலயத்துக்கு அடிக்கல் நாட்டினார். அவ்ஆலயம் 1911 ம் ஆண்டு முற்றுப் பெற்றது.

1820ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இதற்குமுன் இவ்விடத்தில் புனித தோமையார் ஆலயம் இருந்தது என்பது வரலாறு.

1842ம் ஆண்டு முதல் கோவைக் குருமாரும், அவர்களைத் தொடர்ந்து இயேசு சபைக் குருமாரும் தீவுப் பகுதியில் திருமறைப் பணியாற்றி வந்தனர்.

1849 முதல் 1853 வரை பெத்தக்கினி ஆண்டகையின் பரிபாலனக் காலத்தில் தீவகத்தில் மதுரை மறைவட்டத்தைச் சேர்ந்த இயேசு சபைக் குருமாரே தொடர்ந்து பணியாற்றினர் எனத் தெரிய வருகின்றது.

1850 ம் ஆண்டு முதல் அமலமரித் தியாகிகள்சபைக் குருமார் திருப்பணியாற்றத் தொடங்கினர்.

1857 ல் பிரிவினைக் கிறிஸ்தவர்களைத் திருச்சபையில் இணைப்பதை நோக்காகக் கொண்டு புதுப்பித்தல் மகா ஞானவொடுக்கம் காவலூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. சேமேரியா ஆண்டகை தலைமையில் அமலமரித் தியாகிகள் சபையினால் இது ஏற்பாடு செய்யப்பட்டது.

1872 ல் புனித அந்தோனியார் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது.

1896ம் ஆண்டு கல்விப்பணிக்காகப் புனித சூசையப்பர்சபைத் துறவிகள் காவலூருக்கு அழைத்துவரப்பட்டனர்.

1898ல் திருக்குடும்பக் கன்னியர் சபையினர் முதன் முதலில் காவலூரில் தம் பணிகளை ஆரம்பித்தனர்.

1900ம் ஆண்டு காவலூரில் வாந்திபேதி கொள்ளைநோய் பரவியது. ஆயரின் பணிப்பின்பேரில் புனித அந்தோனியாரின் திருச்சுரூபப் பவனி இடம்பெறவே கொள்ளைநோய் அற்புதமாய் அகன்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1907ம் ஆண்டு காவலூரின் முதற் குரவராக வண S. J. ஸ்ரனில்லாஸ் அடிகளார் குருத்துவ அபிஷேகம் செய்யப்பட்டார்.

1920ம் ஆண்டு ஊர்காவற்றுறை மத்தியைச் சேர்ந்த கிறிஸ்தவர்கள் தமக்கெனப் புனித சூசையப்பர் ஆலயத்தைத் தாபித்தனர்.

1921ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலய நூற்றாண்டு விழா. காவலூரில் முதன் முதலில் குருத்துவ அபிஷேகம் நடைபெற்றது. வண. L. J. அகுஸ்தீன் அடிகளார் அன்று குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டார்.

1930ம் ஆண்டு வண. கில்லறி அடிகளாரின் காலத்தில் காவலூர் அரசினர் மருத்துவமனையில் பணிபுரிய முதன் முதலில் திருச்சிலுவைக் கன்னியர்கள் வருகை தந்தனர்.

27
19~~31~~ம் ஆண்டு வரலாற்று நாயகனாம் மகாத்மா காந்தியடிகளும், ஜஹவர்லால் நேருவும் காவலூக்கு வருகை தந்து மகத்தான வரேவற்பு அளிக்கப்பட்டது.

1932ம் ஆண்டு புனித அந்தோனியார் பரமபதமடைந்த 700வது ஆண்டு விழா காவலூரில் கொண்டாடப்பட்டது.

1938ம் ஆண்டு கரம்பொன் தனிப்பங்காகப் பிரிக்கப்பட்டது.

1944ம் ஆண்டு காவலூர் புனித மரியாள்ஆலயம் அபிஷேகம் செய்யப்பட்டது.

1970ம் ஆண்டு புனித அந்தோனியார் ஆலய நூற்று ஐம்பதாவது ஆண்டு விழா கொண்டாடப்பட்டது.

1981ல் காவலூரின் தவப் புதல்வன் வண. தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் புதிதாக உருவாக்கப்பட்ட மன்னார் மறை மாநிலத்தின் முதல் ஆயராக நியமனம் பெற்று மடுத்திருப்பதியில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டார்.

1983ல் புனித மரியாள் ஆலயத்தின் மைந்தன் அருட்திரு J. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அடிகளார் திருமலை – மட்டுநகர் ஆயராக நியமனம் பெற்று றோமாபுரியில் ஆயராக அபிஷேகம் செய்யப்பட்டுப் பதவி ஏற்றார்.

1990 ஆவணி 22ல் இராணுவ நடவடிக்கை காரணமாக காவலூர் அல்லோலகல்லோலப்பட்டது. மக்கள் இடம்பெயர்ந்து சுருவில், நாரந்தனை, சின்னமடு, சாட்டி, வேலணை முதலாம் இடங்களில் அகதிகளாய்த் தஞ்சம் புகுந்த மறக்க முடியாத நாளாகும்.

1990 புரட்டாசி 28ல் மண்டைதீவிலிருந்து இராணுவம் மீண்டும் காவலூருக்கு வந்து நிரந்தரமாக முகாம் அமைத்தது. காவலூர், கரம்பொன் மக்கள் நிரந்தரமாகவே அகதிகள் ஆக்கப்பட்டனர். புலம்பெயர்ந்து தற்காலிக வதிவிடங்களிலும் அகதி முகாங்களிலும் அடைக்கலம் புகுந்தனர்.

1991 சித்திரையில் 1990ல் இடம்பெயர்ந்து தஞ்சம் புகுந்திருந்த இடங்களையே விட்டுவிட்டு அபயமளித்த மக்களுடன் சேர்ந்து லைடன்தீவு, புங்குடுதீவு, மண்டைதீவு மக்கள் அனைவரும் யாழ்குடா நாட்டுக்குப் புலம் பெயர்ந்தனர். இன்றுவரை இவர்கள் அனைவரும் வேற்றுமண்ணில் அகதிகளாகவே அல்லற்படுகின்றனர்.

1992 யாழ் ஆயர் வ. தீயோகுப்பிள்ளை ஆண்டகை இளைப்பாற, ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் அவர்கள் யாழ் ஆயராகப் பதவி ஏற்றார்.

1995 (1) புனித அந்தோனியார் ஆலய 175வது ஆண்டு விழா.

(2) புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) புனித சூசையப்பர் ஆலய 75வது ஆண்டு விழா.

புனித சூசையப்பர்ஆலய 75வது ஆண்டுவிழா கனடாவில் 7-5-95ல் கொண்டாடப்பட்டது.

12.8.1995ல் காவலூர் புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழா கொட்டாஞ்சேனை சாந்த லூஷியா பேராலயத்தில் கொண்டாடப்பட்டது.

✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡ ✡

# எழுவைதீவு புனித தோமையார் ஆலயம்

1911ம் ஆண்டு முதல் காவலூர்ப் பங்கின் ஒரு அங்கமாக எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது. 1902ம் ஆண்டிலிருந்து 1911ம் ஆண்டு வரை அது நெடுந்தீவுப் பங்கின் பரிபாலனத்துக்கு உட்பட்டிருந்தது. எழுவைதீவு புனித தோமையார் ஆலயம் வண. சந்திரசேகரர் சுவாமிகளின் காலத்துக்கு முற்பட்டதாகவே தோன்றுகின்றது. கடற்தொழிலாளரைப் பிரதான சமூகத்தினராகக் கொண்ட அவ்ஆலயத்தின் மூதாதையர்கள் மாதகல், மண்டைதீவு தொடர்புகளைக் கொண்டவர்களாகக் காணப்படுகின்றார்கள். இப்பொழுது சுமார் நூறு குடும்பங்கள்வரை இங்கு வாழுகிறார்கள். பக்தி ஒழுக்கங்களில் சிறந்து விளங்கும் ஒரு சமுதாயம் அது. இவ்ஆலயம் பற்றிய பூர்வீகம் தெரியாதிருக்கின்றது. காவலூர்ப் பங்குத் தந்தையர்கள் காலத்துக்குக் காலம் இவ்வாலயப் புனரமைப்புக்கும் திருத்தங்களுக்கும் உதவி வந்துள்ளனர். வண. S.F. கிருபானந்தன் அடிகளாரின் காலத்தில் (1985 - 1991) புதிய குருமனை ஒன்று அமைக்கப்பட்டது. 1995ல் ஆலயப் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1993ம் ஆண்டு முதல் வண. S. பிரான்சிஸ் இயூஜீன் அடிகளார் தீவகப் பங்குத் தந்தையாக எழுவைதீவிலிருந்து பணியாற்றுகின்றார். நெருக்கடிமிக்க இக்காலத்தில் பிரயாணக் கஷ்டங்கள் மற்றும் அசௌகரியங்கள் மத்தியிலும் மனித நேயப் பணிகளுடன் ஆன்மீகப் பணிகளையும் ஆற்றிச் சவால்களுக்கு முகங்கொடுத்து துணிவுடன் உழைக்கும் தீவகப் பங்குத் தந்தையின் சேவை பாராட்டுக்குரியேத. அனலைதீவு வேளாங்கண்ணி மாதா ஆலயமும், புங்குடுதீவு உட்பட லைடன்தீவு ஆலயங்கள் யாவும் அவரது பராமரிப்புக்குட்பட்டவை. அவ்வப்போது காவலூர், கரம்பொன், நாரந்தனை ஆலயங்களையும் தரிசித்து அப்பகுதி வாழ் கத்தோலிக்கரின் ஆன்மீக அலுவல்களில் உதவி வருகின்றார். வருடாவருடம் மார்கழி மாதம் 21ந் தேதி புனித தோமையார் ஆலயவிழா நடைபெறும்.

எழுவைதீவில் றோ. க. தமிழ்ப் பாடசாலை ஒன்று கல்விப் பணிக்குக் கைகொடுத்து சமயச் சூழலில் கத்தோலிக்க மாணவர்கள் கல்வி கற்பதற்குப் பேருதவியாக இருந்து வருகின்றது.

புனித மரியாள் ஆலய நூற்றாண்டு விழாவுக்கும் மலர் வெளியீட்டுக்கும் தோன்றாத் துணையாக ஆக்கமும் ஊக்கமும் அளித்த வண. இயூஜின் அடிகளாருக்கு எனது இதயங்கனிந்த நன்றிகள்.

– மலராசிரியர் –



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊருண்டிக் கோட்டையும் சிற்றாலயமும்

இன்று லைடன் தீவின் சிறப்பான துறைமுகப் பட்டினமாகப் போற்றப்படும் ஊர்காவற்றுறை பண்டைய காலத்தில் அதாவது போர்த்துக்கேயர் வருவதற்கு முற்பட்ட காலத்தில் மனித சஞ்சாரமற்ற காட்டுப்பிரதேசம் என்றே கருதப்படுகிறது. அக்காலத்தில் கரம்பொன் மேற்கையடுத்த கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்துள்ள இடமே பிரசித்திபெற்ற துறைமுகமென்றும், ஊருண்டிக் கிராமமே குடியிருப்புக்கள் மிகுந்த பிரதேசமாய் இருந்தது எனவும் சரித்திரவாயிலாக அறிய முடிகிறது. அதனை நிரூபிக்க கடலிலும், கரையிலும் அமைந்துள்ள கோட்டைகள் தக்க சான்றாக விளங்குகின்றன.

ஹமன்ஹீல் என்றழைக்கப்படும் கடற்கோட்டை ஒல்லாந்தரால் கட்டப்பட்ட கோட்டை என்றே இக்கால வரலாற்று நூல்களிலும் கட்டுரைகளிலும் குறிப்பிடப்படுகின்றது. ஆனால் அது முதன் முதலில் போர்த்துக்கேயராலேயே கட்டப்பட்டதாகும். அந்தோனியோ அமிறால் டெமென்சிஸ் என்ற போர்த்துக்கேய தளபதியாலே அது கட்டப்பட்டதென்பதற்கு ஆதாரங்கள் உள.

1658ல் ஒல்லாந்தர் இக்கோட்டையைக் கைப்பற்றிய பின், அதைத் திருத்தி அமைத்தார்கள். அக்கோட்டையைத் திருத்தி அமைப்பதற்காக டொன் ஸ்ரீவன் பூதத்தம்பி முதலியார் என்பவரை அதற்குப் பொறுப்பாக நியமித்தனர். பூதத்தம்பி கட்டுவித்த கோட்டை எனப் பெயர் வந்தது இதனாலேதான் எனத் தெரியவருகின்றது. ஒல்லாந்தர் இக்கோட்டைக்கு 'ஹமன்ஹீல்' எனப் பெயரிட்டனர். போர்த்துக்கேயர் கடற்கோட்டையைக் கட்டுவதற்கு முன்பே ஊருண்டிக் கோட்டை கட்டப்பட்டதாகத் தெரியவருகிறது. இக்கோட்டையைத் தீர்க்கமாக ஒரு கோட்டை என்று சொல்லுவதற்கில்லை எனவும், பிரபுக்கள் வாழும் மனை அல்லது காசில் (Castle) எனப்படுவதே தகுதி எனவும் சில வரலாற்று ஆய்வாளர் கருத்து வெளியிட்டுள்ளனர். இக்கோட்டை "ஈறி" (Fort Eyrie) என அழைக்கப்பட்டது. மேலும் இக் கோட்டை குற்றவாளிகளைச் சித்திரவதைக்கு உட்படுத்தும் ஒரு இடமாகப் பாவிக்கப்பட்டமையால் போர்த்துக்கேயர் இதனை குரங்குக் கோட்டை (Fort of the Ape) எனவும் அழைத்தார்கள்.

பிரபுக்கள் தங்கிவாழ இக்கோட்டை அமைக்கப்பட்ட காரணத்தால் இங்கு ஒரு வழிபாட்டிடமும் அமைத்திருந்தமைக்கு ஆதாரங்கள் காணப்படுகின்றன. இக்கோட்டையில் போத்துக்கேயர் புனித மரியாளின் திருச்சுரூபத்தை வைத்து வழிபட்டமைக்கு அடையாளமாக ஒரு வில் வடிவமான மாதாகுழி சிதைவுற்ற நிலையில் இன்றும் காணப்படுகின்றது. கோட்டையில் அமைந்திருந்த ஆலயடோமின் ஒரு பகுதியையும் காண முடியும். இங்கு வைத்து வழிபாடு செய்துவந்த மாதா சுரூபம் கோட்டை ஒல்லாந்தரால் தகர்க்கப்பட்ட வேளையில் பிரான்ஸிஸ்கன் சபைக் குருமாரினால் இரகசியமாகக் காப்பாற்றப்பட்டிருக்கலாம்.

**- காவலூர்க் கவிஞர் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நன்றி

எமது வேண்டுகோளுக்கு இசைந்து மனமுவந்து புனித மரியாள் ஆலய நூற்றாண்டுச் சிறப்பு மலருக்கு நிதி உதவிசெய்த அனைவருக்கும், நூற்றாண்டு விழாவை கொட்டாஞ்சேனை சாந்தலூஷியா பேராலயத்தில் கொண்டாட உதவியவர்களுக்கும் புனித மரியாள் ஆலய மக்கள் சார்பாக நன்றி தெரிவிக்கின்றோம்.

நிதி உதவியவர்கள்

| | | |
|---|---|---|
| வண. J. கமிலஸ்நிமலன் அடிகள் | | 3,000.00 |
| திரு. N. மரியநாயகம் குடும்பத்தினர் | | 3,000.00 |
| திரு. ஜோண் அமிர்தநாயகம் | | 1,000.00 |
| திரு. சூசைப்பிள்ளை யோசெவ் | - பிரான்ஸ் } | 6,000.00 |
| திரு. சூசைப்பிள்ளை றென்ரன் | - பிரான்ஸ் } | |
| திரு. ஸ்ரான்லி யோகராஜா | - பிரான்ஸ் } | |
| திரு. யோ. றேமண்ட் | - பிரான்ஸ் ] | 10,000 |
| திரு. பேதுருப்பிள்ளை குயின்ரஸ் | - பிரான்ஸ் ] | |
| திரு. வினோதன் பஸ்ரியாம்பிள்ளை | - பிரான்ஸ் ] | |
| திருமதி லாலினி கிறிஸ்ரி சவிரிமுத்து | - பிரான்ஸ் ] | |
| திரு. M. பிலோமின் | | 500.00 |
| திரு. S. M. யோசெவ் | | 500.00 |
| திருமதி மக்டலின் சவிரிமுத்து | | 500.00 |
| திருமதி V. ஜோண்பிள்ளை | | 500.00 |

தோன்றாத்துணையாயிருந்து உதவிய திருமலை மட்டுநகர் ஆயர் ஜே. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களுக்கும் எமது பணிவான கரங்குவிப்பு.

மலராசிரியர்

### 1990ம் ஆண்டின் விபரப்படி கத்தோலிக்கர் சனத்தொகை

| | | |
|---|---|---|
| ஊர்காவற்றுறை | - | 5,600 |
| கரம்பொன் | - | 2,809 |
| நாரந்தனை<br>புங்குடுதீவு } | - | 6,630 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிழை திருத்தம்

| பக்கம் | பிழை | | திருத்தம் |
|---|---|---|---|
| 9 | காலநிதி | — | கலாநிதி |
| 15 | நல்லெதாரு | — | நல்லதொரு |
| 19 | Rest Houe | — | Rest House |
| 23 | போராலயத்தில் | — | பேராலயத்தில் |

17 *1953 ஆடி - 1960 மாசி வரை வண.* S A. *ஞானப்பிரகாசம் என்பது தவறு.*

*1953 ஆடி — 1960 மாசி வரை வண.* V. R. *தாசீசியஸ்* O.M.I. *எனத்திருத்தி வாசிக்கவும்.*

*1960 பங்குனி - 1963 மார்கழி வரை வண.* S. A. *ஞானப்பிரகாசம் என்பதே சரியானது. (இது விடுபட்டுவிட்டது).*

## வருந்துகிறோம்

பக்கம் 47ல் *இறைபணியில் காவலூரின் கன்னிகா இரத்தினங்கள் என்ற தலைப்பில் —*

*அருட்செல்வி ஓடில் காலமானார் என தவறுதலாக இடம் பெற்றமைக்கு வருந்துகின்றோம்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org